சைவநெறிக்கூடம்

தமிழா தமிழில் வழிபடு

# அருள் ஞானமிகு உச்சிமுருகன் கோயில்

# Arul Gnanamighu Uchi Murugan Koyil



Bridge Street, High Wycombe, Bucks HP11 2EL

01494637799 / 07841 522514

# கூட்டு வழிபாட்டு பாமாலை

1 of 2



சைவநெறிக்கூடம்

தமிழா தமிழில் வழிபடு

# அருள் ஞானமிகு உச்சிமுருகன் கோயில்
# Arul Gnanamighu Uchi Murugan Koyil



Bridge Street, High Wycombe, Bucks HP11 2EL
01494637799 / 07841 522514

# கூட்டு வழிபாட்டு பாமாலை

## 1 of 2

நன்கொடை – £10



## பொருள் அடக்கம்


| | | Page |
|---|---|---|
| விநாயகர் வழிபாடு | 1 – 9 | 1 - 2 |
| விநாயகர் அகவல் | 72 வரிகள் | 2 - 4 |
| தேவாரம் | 1 - 25 | 4 - 9 |
| திருநீலகண்ட பதிகம் | 1 – 10 | 9 - 10 |
| வைரவக் கடவுள் | 1- 14 | 10 - 12 |
| மூல மந்திரமும் – விளக்கமும் | | 12 - 14 |
| திருமுருகன் திருப்பள்ளி எழுச்சி | 1 - 10 | 14 - 17 |
| உச்சி முருகன் காவியப் பாடல்கள் | 1 – 20 | 17 - 22 |
| முருகன் திருமுறைகள் | 1 – 76 | 22 - 38 |
| திருப்பரங்குன்றம் | 1 – 15 | 38 - 40 |
| திருச்சீரலைவாய் | 1 – 10 | 40 - 42 |
| திருவாவினன்குடி | 1 – 10 | 42 - 43 |
| திருவேரகம் | 1 – 3 | 44 |
| குன்றுதோறாடல் | 1 – 6 | 44 - 45 |
| பழமுதிர்சோலை | 1 – 54 | 45 - 53 |
| வேலுண்டு வினையில்லை | | 54 - 55 |
| கந்த சட்டி கவசம் | | 55 - 63 |
| ஓம் சரவணபவ ஆறு எழுத்து மந்திரம் | | 63 - 64 |
| திருமுருகாற்றுப்படை - நேரிசை வெண்பாக்கள் | 1-10 | 64 - 65 |
| கந்த குரு கவசம் | 445 வரிகள் | 66 - 80 |
| கந்தர் அலங்காரம் | 1 – 107 | 81 - 95 |
| கந்தரந்தாதி | 100 வரிகள் | 95 - 108 |
| கந்தர் சரணப்பத்து | 1 - 10 | 109 - 111 |
| திருமுருகாற்றுப்படை | 1 – 10 | 111 - 113 |

| | | |
|---|---|---|
| கந்தர் அநுபூதி | 1 – 51 | 113 - 119 |
| வேல் மாறல் | 1 – 65 | 120 - 127 |
| வேல் விருத்தம் | 1 – 10 | 128 - 132 |
| மயில் விருத்தம் | 1 – 11 | 133 - 138 |
| உச்சி முருகன் ஊஞ்சல் பாடல் | I 1 - 4 | 139 - 142 |
| உச்சி முருகன் ஊஞ்சல் பாடல் | II 1 - 10 | 142 - 146 |
| ஊஞ்சல் பாட்டுகள் | III | 147 |
| ஊஞ்சல் பாட்டுகள் | IV 1 - 12 | 148 - 153 |
| திருவாசகம் | | 153 - 156 |
| திருவிசைப்பா | 1 - 5 | 157 |
| திருப்பல்லாண்டு | 1 - 5 | 158 |
| திருப்புராணம் | 1 - 5 | 159 |
| திருப்புகழ் | 1 - 16 | 160 - 164 |
| வாழ்த்து | 1 - 2 | 164 |
| வாழ்த்தொலி | | 165 |
| விண்மீன் | | 166 |
| தமிழ் மாதம் எண் வடிவங்கள் | | 167 |
| நாட்டை காக்க | | 168 - 169 |

## விநாயகர் வழிபாடு

1. ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தினிளம் பிறை போலும் எயிற்றனை
நந்திமகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

2. வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

3. பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாளும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா (ஔவையார்)

4. விநாயகனே வெள;வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

5. அல்லல்போம் வல்வினைபோம் அன்னைவயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம்போம்
நல்ல குணமதிக மாமருணைக் கோபுரத்தில் பேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்

6. திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொல்
பெருவாக்கும் பீடும்பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தம் கை .

7. கயானனம் பூதகணாதி சேவிதம்
கபித்த யம்பூ பலசார பசிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கயம்

8. களியானைக் கன்றைக் கணபதியைச் செம்பொன்
ஒளியானைப் பாரோர்க் குதவும் அளியானைக்
கண்ணுவதும் கைத்தலங்கள் கூப்புவதும் மற்றவன்தாள்
நண்ணுவதும் நல்லார் கடன்.

9. விநாயகனே வெள;வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாம் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து .

**விநாயகர் அகவல்**

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்னமருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்
திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்
கருவிக ளொடுங்கும் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்(து) அங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமும் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடல்சக் கரத்தின் உறுப்பையும் காட்டிச்
சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண் முகமாக இனிதெனக் கருளிப்

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி யினிதெனக் கருளி
என்னை யறிவித்(து) எனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே யென்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டுக்(கு) ஒன்றிடம் என்ன

அருள்தரும் ஆனந்தத்(து) அழுத்தியென் செவியில்

எல்லை யில்லா ஆனந் தம்அளித்(து)
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்(கு) அணுவாய் அப்பாலுக்(கு) அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே!

ஔவையார் அருளிச் செய்த விநாயகர் அகவல் முற்றிற்று.

**தேவாரம்**

1. நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவு
மளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகட லோரம் நித்திலங் கொழிக்குங்
கோண மாமலை யமர்ந்தாரே.

(திருஞானசம்மந்தர்)

2. பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
யன்னே யுன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

(சுந்தரமூர்த்தி நாயனார்)

3. நத்தார்படை ஞானன்பசுவேறிந் தனைக்கவிழ்வாய்
மத்தம்மதயானையுரி போர்த்தமணவாளன்
பத்தாகிய தொண்டர்தொழுபாலாவியின் கரைமேல்
செத்தாரெலும் பணிவான்திருக்கேதீச்சரத்தானே
(சுந்தரமூர்த்தி நாயனார்)

4. தோடுடைய செவியன் விடை ஏறியோர் தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடிபூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் உனை நாட் பணிந்தேத்தவருள் செய்த
பீடுடைய பிரமாபுரமேவிய பெம்மானிவனன்றே
(திருஞானசம்மந்தர்)

5. வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெவு நம்பாவெனநின்று
பஹாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே
(திருஞானசம்மந்தர்)

6. பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே
(திருஞானசம்மந்தர்)

7. வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தன் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனி
பாம்பிரண்டும் முடனே ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியா
ரவர்க்கு மிகவே.
(திருஞானசம்மந்தர்)

8. துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழ
ஆரிடமும் பலதேர்வர்
அணிவளர் கோலம் எலாம்செய்து பாச்சில்
ஆச்சிரா மத்துஉறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வ தோஇவர் மாண்பே.

9. காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே

(திருஞானசம்மந்தர்)

10. மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அற்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே.

(திருஞானசம்மந்தர்)

11. கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவ னெப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேனதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே

(திருநாவுக்கரசர்)

12. சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

(திருநாவுக்கரசர்)

13. சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்த கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே.
(திருநாவுக்கரசர்)

14. மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேணிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை யிணையடி நீழலே.
(திருநாவுக்கரசர்)

15. நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்வாடி வருந்தாமே கோளிலி எம்பெருமான்
குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன் ஆளிலை எம்பெருமான்
அவை அட்டித் தரப்பணியே.
(சுந்தரமூர்த்தி நாயனார்)

16. நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
அன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மை ஆன
சங்கரன் நல் சங்க வெண் குழையோர் காதில்
கோமாற்கே நாம் என்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே
(திருநாவுக்கரசர்)

17. பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்மை
வைத்தாய்பெண்ணைத் தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாஉனக் காளாய்இனி அல்லேனென லாமே
(சுந்தரமூர்த்தி நாயனார்)

18. குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமின் சிரிப்பும்
பனித்த கடையும் பவளம் போல் மேனியும் பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே.
(திருஞானசம்மந்தர்)

19. மாதர்பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடி
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவார் அவர் பின்புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயாறடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடும் களிறு வருவனக் கண்டேன்
கண்டேன் னவர்திருப்பாதங் கண்டறியாதன கண்டேன்.
(திருநாவுக்கரசர்)

20. அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும் நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.
(திருஞானசம்மந்தர்)

21. குற்றம்நீ குணங்கள்நீ கூடல் ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடந்திலங்கு சோதிநீ
குற்றறூற் கருத்தும்நீ யருத்தமின்ப மென்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் உரைப்பதென்மு கம்மனே

22. தம்மையே புகழ் திச்சை பேசினும் சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே எந்தை புகலூர் பாடுமின் புலவீர்கள்
இம்மையே தரும் சோறும் கூறையும் ஏத்தலாம் இடர்கெடலுமாம்
அம்மையே சிவ லோகமாள்வதற்கு யாது மையுறவில்லையே.

23. மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே.
(திருஞானசம்மந்தர்)

24. காட்டூர்க் கடலே கடம்பூர் மலையே கானப் பேரூராய்
கோட்டூர் கொழுந்தே அழுந்தூர் அரசே கொழுநற் கால்லேறே
பாட்டூர் பலரும் பரவப் படுவாய் பனங்காட் டூரானே
மாட்டூர் அறவா மறவா துன்னைப் பாடப் பணியாயே.
(சுந்தரமூர்த்தி நாயனார்)

25. பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

**திருநீலகண்ட பதிகம் ஸ்ரீ திருஞானசம்பந்தர் அருளியது**

1. அவ்வினைக் கிவ்வினையாம் என்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றோ
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்

2. காவினை இட்டும் குளம்பல தொட்டும் கனி மனத்தால்
ஏவினையால் எயில் மூன்றெரித்தீர் என்று இருபொழுதும்
பூவினைக்கொய்து மலரடி போற்றுதும்நாம் அடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்

3. முலைத்தட மூழ்கிய போகங்களும் மற்றெவையும் எல்லாம்
விலைத்தலை ஆவணம் கொண்டெமை ஆண்டவிரிசடையீர்
இலைத்தலைச் சூலமும் தண்டும் மழுவும் இவை உடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்

4. விண்ணுலகாள்கின்ற விச்சாதரர்களும் வேதியரும்
புண்ணியர் என்று இருபோதும் தொழப்படும் புண்ணியரே
கண் இமையாதன மூன்றுடையீர் உம் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்

5. மற்றுஇணை இல்லா மலை திரண்டன்ன திண் தோளுடையீர்
கிற்றெமை ஆட்கொண்டு கேளாதொழிவதும் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்து உம் திருவடியே அடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்

6 மறக்கு மனத்தினை மாற்றி எம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக்கீழ் பிழையாத வண்ணம்
பறித்த மலர் கொடுவந்துமை ஏத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப் பெறா திருநீலகண்டம்

7 கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்தும் கழலடிக்கே
உருகிமலர் கொடுவந்துமை யேத்துதும் நாம் அடியோம்
செருவில் அரக்கனைச் சீரில் அடர்த்து அருள் செய்தவரே
திருவிலித் தீயினை தீண்டப்பெறா திருநீலகண்டம்

8 நாற்றமலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்றமுடைய அடியும் முடியும் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாம் அடியோம்
சீற்றமதாம் வினை தீண்டப்பெறா திருநீலகண்டம்

9 சாக்கியப் பட்டும் சமண் உருவாகி உடை ஒழிந்தும்
பாக்கியமின்றி இருதலைப் போகமும் பற்றும் விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடையீர் அடி போற்றுகின்றோம்
தீக்குழி தீவினை தீண்டப்பெறா திருநீலகண்டம்

10 பிறந்த பிறவியில் பேணி எம் செல்வம் கழல் அடைவான்
இறந்த பிறவி உண்டாகில் இமையவர்கோன் அடிக்கண்
திறம்பயில் ஞானசம்பந்தன் செந்தமிழ் பத்தும் வல்லார்
நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே

**வைரவக் கடவுள்**

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம் பாடல் 1

வெஞ்சினப் பரியழன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுகக் கடவுள்பொற் கழல்க ளேத்துவாம் பாடல் 2

விரித்த பல்கதிர்கொள் சூலம் வெடிபடு தமருகம்கை
தரித்ததோர் கோலகால பைரவனாகி வேழம் உரித்து உமை
அஞ்சக் கண்டு ஒண்திருமேனி வாய் விள்ளச் சிரித்தருள் செய்தார்
சேறைச் செந்நெறிச் செல்வனாரே திருச்சேறை ஸ்தலத்தில் பாடல் 3

தர்மத்தின் பாலமாகத் திகழ்பவரும், அநியாய பாதையை அழிப்பவரும், கர்ம வினையின் பிணைப்பிலிருந்து விடுவிப்பவரும், நன்மைகளை வாரி வழங்குபவரும், தங்க நிறப் பாம்பை அணிகலனாகச் சூடியிருப்பவரும், காசி மாநகரின் தலைவருமான காலபைரவரை நான் வணங்குகிறேன்.

பாடல் 4

அழகிய ரத்தினங்கள் பதித்த பாதுகைகளை
அணிந்த பாதங்களைக் கொண்டவரும்,
எப்பொழுதும் ஒப்பற்ற தெய்வமாய் இருப்பவரும்,
மாசு மறுவற்றவரும், மரண பயத்தை அழிப்பவரும்,
பயங்கரமான கோரைப்பற்களை உடையவரும்,
காசி மாநகரின் தலைவருமான காலபைரவரை
நான் வணங்குகிறேன். பாடல் 5

தனம் தரும் வயிரவன் தளிரடி பணிந்திடில்
தளர்வுகள் தீர்ந்து விடும் மனம் திறந்தவன் பதம்
மலரிட்டு வாழ்த்திடில் மகிழ்வுகள் வந்துவிடும்
சினம் தவிர்த்தன்னையின் சின்மய புன்னகை
சிந்தையில் ஏற்றவனே தனக்கில்லை ஈடு யாருமே
என்பான் தனமழை பெய்திடுவான் பாடல் 6

வாழ்வினில் வளம்தர வையகம் நடந்தான் வாரியே
வளங்கிடுவான் தாழ்வுகள் தீர்ந்திட தளர்வுகள்
மறைந்திட தானென வந்திடுவான் காழ்ப்புகள் தீர்த்தான்
காணகம் நின்றான் காவலாய் வந்திடுவான் தனக்கில்லை
ஈடு யாருமே என்பான் தனமழை பெய்திடுவான் பாடல் 7

முழு நிலவதனில் முறையொடு பூஜைகள் முடித்திட
அருளிடுவான் உழுதவன் விதைப்பான் உடமைகள்
காப்பான் உயர்வுற செய்திடுவான் முழு மலர் தாமரை
மாலையை ஜெபித்து முடியினில் சூடிடுவான் தனக்கில்லை
ஈடு யாருமே என்பான் தனமழை பெய்திடுவான் பாடல் 8

நான்மறை ஓதுவார் நடுவினில் இருப்பான் நான்முகன்
நானென்பான் தேனினில் பழத்தை சேர்த்தவன் ருசிப்பான்
தேவைகள் நிறைத்திடுவான் வான் மழையெனவே வளங்களை
அருள்வான் வாழ்த்திட வாழ்த்திடுவான் தனக்கில்லை
ஈடு யாருமே என்பான் தனமழை பெய்திடுவான் பாடல் 9

பூதங்கள் யாவையும் தனக்குள்ளே வைப்பான் பூரணனன்
நானென்பான் நாதங்கள் ஒலிக்கும் நால்வகை மணிகளை
நாணினில் பூட்டிடுவான் காதங்கள் கடந்து கட்டிடும் மாயம்
யாவையும் போக்கிடுவான் தனக்கில்லை ஈடு யாருமே
என்பான் தனமழை பெய்திடுவான் பாடல் 10

பொழில்களில் மணப்பான் பூஜைகள் ஏற்பான் பொற்குடம் ஏந்திடுவான்
கழல்களில் தண்டை கைகளில் மணியணி கனகனாய் இருந்திடுவான்
நிழல்தரும் கற்பகம் நினைத்திட பொழிந்திடும் நின்மலன் நானென்பான்
தனக்கில்லை ஈடு யாருமே என்பான் தனமழை பெய்திடுவான் பாடல் 11

சதுர்முகன் ஆண்வத்தலையினை கொய்தான் சத்தொடி சித்தானான்
புதரினில் பாம்பை தலியினில் வைத்தான் புண்ணியம் செய் என்றான்
பதரினை குவித்து செம்பினை எரித்தான் பசும்பொண் இடுவென்றான்
தனக்கில்லை ஈடு யாருமே என்பான் தனமழை பெய்திடுவான் பாடல் 12

ஜெய ஜெய வடுக நாதனே சரணம் வந்தருள் செய்திடுவாய்
ஜெய ஜெய சேத்திர பாலனே சரணம் ஜெயங்களை தந்திடுவாய்
ஜெய ஜெய வைரவா ஜெகம் புகழ் தேவா செல்வங்கள் தந்திடுவாய்
தனக்கில்லை ஈடு யாருமே என்பான் தனமழை பெய்திடுவான் பாடல் 13

விரித்த பல்கதிர் கொள் சூலம் வெடிபடு தமருகம் கை தரித்ததோர்
கோல கால பயிரவனாகி வேழம் உரித்து உமை அஞ்சக் கண்டு
ஒண்திருமேனி வாய் விள்ளச் சிரித்தருள்
செய்தார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே. பாடல் 14

திருச்சிற்றம்பலம்

**முருகனின் சக்தி வாய்ந்த மூல மந்திரமும் – விளக்கமும்**

1. முருகனின் சக்தி வாய்ந்த மூல மந்திரம்
பாடல் வரிகளில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள மூல மந்திரம் இதுதான்:

**'அஉம் (ஓம்) சவ்வும் சரவணபவ ஸ்ரீயும் ஹ்ரீயும்**
**கிலியும் க்லெளவும் போற்றி'**

இந்த மந்திரத்தின் ஒவ்வொரு பகுதியும் ஆழ்ந்த ஆன்மிகப் பொருளைக் கொண்டுள்ளன.

## உ. மந்திரத்தின் பொருள் மற்றும் ஆற்றல்

இந்த மந்திரம் பல்வேறு பீஜாட்சரங்களையும், முருகனின் ஷடாட்சர மந்திரத்தையும் இணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

* ஓம்: இது பிரபஞ்சத்தின் ஆதி ஒலி ,ஒளி . படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் குறிக்கும் பிரணவ மந்திரம். எந்த ஒரு மந்திரத்தையும் தொடங்கும் போது 'ஓம்' சேர்ப்பது அதன் ஆற்றலை அதிகரிக்கும்.
* ஸௌம்: இது ஒரு சக்தி பீஜாட்சரம். பொதுவாக, இது ஞானத்தையும், ஆனந்தத்தையும், தெய்வீக ஒளியையும் குறிக்கும்.
* சரவணபவ: இது முருகப்பெருமானின் ஆறெழுத்து மந்திரம். ச (ச - உண்மை), ர (ரச - ஞான ஒளி), வ (வச - தூய்மை), ண (ணம - ஆனந்தம்), ப (பவ - தோற்றம்), வ (வ - முழுமை) என்று பொருள் கொள்ளலாம். இது முருகனின் ஞானத்தையும், வெற்றியையும் அருளும் மந்திரம்.
* ஸ்ரீம்: இது லட்சுமி பீஜாட்சரம். செல்வத்தையும், செழிப்பையும், மங்களத்தையும் அருளும்.
* ஹ்ரீம்: இது பராசக்தி பீஜாட்சரம். ஈர்ப்பு சக்தி, ஞானம், வெற்றி, மற்றும் அனைத்துச் சக்திகளையும் குறிக்கும்.
* க்லீம்: இது காமராஜ் பீஜாட்சரம். விருப்பங்களை ஈர்க்கும் சக்தியையும், கவர்ச்சியையும், மனக்கட்டுப்பாட்டையும் அருளும்.
* போற்றி: இறைவனுக்கு வணக்கம் செலுத்துவதையும், சரணாகதியையும் குறிக்கும்.
* க்லௌம்: இதுவும் ஒரு பீஜாட்சரம். இது ஆற்றலையும், பாதுகாப்பையும், குறிப்பிட்ட செயல்களில் வெற்றியையும் தரும்.

3. மந்திரத்தின் பலன்கள் மற்றும் முக்கியத்துவம்
இந்த மூல மந்திரத்தை உச்சரிப்பதால் கிடைக்கும் பலன்கள்:

* பாபங்கள் அகலும்: 'பாபத்தைப் பொசுக்கிப் பாரெல்லாம் சிறப்புறவே' என்ற வரிக்கு ஏற்ப, இந்த மந்திரம் நம்முடைய கர்மாக்களையும், பாபங்களையும் நீக்கும் வல்லமை கொண்டது.
* மும்மலம் அகலும்: ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் நீக்கி, நம்மைத் தூய்மையாக்கும்.
* முக்தி நிச்சயம்: 'மும்மல மகன்றுவிடும் முக்தி உந்தன் கையிலுண்டாம்' என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. முக்தி என்பது வேறு எங்கோ தேட வேண்டியதில்லை; முருகனின் இந்த மூல மந்திரத்தை உச்சரித்து, அவரை நம் இதயத்தில் இருத்துவதின் மூலம் முக்தி நம் வசமாகும்.
* கால பயம் நீங்கும்: 'மூலமதை ஏத்துவோர்க்குக் கால பயமில்லையடா ∴ காலனை நீ ஜயிக்க கந்தனைப் பற்றிடடா' - மரண பயம் நீங்கும், ஆயுள் பலம் பெருகும். காலனை (எமனை) வெல்லும் ஆற்றலைக் கந்தன் அருள்வார்.
* ஞானம் மற்றும் ஆனந்தம்: முருகனை உள்ளத்தில் இருத்தி, இந்த மந்திரத்தை முழு மனதுடன் ஏத்துவதன் மூலம், ஞானமும், நித்திய ஆனந்தமும் (சதானந்தம்) உங்களை வந்தடையும்.
* உள்ளத்தில் ஒளி: 'சுப்பரமண்ய குருநாதன் தன்னொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே தானிருப்பான்' - முருகன் உங்களது குருவாக, உங்கள் உள்ளத்திலே ஞான ஒளியாகப் பிரகாசிப்பார்.

4. பயிற்சி முறை
* இந்த மூல மந்திரத்தை 'ஓம்' என்பதில் தொடங்கி 'நம:' வரை ஒன்றாகச் சேர்த்திட வேண்டும். பின்னர் 'க்லௌம் ஸௌம்' என்பதை இறுதியாகச் சேர்த்து முழுமையாக உச்சரிக்க வேண்டும்.
* 'ஒன்றாகக் கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி' - மனதை ஒருமுகப்படுத்தி, முருகப்பெருமானை உங்கள் இதயத்தில் தியானித்துக் கொண்டே இந்த மந்திரத்தை உச்சரிக்க வேண்டும்.
* தினமும் நம்பிக்கையுடன் இந்த மந்திரத்தை ஒருமனதோடு உருவேற்றி வர, நீங்கள் தேடும் ஞானமும், முக்தியும் நிச்சயம் கிடைக்கும்.

இந்த மந்திரத்தின் சக்தியை உணர்ந்து, தினந்தோறும் உச்சரிப்பதன் மூலம், முருகப்பெருமானின் பரிபூரண அருளையும், உங்கள் வாழ்வின் உன்னத நிலையையும் அடையலாம்.

நற்பவி நற்பவி! வாழ்க வளமுடன்!

## அருள்மிகு திருமுருகன் திருப்பள்ளி எழுச்சி

காப்பு

விரிசுடர்ப் பரிதியும் கீழ்த்திசை உதித்தான்,
விண்டிடும் மலர்கண்டு ஆர்த்தன வண்டு.
வரிக்குயில் கூவிடக் கூவின சேவல்,
வையகம் புலர்ந்திட அகன்றது திமிரம்.
கரிமுக ஐங்கரன் துணைவனே வேலா!
கார்முகில் மாலவன் மருகனே தேவா!
தரிசனம் தந்தெமக்கு அஞ்சலென் றருளும்,
தமிழ்முருகா, பள்ளி எழுந்தருளாயே! பாடல் – 1

வடிதமிழ் கொண்டுனை வைதாலுஞ் சிந்தை,
மகிழ்ந்தே நுகர்ந்துநல் வரந்தருந் தேவா!
கடிகமழ் கடம்பணி கந்தவேல் முருகா!
கதிர்மணி மரகத மஞ்ஞையின் தலைவா!
மிடியிடர் அணுகிடா வாழ்வெமக் கருளி,
மேதினி காத்திடும் வீரவேற் குமரா!
படிவுயர் குன்றினிற் கோயில்கொண் டுறையும்,
பரம்பொருளே, பள்ளி எழுந்தருளாயே! பாடல் – 2

காத்திடும் கருணைகூர் ஆறிரு விழியும்,
கதிரொளி காலிடும் மூவிரு முகமும்.
ஏத்திடும் இளநகை முறுவலின் பொற்பும்,
இரந்திட வரந்தரும் பன்னிரு கரமும்.
தோற்றிடும் திருவருள் பொலிவுறு கோலம்,
தொழுபவர் தோத்திரம் எடுப்பவர் கண்டாய்.
கூத்துகந் தாடிடும் குழகனின் குமரா,
குருபரனே, பள்ளி எழுந்தருளாயே! பாடல் – 3

அணைத்தெமை அஞ்சலென்று அபயம் அளித்து,
அழிந்திடா ஆசைவெ குளிசிற் றின்பம்.
பிணைத்திடும் பிறவிகள் அறுத்தறி வுறுத்திப்,
பிஞ்ஞகா, உனதிரு விரைகழல் சேர்க்கும்.
மணிக்குங்குமத்தட வடிவேல் முருகா!
மரகதச் சித்திர மஞ்ஞையின் தேவா!
பணிந்துனைத் துதித்திட அறுபடை வீடமர்,
பராபரனே, பள்ளி எழுந்தருளாயே! பாடல் – 4

மருளற மந்திரம் அறைகுநர் ஒருபால்,
மனதினால் மாமறை ஓதுநர் ஒருபால்,
தெருள்மிகத் தோத்திரம் பாடுநர் ஒருபால்,
சிரமதிற் காவடி தொடுப்பவர் ஒருபால்.
அருள்மலர் ஆறிரு விழியொளி காண,
ஆடுவர் கூடிநின்று ஆர்ப்பவர் ஒருபால்.
திரளெனத் திரண்டனர் உனதெழில் காணச்,
சிவசுதனே, பள்ளி எழுந்தருளாயே! பாடல் – 5

கந்தனுன் சேவலும் திருப்புகழ் கூவும்,
கவின்மிகு மயூரமும் திருமறை அகவும்.
சேந்தனுன் கிண்கிணி ஓங்காரம் இசைக்கும்,
தேசொளி வைவேலுன் ஏவலுக் கிரங்கும்.
செந்தா மரையிதழ் சிந்திடும் அழகைச்,
சிந்தையால் மாந்திடத் திரண்டனர் தொண்டர்.
எந்தையாய் ஆதரித்து அபயம் அளிக்கும்,
எழில்வேலவா, பள்ளி எழுந்தருளாயே! பாடல் – 6

அரனிடம் பிரணவம் உரைத்தமை பாடி,
அயனவன் ஆணவம் தீர்த்தமை பாடி.
வரந்தரு அறுமுகத் தத்துவம் பாடி,
வள்ளியைக் கரந்த கதையெலாம் பாடி.
தரம்மிகு தமிழுக்கவ் வைைையை நாடித்,
தயாபரன் சுவைக்கனி ஈய்ந்தமை பாடி.
இரந்திடும் அடியவர் படுந்துயர் தீர்க்கும்,
ஈசிதனே, பள்ளி எழுந்தருளாயே! பாடல் – 7

எழுமையுந் தொடர்ந்திடு தீதறு கல்வி,
ஏத்திடப் பலன்தரு சிவநெறி உணர்வு.
விழுமிய செந்தமிழ் மொழியினற் புலமை,
விரைமலர்த் திருவடி தொழுதிடும் இதயம்.
தழுவியே மன்பதை நலந்தரும் அன்பு,
தந்திவை எம்மிடை தங்கவை முருகா!
செழுமலர்க் குன்றுதோ றாடிடும் குமரா,
சிவக்கொழுந்தே, பள்ளி எழுந்தருளாயே! பாடல் – 8

சுகமிகக் கல்விசந் தானமோ டின்பம்,
சுந்தரா தேசுடன் திருமிகு கீர்த்தி.
இகமதிற் தந்திட இல்லறம் ஓம்பி,
என்னுளே உனைக்கண் டிறையருள் பெருக்கி.
அகமதில் ஒளிவிளக் கென்றுமே கால,
அப்பனே சத்திநி பாதமும் கூட்டாய்.
திகம்பரி பெற்றவெம் தேவனே தேவா,
திருமுருகா, பள்ளி எழுந்தருளாயே! பாடல் – 9

வானுறை இந்திரன் மாதவத் தேவர்,
மாலயன் ஐங்கரன் பங்கயத் திருவர்.
ஈனமில் இறைபணி இயற்றுமெய் அடியார்,
இணையிலாக் கைலையங் கிரியுமை சிவனார்.
தெனெனப் பாமழை பொழிதமிழ்ப் புலவோர்,
திருவடி திரளருள் பகுத்துணப் புகுந்தார்.
கானகம் ஓங்கிடும் கங்காருநாட்டில்,
கந்தவேளே, பள்ளி எழுந்தருளாயே! பாடல் – 10

"அருள்மிகு திருமுருகன் திருப்பள்ளியெழுச்சிப் பதிகம் முற்றும்.

**உச்சி முருகன் காவியப் பாடல்கள்**
**'கண்ணன் ஐயாவும் அவரது சகாக்களும் ஈழத்தில் இருந்து'.**

1. ஆறுமுகம் பன்னிரு கைகளுமாய் அப்பனே நீ
அடியேன் முன் தோன்றியருள் தருவதெப்போ
ஆருமற்ற அனாதை யானேன் ஐயா என்னை
அன்போடு அரவணைத்த மனைவி மக்கள்
யாருமே இல்லாமல் தனித்து வாழும்
அபலையாக எனையொதிக்கித் தள்ளிப் போனார்
ஊருமில்லை உறவுமில்லை இன்றே என்னை
ஓடி வந்து காப்பாற்றி ரட்சிப்பாயே...

2. கைவிக்கம் ஊர்சிறக்கக் காலமெல்லாம்
கனிவோடு எமைக் காக்கும் கந்தா வா வா
பொய்யுலகில் எத்தனைநாள் வாழ்ந்த போதும்
பொழுதெல்லாம் உனை நினைத்தே காலமோடும்
வையத்தில் உனைப் போல வேறு தெய்வம்

வாழ்நாளில் நான் கண்டதில்லை அப்பா
தெய்வமே எனையாளும் உச்சி வேலா
தேடி வந்தேன் எனைக் காத்து ரட்சிப்பாயே...

3. தமிழ் மொழியில் ஆகமங்கள் நடக்கும் கந்தன்
தலமெல்லாம் பக்தர் கூட்டம் இருக்கும் சிந்தை
மகிழ்ந்திடவே பக்தி வெள்ளம் நிறையும் நாளும்
மங்கையரும் ஆடவரும் இசைக்கும் பாடல்
அகிலமெல்லாம் எதிரொலித்து இன்பம் ஊட்டும்
அதிசயத்தை பார்த்து மனம் குளிர்ந்து குதித்து ஆடும்
துகிலாமல் காலமெல்லாம் உனை வணங்க
தோகை மயில் வாகனனே அருள் செய்வாயே...

4. உச்சி முருகனென்றால் உலகறியும் அவன் புகழை
உரக்க எவர் சொன்னாலும் மனம் நிறையும்
பட்சம் வைத்து வாழ்ந்தாலே போகின்ற வழிகளெல்லாம்
பசுமையே பாய் விரிக்கும் பரமனுக்குப் பிரியமான
உச்சி முருகனுக்கு உவப்பான அழகி வள்ளி
உடனருகில் தெய்வானையும் சேர்ந்து நின்றால்
வச்சவிழி வாங்காது பார்க்க சொல்லுமந்த
வள்ளலடி தினம் வணங்க அருள்வாயப்பா...

5. தந்தைக்கு உபதேசம் செய்து இந்த
தரணியெல்லாம் புகழ் மணக்கச் செய்தாயய்யா
தாய் கொடுத்த வேல் தாங்கித் தேவர்களின் கண்ணீரை
தக்கவேளை இல்லாமல் செய்தாயய்யா
விந்தையான செயல் புரிந்து விக்கினங்கள் சகலதையும்
விலக்கி வைக்கும் எங்களது உச்சி வேலா
நொந்து அழும் என்னிலையை கண்கொண்டு பார்த்து இன்றே
நிம்மதியாய் நான் வாழச் செய்வாயப்பா....

6. படைக்கின்ற தொழில் புரியும் பிரமாவைச் சிறையிலிட்டு
பாரறிய தலைக் கனத்தை அடக்கி வைத்தாய்
கிடைக்கின்ற சில்லறையில் ஏழை மக்கள்
கருணையுடன் வாங்கி வந்துன் வாசலிலே
கொழுத்துகின்ற மணக்குச்சு சிறிதென்றாலும்
களிப்போடு அதனையேற்று அவர்கள் வாழ்வில்
வழத்தோடு வாழ்வதற்கு வழிகள் செய்யும்
வள்ளலே உச்சிவேலா அருள் செய்வாயே....

7. வள்ளியை மணம் புரிய வேடம் மாறி
வயோதிபனாய் வந்து காதல் செய்த போது
துள்ளியவள் துடித்தெழுந்து காதலுக்கு
தடை போட்டு தள்ளியோடிச் சென்ற போது
வல்வினையை வேரறுக்கும் உனது அண்ணன்
விநாயகனை வரவழைத்து வெற்றி கண்டாய்
நல்வினையை முடித்து வைக்கும் உச்சி வேலா
நலத்தோடு நாம் வாழ அருள் செய்வாயே...

8. உலகத்தை ஒரு நொடியில் சுற்றி வந்தால்
உங்களுக்கு ஒரு பரிசு தருவேனென்று
கலகத்தை உண்டாக்கச் சிவனார் சொன்னார்
கந்தனவன் மயிலேறிப் பறந்து போனான்
நிலைமை தனை யோசித்து தந்தை தாயை
நினைத்து நம்ம விநாயகரும் சுற்றி வந்து
சிவன் கொடுத்த மாங்கனியை வாங்க வேலன்
சினம் கொண்டு ஆண்டியான பழனி காப்பாய்...

9. நெற்றிக் கண் தீப்பொறியாய் வெளியே வந்தாய்
இத்திலத்தில் நாம் வணங்கும் தெய்வமானாய்
எத்திக்கும் உனைத் துதிக்கும் முருகனானாய்
எங்கள் கைவிக்கத்தின் தலைவனானாய்
உத்தரிக்கும் மக்களின் துயரைத் தீர்க்கும்
உச்சிவேலா உனதழகைக் காலமெல்லாம்
பக்தியுடன் பார்த்திருந்தால் போதுமய்யா
பரமசிவன் புத்திரனே அருள் செய்வாயே....

10. ஆறுபடை வீடமர்ந்தாய் போதாதென்றா
கைவிக்கம் ஊருக்கும் வந்தமர்ந்தாய்
ஏறுமயில் வாகனனே ஏறி வா வா
எழில் கோலம் காண்பதற்கு ஆசை நெஞ்சில்
வீறுகொண்டு எழும்புதய்யா விரைவில் வந்தேன்
விக்கினங்கள் சகலதையும் போக்கியாழ்வாய்
சூரசம்ஹாரனே உச்சி வேலா
சுணங்காமல் இது தருணம் வருவாய் தேவா....

11. நடையாக பக்தரெல்லாம் உன்னைத் தேடி
நடு நடுங்கும் குளிர் பனியில் துன்பப்பட்டு
கதிர்காமம் வருகின்ற வேளையெல்லாம்

காடுகளில் விலங்குகளின் கொடிய வாயில்
பிடிபடாமல் காப்பதுவும் நீயே கந்தா
பக்தர் சில வேளைகளில் வழி தவறி
துடித்தலையும் போதெல்லாம் கிழவனைப்போல்
வந்துதவி செய்பவனே அருள் செய்வாயே....

12. வெள்ளி செவ்வாய் தினங்களிலே முருகா உன் சந்நிதியில்
விழாக் கோலம் காண்பது போல் அன்னதான நிகழ்விருக்கும்
அள்ளி அதைச் சுவைத்துண்டு ஆறுதலாய்ப் படுத்துறங்கி
அப்பனுந்தன் புகழ் பாட ஆயிரமாய்ப் பக்தர் கூட்டம்
சன்னிதியை நிறைந்திருக்கும் கண்கொள்ளாக் காட்சிகாண
கண்ணிரண்டும் போதாது காலமெல்லாம் போற்றிப் பாட
கவிஞர் கோடி வந்தாலும் பூரணமாய் ஆகாதய்யா
கைவிக்கம் ஊரிலுறை உச்சி வேலா அருள் செய்வாயே....

13. கந்த சட்டி சூரசம்கார நவராத்திரி என்று
காலமெல்லாம் விழாக்காணும் கோவில் எங்கள்
கந்தன் வாழும் திருத்தலத்தைக் காணவெகு நாளானது
எந்த நாளில் நிறைவேறும் என்பதனை உச்சிவேலா
வந்தெனது கனவில் தோன்றி வரச் சொல்ல வேண்டுமய்யா
வரும் போது புள்ளிமயில் காவடியைத் தோளில் வைத்து
உந்தனெழில் காண நான் ஓடோடி வருவேன்னய்யா
உச்சி முருகா எனக்கு அருள் செய்வாய் அப்பா

14. நினைத்த நல்ல காரியங்கள் நிறைவேற வேண்டுமென
நேர்த்தி வைத்தால் உடன் பலிக்கும் என்று மக்கள்
நினைக்கின்ற வேளையெல்லம் அருள் வழங்கும்
நம்பிக்கை தரும் முருகன் கைவிக்கம் திருவூரில்
உறைவதனால் எமக்கென்றும் கவலையில்லை
ஓடிப்போய் விழுந்தவரின் காலடியில் கிடப்பதற்கும்
இறைவனே உச்சிவேலா மனம் கனிந்து
இன்றே வந்து எமக்கருள வேண்டுமய்யா...

15. ஒழுங்காகப் பிறந்தவன் நான் ஒழுங்காக வளர்ந்தவன் நான்
ஒரு குறையும் இல்லாமல் ஒழுங்காக படித்துயர்ந்து
ஒழுங்காக வாழ்பவன் நான் ஒழுங்காக மணம் முடித்து
ஒழுங்காகப் பிள்ளை குட்டி ஒன்றிரெண்டை பெற்ற பின்பு
கெடுங்காலம் தொலைவதெப்போ கைவிக்கம் வாழுகின்ற
கதிர் வேலா எனைக் காத்து ரட்சிப்பாயே...

16. காவடியைத் தூக்கியாடி பக்தியோடு
கைவிக்கம் பதியில் வாழும் கந்தா உந்தன்
கோவிலடி வந்தாலே துயரமெல்லாம்
காற்றாகப் பறந்து போகும் விந்தை தன்னை
யாரிடம் நான் சொன்னாலும் நம்பமாட்டார்
யதார்த்தமிதை நானறிவேன் உச்சி வேலா
பாரிலுன் போல் வேறு தெய்வம் இல்லை ஐயா
பார்வதியின் புத்திரனே அருள் செய்வாயே...

17. கவலையிலும் மகிழ்ச்சியிலும் உனை நினைத்தே
காலத்தை ஓட்டுகின்றேன் கந்தா உந்தன்
சுய வடிவைக் காண்பதற்கு ஆசை நெஞ்சில்
சுழன்று நின்று ஆடுதய்யா என்னைக் காண
பயமுகை கேன் சொல்லய்யா கைவிக்கம் பதியுறையும்
பன்னிருகை வேலவனே உன்னை நாளும்
அபயமெனச் சரணடைந்தேன் உச்சி வேலா
அடியேன் முன் காட்சி தந்து அருள் செய்வாயே...

18. எழில் வள்ளி தெய்வானை இடம் வலமாய் வீற்றிருக்க
எனதப்பன் திருவேலன் ஏறுமயில் ஏறி வந்து
கலி தீர்க்கும் நாளையெண்ணிக் காத்திருந்து காத்திருந்து
காலமெல்லாம் ஒடுதய்யா என் முன் தோன்றி
வழிகின்ற கண்ணீரில் வாழுகின்ற என் துயரை
வழித்தெறிந்து வாழ்நாளில் பேரின்ப நிலையடைய
கதிர்வேலா இதுதருணம் கணப்பொழுதில் வந்தெனக்கு
காட்சி தந்து எனையாண்டு ரட்சிப்பாயே....

19. துரியர்களின் பாசறைக்குள் தூக்கியெனை வீசாமல்
துன்பமெனும் சாகரத்தில் துவண்டழியாமல்
நரிக்கூட்ட மானிடர் முன் நான் சிக்கி மாழாமல்
நல்லிதயம் படைத்தவரின் நெஞ்சதனில் இடம்பிடித்து
முருகா நீ எனக்கருள வேண்டுமய்யா
முன் செய்த தீவினைகள் இருந்தாலும் அதையழித்து
தருணமதில் எனைக் காத்து அருள வேண்டும்
தங்கமயில் வாகனனே ரட்சிப்பாயே...

20. கைவிக்கம் ஊரினிலே தீர்த்தத் திருவிழாவை
காண வரும் மக்கள் கூட்டம் கடலாய் மாறும்
மைவிழியார் வானில் மின்னும் தாரகையாய்

மின்னி மின்னிப் பூச்சிகளாய் வீதியெங்கும் விளக்கெடுத்து
தெய்வத்தின் சந்நிதிக்கு வெளிச்சம் போட
திருத்தொண்டர் பரவசமாய் இசைப்பார் கீதம்
மெய் சிலிர்க்க வைக்கின்ற விழாவைக் காணும்
பாக்கியத்தை தினம் பாக்க்க அருள் செய்வாயே

**முருகன் திருமுறைகள்**

1) அருகரொடு புத்தரவர் அறியா அரன் மலையான்
மருகன் வரும் இடபக் கொடி உடையான் இடம் மலரார்
கருகு குழல் மடவார் கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமை பகர் முது குன்றடை வோமே.

2) சேய் அடைந்த சேய் ஞலூரில் செல்வன சீர் பரவித்
தோய் அடைந்த தண் வயல் சூழ் தோணி புரத் தலைவன்
சாய் அடைந்த ஞானம் மல்கு சம்பந்தன் இன்னுரைகள்
வாய் அடைந்து பாட வல்லார் வான் உலகு ஆள்பவரே.

3) தழை மயில் ஏறவன் தாதை ஓதான்
மழை பொழி சடையவன் மன்னு காதில்
குழையது இலங்கிய கோல மார்பின்
இழை யவன் இராமன தீச்சரமே.

4) நெருப்பு உரு வெள் விடை மேனியர் ஏறுவர் நெற்றி யின்கண்
மருப்பு உறு வன் கண்ணர் தாதையைப் காட்டுவர் மா முருகன்
விருப்பு உறு பாம்புக்கு மெய்த்தந்தை யார் விறல் மாதவர் வாழ்
பொருப்பு உறு மாளிகைத் தென் புற வத்தணி புண்ணியரே.

5) காயச் செவ்விக் காமர் காய்ந்து கங்கையைப்
பாயப் படர் புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூர் அன்று அறுத்த மைந்தன் தாதைதன்
மீயச் சூரே தொழுது வினையை வீட்டுமே.

6) வள்ளி முலை தோய் குமரன் தாதை வான் தோயும்
வெள்ளி மலை போல் விடை ஒன்றுடையான் மேவும் ஊர்
தெள்ளி வரும் நீர் அரிசில் தென் பாற் சிறை வண்டும்
புள்ளும் மலி பூம் பொய்கை சூழ்ந்த புத்தூரே.

7) விளங்கி யசீர் பிரமனூர் வேணு புரம் புகலி வெங் குரு மேற்சோலை
வளங்க வருந் தோணி புரம் பூந்தராய் சிரபுரம் வண் புறவ மண்மேல்
களங்க மிலூர் சண்பை கமழ் காழி வயம் கொச்சை கழுமலம் என்று
இன்ன
இளங் குமரன் தன்னைப் பெற்று இமையவர் தம் பகை
எறிவித்த இறைவன் ஊரே.

8) காய்ந்து வரும் காலனை அன்று உதைத்தவன் ஊர் கழுமலம் மாத்
தோணிபுரம் சீர்
ஏய்ந்த வெங்குரு புகலி இந்திரன் ஊர் இருங் கமலத்து அயன் ஊர்
- இன்பம்
வாய்ந்த புறவம் திகழும் சிரபுரம் பூந்தராய் கொச்சை காழி சண்பை
சேந்தனை முன் பயந்து உலகில் தேவர்கள் தம் hகை கெடுத்தோன்
திகழும் ஊரே.

9) இடமயில் அன்ன சாயல் மட மங்கை தன்கை எதிர் நாணி
பூண வரைஇல் கடும் அயில் அம்பு கோத்து எயில் செற்று கந்து
- அமரர்க்
களித்த தலைவன் மடமயில் ஊர்தி தாதை என நின்று தொண்டர் மனம்
நின்ற மைந்தன் மருவும் நட மயிலால நீடு குயில் கூவு சோலை
நறையூரின் நம்பன் அவனே.

10) ஊறினார் ஓசையுள் ஒன்றினார் ஒன்றிமால்
கூறினார் அமர் தரும் குமரவேள் தாதை ஊர்
ஆறினார் பொய் அகத்தை உணர்வு எய்தி மெய்
தேறினார் வழி படும் தென் குடித் திட்டையே.

11 பகலொளி செய் நகமணி யை முகை மலரை
நிகழ் சரணவகவு முனிவர்க்கு
அகலமலி சகலகலை மிகவுரை செய்
முகமுடைய பகவன் னிடமாம்
பகை களையும் வகையில் அறுமுக இறையை
மிக அருள் நிகரில் இமையோர்
புகஉலகு புகழ எழில் திகழ நிகழ்
அலர் பெருகு புகலி நகரே.

12. உற்றுமை சேர்வது மெய்யினையே
உணர்வது நின்னருள் மெய்யினையே
கற்றவர் காய்வது காமனையே

கனல் விழி காய்வது காமனையே
அற்றம் மறைப்  பதும் உன் பணியே
அமரர்கள் செய் வதும் உன் பணியே
பெற்றும் உகந்தது கந்தனையே
பிரம புரத்தை யுகந்தனையே.

13. ஆறுகொலாம் அவர் அங்கம் படைத்தன
ஆறு கொலாம்வர் அவர் தம் மகனார் முகம்
ஆறு கொலாம் அவர் தார்மிசை வண்டின்கால்
ஆறு கொலாஞ் சுவை யாக்கின தாமே.

14. மாலன மாயன் தன்னை மகிழ்ந்தனர் விருத்த ராகும்
பாலனார் பசுப தியார் பால் வெள்ளை நீறு பூசிக்
காலனைக் காலாற் செற்றார் காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
ஏலநற் கடம்பன் தாதை இலங்கு மேற் றளிய னாரே.

15. செல்வியைப் பாகம் கொண்டார் சேந்தனை மகனாக் கொண்டார்
மல்லிகைக் கண்ணி யோடு மாமலர்க் கொன்றை சூடிக்
கல்வியைக் கரையி லாத காஞ்சிமா நகர்தன் னுள்ளால்
எல்லி யை விளங்க நின்றார் இலங்கு மேற்றளிய னாரே.

16. குறவிதோள் மணந்த செல்வக் குமரவேள் தாதை யென்று
நறவிள நறுமென் கூந்தல் நங்கையோர் பாகத் தானைப்
பிறவியை மாற்று வானைப் பெருவேளூர் பேணி னானை
உறவினால் வல்ல னாகி உணருமாறு உணர்த்து வேனே.

17. உடம்பெனு மனை அகத்து உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிர் எனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால் எரி கொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே.

18. ஆரட்ட தேனும் இரந்துண் டகமக வன்றிரிந்து
வேரட்ட நிற்பித் திடுகின்ற தால்விரி நீர்ப்பரவைச்
சூரட்ட வேலவன் தாதையைச் சூழ்வய லாரதிகை
வீரட்டத் தானை விரும்பா வரும்பாவ வேதனையே.

19. முன்னை யார்மயி லூர்தி முருகவேள்
தன்னை யாரெனில் தானோர் தலைமகன்

என்னை ஆள இறையவன் எம்பிரான்
பின்னை யார் அவர் பேரெயி லாளரே.

20. நங்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என்க டன் பணி செய்து கிடப்பதே.

21. சமர சூரபன் மாவைத் தடிந்த வேற்
குமரன் தாதை நற் கோழம்பம் மேவிய
அமரர் கோவினுக்கு அன்புடைத் தொண்டர்கள்
அமர லோகம தாள்ளுடை யார்களே.

22. நார ணன்னொடு நான்முகன் இந்திரன்
வாரணன் குமரன் வணங் குங்கழற்
பூரணன் திருப் பூவனூர் மேவிய
காரணன் எனை ஆளுடைக் காளையே.

23. அடும்பும் கொன்றையும் வன்னியும் மத்தமும்
துடும்பல் செய் சடைத் தூமணிச் சோதியான்
கடம்பன் தாதை கருதுங் காட்டுப் பள்ளி
உடம்பினார்க் கோர் உறுதுணை யாகுமே.

24. வெள்ளிக் குன்றன்ன விடையான் தன்னை
வில்வலான் வில்வட்டங் காய்ந்தான் தன்னைப்
புள்ளி வரிநாகம் பூண்டான் தன்னைப்
பொன் பிதிர்ந் தன்ன சடையான் தன்னை
வள்ளி வளைத்தோள் முதல்வன் தன்னை
வாரா வுல கருள் வல்லான் தன்னை
எள்க இடுபிச்சைஏற்பான் தன்னை
ஏழையேன்நான் பண் டிகழ்ந்த வாறே.

25 முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றி என் தாதாய் போற்றி
தொக்கணா வென்றிருவர் தோள்கை கூப்பத்
துளங்கா தெரிசுடராய் நின்றாய் போற்றி
எக்கண்ணுங் கண்ணிலேன் எந்தாய் போற்றி
எறிகெடில வீரட்டத் தீசா போற்றி

26 அரவணையான் சிந்தித்தரற்றும்மடி அருமறையான்
சென்னிக் அணியாமடி
சரவணத்தான் கைதொழுது சாரும்மடி சார்ந்தார்கட்
எல்லாஞ் சரணாமடி
பரவுவார் பாவம் பறைக்கும்மடி பதினெண்
கணங்கள் பாடும்மடி
திரைவிரவு தென்கெடில நாடன்னடி திருவீரட்டானத்து
எம் செல்வனடி.

27 கோவாய இந்திரனுள் ளிட்டா ராகக்
குமரனும் விக்கின விநாய கனும்
பூவாய பீடத்து மேல யனும்
பூமி யளந்தானும் போற்றி சைப்பப்
பாவாய இன்னிசைகள் பாடி யாடிப்
பாரிடமுந் தாமும் பரந்து பற்றிப்
பூவார்ந்த கொன்றை பொறிவண் டார்க்கப்
புறம்பயம்நம் மூரென்று போயி னாரே.

28. படைமலிந்த மழுவாளும் மானுந் தோன்றும்
பன்னிரண்டு கண்ணுடைய பிள்ளை தோன்றும்
நடைமலிந்த விடையோடு கொடியுந் தோன்றும்
நான்மறையின் ஒலி தோன்றும் நயனந் தோன்றும்
உடைமலிந்த கோவணமுங் கீளுந் தோன்றும்
மூரல்வெண் சிரமாலை உலாவித் தோன்றும்
புடைமலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்
பொழில் நிகழும் பூவணத்தெம் புனித னார்க்கே.

29 கள்ளி முதுகாட்டில் ஆடி கண்டாய்
காலனையுங் காலால் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழைமானின் தோலான் கண்டாய்
புலியுரிசேர் ஆடைப் புனிதன் கண்டாய்
வெள்ளி மிளிர்பிறைமுடி மேற் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய் நஞ் செந்தின் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட்டு உறையும் மணாளன் தானே.

30 மிறை படும் இவ் வுடல் வாழ்வை மெய்யென்று எண்ணி
வினை யிலே கிடந்தழுந்தி வியவேல் நெஞ்சே
குறைவுடையார் மனத் துளான் குமரன் தாதை
கூத்தாடுங் குணமுடையான் கொலைவேற் கையான்
அறைகழலுந் திருவடிமேற் சிலம்பும் ஆர்ப்ப
அவனிதலம் பெயர வரு நட்டம் நின்ற
நிறைவுடையான் இடமாம் நெய்த்தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்யலாமே.

31 சமரம்மிகு சலந்தரன் போர் வேண்டி னானைச்
சக்கரத்தாற் பிளப்பித்த சதுரர் போலும்
நமனையொரு கால்குறைத்த நாதர் போலும்
நாரணனை இடப்பாகத்து அடைத்தார் போலுங்
குமரனையும் மகனாக உடையார் போலுங்
குளிர்வீழி மிழலை அமர் குழகர் போலும்
அமரர்கள் பின் அமுதுண நஞ் சுண்டார் போலும்
அடியேனை ஆளுடைய அடிகள் தாமே.

32 முந்தைகாண் மூவரினும் முதலா னான்காண்
மூவிலை வேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தை காண் தண்கடமா முகத்தினாற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையொன்று ஏறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன் காண் அவன் என் எண்ணத் தானே.

33 தில்லைச் சிற்றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லில் திகழ் சீரார் காளத்தியுங்
கயிலாய நாதனையே காணலாமே.

34 தக்கனது வேள்விகெடச் சாடி னானைத்
தலைகலனாப் பலியேற்ற தலைவன் தன்னைக்
கொக்கரைசச் சரிவீணைப் பாணி யானைக்
கோணாகம் பூணாகக் கொண்டான் தன்னை
அக்கினொடும் என்பணிந்த அழகன் தன்னை
அறுமுகனோடு ஆனைமுகற்கு அப்பன் தன்னை
நக்கனைவக் கரையானை நள்ளாற் றானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.

35 காரிலங்கு திருவுருவத் தவற்கும் மற்றைக்
கமலத்திற் காரணற்குங் காட்சி யொண்ணாச்
சீரிலங்கு தழற்பிழம்பிற் சிவந்தார் போலுஞ்
சிலைவளைவித்து அவுணர்புரஞ் சிதைத்தார் போலும்
பாரிலங்கு புனலனல்கால் பரமா காசம்
பருதிமதி சுருதியுமாய்ப் பரந்தார் போலுங்
கூரிலங்கு வேற்குமரன் தாதை போலுங்
குடந்தைக்கீழ் கோட்டத்தெங் கூத்த னாரே.

36 கோழிக்கொடியோன் தன்தாதை போலுங்
கொம்பனாள் பாகங் குளிர்ந்தார் போலும்
ஊழி முதல்வருந் தாமே போலும்
உள்குவார் உள்ளத்தி னுள்ளார் போலும்
ஆழித்தேர் வித்தகருந் தாமே போலும்
அடைந்தவர்கட்கு அன்பராய் நின்றார் போலும்
ஏழு பிறவிக்குந் தாமே போலும்
இன்னம்பர்த் தான்தோன்றி யீசனாரே.

37 திங்கள் தங்கு சடையின் மேலோர் திரைகள் வந்து புரள வீசும்
கங்கை யாளேல் வாய்தி றவாள் கணப தியேல் வயிறு தாரி
அங்கை வேலோன் குமரன் பிள்ளை தேவி யார்கோற் றட்டி யாளால்
உங்களுக்கு ஆட்செய்ய மாட்டோம் ஓண காந்தன் தளியு ளீரே.

38 பொரும்பலம துடையசுரன் தாரகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினைமுன் படைத்துகந்த புனிதன்
கரும்புவில்லின் மலர்வாளிக் காமனுடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன் கருதும் ஊர் வினவில்

இரும்புனல்வெண் திரை பெருகி ஏலம்இல வங்கம்
இருகரையும் பொருதலைக்கும் அரிசிலின்தென் கரைமேல்
கரும்புனைவெண் முத்தரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின்காட்டுங் கடிபொழில்சூழ் கலயநல்லூர் காணே.

39 சேர்ந்தாய் மலைமங்கை திருநிறமும் பரிவும்
உடையானை அதிகைமா நகருள்வாழ் பவனைக்
கூந்தல்தாழ் புனல்மங்கை குயிலன்ன மொழியாள்
சடையிடையிற் கயலினங்கள் குதிகொள்ளக் குலாவி
வாய்ந்தநீர் வரவுந்தி மராமரங்கள் வணக்கி
மறிகடலை இடங்கொள்வான் மலையார வாரி
ஏந்துநீர் எறிகெடில வடவீரட் டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே.

40 பொன்னானை மயிலூர்தி முருகவேள் தாதை
பொடியாடு திருமேனி நெடுமாறன் முடிமேல்
தென்னானைக் குடபாலின் வடபாலின் குணபாற்
சேராத சிந்தையான் செக்கர்வான் அந்தி
அன்னானை அமரர்கள் தம் பெருமானைக் கருமானின்
உரியானை அதிகைமா நகருள்வாழ் பவனை
என்னானை எறிகெடில வடவீரட் டானத்து
உறைவானை இறைபோதும் இகழ்வன் போல் யானே.

41 மண்ணுலகும் விண்ணுலகும் உம்மதே ஆட்சி
மலையரையன் பொற்பாவை சிறுவனையுந் தேறேன்
எண்ணிலியுண் பெருவயிறன் கணபதியொன் றறியான்
எம்பெருமான் இதுதகவோ இயம்பி அருள் செய்யீர
திண்ணெனஎன் உடல்விருத்தி தாரீரே யாகில்
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன் நாளைக்
கண்ணறையன் கொடும்பாடன் என்றுரைக்க வேண்டா
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

42 கொடு வெஞ்சிலை வடுக வேடுவர் விரவ லாமை சொல்லித்
திடுகு மொட்டெனக் குத்திக் கூறைகொண் டாற லைக்கு மிடம்
முடுகு நாறிய வடுகர் வாழ்முருகன் பூண்டி மாநகர் வாய்
இடுகு நுண்ணிடை மங்கை தன்னொடும் எத்துக்கு இங்கிருந்தீர் எம்
- பிரானீரே.

43. வில்லைக் காட்டி வெருட்டி வேடுவர்
விரவ லாமை சொல்லிக்
கல்லினால் எறித்திட்டும் மோதியுங்
கூறை கொள்ளும் இடம்
முல்லைத் தாது மணங்கமழ் முருகன்
பூண்டி மாநகர் வாய்
எல்லை காப்பதொன் றில்லை யாகில்நீர்
எத்துக்கிங் இங்கிருந்தீர் எம் பிரானீரே.

44. பசுக்களே கொன்று தின்று பாவிகள்
பாவம் ஒன்று அறியார்
உசிர்க் கொலை பல நேர்ந்து நாடொறுங்
கூறை கொல்லு மிடம்
முசுக்கள் போற்பல வேடர்வாழ் முருகன்
பூண்டி மாநகர் வாய்
இசுக்க ழியப் பயிக்கங் கொண்டுநீர்
எத்துக்கிங் இங்கிருந்தீர் எம் பிரானீரே.

45. பீறற் கூறை உடுத்தோர் பத்திரங்
கட்டி வெட்டன ராய்ச்
சூறைப் பங்கிய ராகி நாடொறுங்
கூறை கொள்ளுமிடம்
மோறை வேடுவர் கூடிவாழ் முருகன்
பூண்டி மாநகர் வாய்
ஏறு காலிற்ற தில்லை யாய்விடில்
எத்துக்கிங் இங்கிருந்தீர் எம் பிரானீரே.

46. தயங்கு தோலை உடுத்த சங்கரா
சாம வேத மோதீ
மயங்கி ஊரிடு பிச்சை கொண்டுணும்
மார்க்கம் ஒன்று அறியீர்
முயங்கு பூண்முலை மங்கையாளொடு முருகன்
பூண்டி மாநகர் வாய்
இயங்க வும்மிடுக் குடைய ராய்விடில்
எத்துக்கிங் கிருந்தீரெம் பிரானீரே.

47. விட்டி சைப்பன கொக்க ரைகொடு
கொட்டித் தத்த ளகங்
கொட்டிப் பாடும் இத் துந்து மியொடு
குடமுழா நீர் மகிழ்வீர்
மொட்ட லர்ந்து மணங்கமழ் முருகன்
பூண்டி மாநகர் வாய்
இட்ட பிச்சைகொண் டுஉண்ப தாகில்நீர்
எத்துக்கு இங்கிருந்தீர் எம் பிரானீரே.

48. வேதம் ஓதிவெண் ணீறு பூசிவெண்
கோவணந் தற்ற யலே
ஓதம் மேவிய ஒற்றி யூரையும்
முத்திநீர் மகிழ்வீர்
மோதி வேடுவர் கூறைகொள்ளும் முருகன்
பூண்டி மாநகர் வாய்
ஏது காரணம் ஏது காவல்கொண்டு
எத்துக்கு இங்கிருந்தீர் எம் பிரானீரே.

49 படவ ரவநுண் ணேரி டைப்பணைத்
தோள்வ ரிநெடுங் கண்
மடவ ரல்உமை நங்கை தன்னையோர்
பாகம் வைத்து உகந்தீர்
முடவ ரல்லீர் இடரிலீர் முருகன்
பூண்டி மாநகர் வாய்
இடவம் ஏறியும் போவ தாகில்நீர்
எத்துக்கு இங்கிருந்தீர் எம் பிரானீரே.

50. சாந்த மாகவெண் ணீறு பூசிவெண்
பல்தலைகலானா
வேய்ந்த வெண்பிறைக் கண்ணி தன்னையோர்
பாகம் வைத்து உகந்தீர்
மோந்தை யோடு முழக்கறா முருகன்
பூண்டி மாநகர் வாய்
ஏந்து பூண்முலை மங்கை தன்னொடும்
எத்துக்கு இங்கிருந்தீர் எம் பிரானீரே.

51. முந்தி வானவர் தாந்தொழும் முருகன்
பூண்டி மாநகர் வாய்ப்
பந்த ணைவிரற் பாவை தன்னையோர்
பாகம் வைத்தவனைச்
சிந்தையிற் சிவதொண்டன் ஊரன்
உரைத்தன பத்துங் கொண்டு
எந்தம் அடிகளை ஏத்துவார் இடர்
ஒன்றுந் தாம் இலரே.

52. திருத்தினை நகர்உறை சேந்தன் அப்பன்என்
செய்வினை அறுத்திடுஞ் செம்பொனை அம்பொன்
ஒருத்தனை அல்லது இங்கு ஆரையும் உணரேன்
உணர்வுபெற் றேன்உய்யுங் காரணந் தன்னால்
விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி
விழித்து எங்குங் காணமாட் டாதுவிட் டிருந்தேன்
கருத்தனை நிருத்தஞ்செய் காலனை வேலைக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.

53. ஒட்டி ஆட்டிகொண்டு போய்ஒளித் திட்ட
உச்சிப் போதனை நச்சர வார்த்த
பட்டி யைப்பக லையிருள் தன்னைப்
பாவிப் பார் மனத்து ஊறும் அத்தேனைக்
கட்டி யைக்கரும் பின்தெளி தன்னைக்
காத லாற்கடல் சூர்தடிந் திட்ட
செட்டி யப்பனைப் பட்டனைச் செல்வ
ஆரூரானை மறக்கலு மாமே.

54. ஆத்தம் என்றெனை ஆளுகந் தானை
அமரர் நாதனைக் குமரனைப் பயந்த
வார்த்த யங்கிய முலைமட மானை
வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்த னைச்சிவ னைச்செழுந் தேனைத்
தில்லை அம்பலத் துள்நிறைந் தாடுங்
கூத்த னைக்குரு மாமணி தன்னைக்
கோலக் காவினிற் கண்டுகொண் டேனே.

55. திங்கள் நம்பிமுடி மேல்அடி யார்பால்
சிறந்தநம் பிபிறந் தஉயிர்க் கெல்லாம்
அங்கண் நம்பியருள் மால்விசும் பாளும்
அமரர் நம்பிகும ரன்முதல் தேவர்
தங்கள் நம்பிதவத் துக்கொரு நம்பி
தாதை என்று உன் சரண் பணிந்து ஏத்தும்
எங்கள் நம்பிஎன்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே.

56. வேந்தராய் உலகு ஆண்டு அறம் புரிந்து
வீற்றி ருந்த இவ்வுடல் அது தன்னைத்
தேய்ந்தி றந்துவெந் துயருழந் திடுமிப்
பொக்க வாழ்வினை விட்டிடு நெஞ்சே
பாந்த ளங்கையில் ஆட்டுகந் தானைப்
பரமனைக் கடற் சூர்தடிந் திட்ட
சேந்தர் தாதையைத் திருத்தினை நகருட்
சிவக்கொ ழுந்தினைச் சென்றடை மனனே.

57. நமர்பிறர் என்ப தறியேன் நான்கண்ட தேகண்டு வாழ்வேன்
தமரம் பெரிதும் உகப்பன் தக்கவா றொன்றும் இலாதேன்
குமரன் திருமால் பிரமன் கூடிய தேவர் வணங்கும்
அமரன் இருப்பதும் ஆரூர்அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்.

58. கடுவரி மாக்கடலுட் காய்ந்தவன் தாதையைமுன்
சுடுபொடி மெய்க்கணிந்த சோதியை வன்தலைவாய்
அடுபுலி ஆடையனை ஆதியை ஆரூர்புக்கு
இடுபலி கொள்ளியைநான் என்றுகொல் எய்துவதே.

59. சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிநிரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே.

60. பாலகனார்க்கு அன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே உந்தீ பற குமரன் தன் தாதைக்கே உந்தீபற.

61. குயில் இதன்றே என்னலாம் சொல்லி கூறன் சிற்றம்பலத்தான்
இயல் இதன்றே என்னலாகா இறை விறற் சேய் கடவும்
மயில் இதன்றே கொடி வாரணம் காண் கவன் சூர் தடிந்த
அயில் இதன்றே நெல்லில் தோன்றும் அவன் வடிவே.

62. வேலன் புகுந்து வெறியாடுக வெண்மறி அறுக்க
காலன் புகுந்தவி யக்கழல் வைத்து எழில் தில்லை நின்ற
வேலன் புகுந்து என்கண் நின்றான் இருந்த வெண்காடு அனைய
பாலன் புகுந்து இப்பரிசினின் நிற்பித்த பண்பினுக்கே.

63. தனதன் நல் தோழா சங்கரா ! சூல
பாணியே! தாணுவே சிவனே !
கனகநல் தூணே! கற்பகக் கொழுந்தே
கண்கள் மூன்று உடையதோர் கரும்பே !
அனகனே குமர விநாயக சனக
அம்பலத்து அமர சேகரனே !
உனகழல் இணை என் நெஞ்சினுள் இனிதாத்
தொண்டனேன் நுகருமா நுகரே.

64. உளங்கொள மதுரக் கதிர்விரித்(து) உயிர்மேல்
அருள்சொரி தரும் உமா பதியை
வளங்கிளர் நதியும் மதியமும் சூடி
மழவிடை மேல் வருவானை
விளங்கொளி வீழி மிழலை வேந்தேயென்(று)
ஆந்தனைச் சேந்தன் தாதையையான்
களங்கொள அழைத்தால் பிழைக்குமோ அடியேன்
கைக் கொண்ட கனகற் பகமே.

65. மாலுலா மனம் தந்(து) என்கையில் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுலாந் தேவர் குலமுழு தாளும்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங் கழனித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற் கீழ் நின்ற
வேலுலாந் தடக்கை வேந்தன் என் சேந்தன்
என்னும் என் மெல்லியல் இவளே.

66. இவளை வார் இளமென் கொங்கை பீர் பொங்க
எழில் கவர்ந்தான் இளங்காளை

கவளமா கரிமேல் கவரிசூழ் குடைக்கீழ்க்
கனகக் குன்றெனவரும் கள்வன்
திவள மாளிகை சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற்கீழ் நின்ற
குவளை மாமலர்க்கண் நங்கையாள் நயக்கும்
குழகன் நல் அழகன் நங்கோவே.

67. கோவினைப் பவளக் குழமணக் கோலக்
குழாங்கள் சூழ்கோழி வெல் கொடியோன்
காவல் நற்சேனை யென்னக்காப் பவன்என்
பொன்னை மேகலை கவர்வானே
தேவின் நற்றலைவன் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற் கீழ் நின்ற
தூவி நற்பீலி மாமயில் ஊரும்
சுப்பிர மண்ணியன் தானே.

68. தானமர் பொருது வானவர் சேனை
மடியச் சூர் மார்பினைத் தடிந்தோன்
மானமர் தடக்கை வள்ளல் தன் பிள்ளை
மறை நிறை சட்டறம் வளரத்
தேனமர் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற் கீழ் நின்ற
கோனமர் கூத்தன் குலவிளங் களிறென்
கொடிக்கிடர் பயப்பதங் குணமே!

69. குணமணிக் குருளைக் கொவ்வைவாய் மடந்தை
படுமிடர் குறிக்கொளா(து) அழகோ
மணமணி மறையோர் வானவர் வையம்
உய்யமற்(று) அடியனேன் வாழத்
திணமணி மாடத் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற் கீழ் நின்ற
கணமணி பொரு நீர்க்கங்கை தன் சிறுவன்
கணபதி பின்னிளங் கிளையே.

70. கிளையிளஞ் சேய் அக்கிரி தனைக் கீண்ட
ஆண்டகை கேடில்வேற் செல்வன்
வளையிளம் பிறைச் செஞ்சடை அரன் மதலை
கார் நிறமால் திருமருகன்

திளையிளம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற் கீழ் நின்ற
முளையிளங் களிறு என் மொய்குழற் சிறுமிக்(கு)
அருளுங்கொல் முருகவேள் பரிந்தே.

71. பரிந்த செஞ்சுடரோ பரிதியோ மின்னோ
பவளத்தின் குழவியோ பசும்பொன்
சொரிந்த சிந்துரமோ தூமணித் திரளோ
சுந்தரத்(து) அரசிது என்னத்
தெரிந்தவை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற் கீழ் நின்ற
வரிந்த வெஞ்சிலைக்கை மைந்தனை அஞ்சொல்
மையல் கொண்(டு) ஐயுறும் வகையே.

72. வகை மிகும் அசுரர் மாளவந்(து) உழிஞை
வானமர் விளைத்த தாளாளன்
புகை மிகும் அனலிற் புரம்பொடி படுத்த
பொன்மலை வில்லி தன் புதல்வன்
திகை மிகு கீர்த்தித் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற் கீழ் நின்ற
தொகை மிகு நாமத்தவன் திருவடிக்(கு)என்
துடியிடை மடல் தொடங்கினளே.

73. தொடங்கினள் மடலென்(று) அணிமுடித் தொங்கல்
புற இதழ் ஆகிலும் அருளான்
இடங்கொளக் குறத்தி திறத்திலும் இறைவன்
மறத்தொழில் வார்த்தையும் உடையன்
திடங் கொள்வை திகர்வாழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற் கீழ் நின்ற
மடங்கலை மலரும் பன்னிரு நயனத்(து)
அறுமுகத்(து) அமுதினை மருண்டே.

74. மருண்டு உறை கோயில் மல்கு நன்குன்றப்
பொழில் வளர் மகிழ் திருப்பிடவூர்
வெருண்ட மான்விழியார்க்(கு) அருள்செயா விடுமே
விடலையே எவர்க்கும் மெய் அன்பர்

தெருண்ட வைதிகர் வாழ்திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற் கீழ் நின்ற
குருண்ட பூங்குஞ்சிப் பிறைச்சடை முடி முக்
கண்ணுடைக் கோமளக் கொழுந்தே.

75. கொழுந்திரள் வாயார் தாய்மொழி யாகத்
தூய்மொழி அமரர் கோமகனைச்
செழுந்திரள் சோதிச் செப்புறைச் சேந்தன்
வாய்ந்த சொல் இவை சுவாமியையே
செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக் கழியில்
திருக்குரா நீழற் கீழ் நின்ற
எழுங்கதிர் ஒளியை ஏத்துவார் கேட்பார்
இடர்கெடும் மாலுமா மனமே.

76. திருமகன் முருகன் தேவியேல் உமையாள்
திருமகள் மருமகன் தாயாம்
மருமகன் மதனன் மாமனேல் இமவான்
மலையுடை அரையர்தம் பாவை
தருமலி வளனாம் சிவபுரன் தோழன்
தளபதி சாட்டியக் குடியார்
இருமுகம் கழல்மூன்று ஏழுகைத் தலம்ஏழ்
இருக்கையில் இருந்தா சனுக்கே.

### திருப்பரங்குன்றம்

1. உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டா அங்கு
ஓவற இமைக்குஞ் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்
செறுநர்த் தேய்த்த செல்உறழ் தடக்கை

2 மறுவில் கற்பின் வாணுதல் கணவன்
கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பில் வள் உறை சிதறித்
தலைப்பெயல் தலை இய தண்ணறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பரா அரைமரா அத்து

3 உருள் பூந்தண்தார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பில்
கிண்கிணி கவைஇய ஒண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பின் பணைத்தோள்
கோபத் தன்ன தோயாப் பூந்துகில்

4 பல் காசு நிரைத்த சில் காழ் அல்குல்
கை புனைந் தியற்றாக் கவின் பெறுவனப்பின்
நாவலொடு பெயரிய  பொலம்புனை அவிரிழைச்
சேண் இகந்து விளங்கும் செயிர் தீர்மேனித்
துணையோர் ஆய்ந்த இணையீர் ஓதிச்

5 செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு
பைந்தாள் குவளைத்தூ இதழ் கிள்ளித்
தெய்வ  உத்தியொடு வலம்புரி வயின் வைத்துத்
திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்துத்

6 துவர முடித்த துகளறு முச்சிப்
பெருந்தண் சண்பகம் செரீ இகருந்த கட்டு
உளைப்பூ மருதின் ஒள்ளிணர் அட்டிக்
கிளைக் கவின்று எழு தரு கீழ் நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளை இத்துணைத்தக.

7 வண்காது நிறைந்த பிண்டி ஒண்தளிர்
நுண்பூண் ஆகந் திளைப்பத் திண்காழ்
நறுங் குறடுஉரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவி முகிழ் இளமுலைக் கொட்டி விரிமலர்.

8 வேங்கை நுண்தாது அப்பிக் காண்வர
வெள்ளில் குறு முறி கிள்ளுபு தெறியாக்
கோழி ஓங்கிய வென்றடு விறல் கொடி
வாழிய பெரிது என்று ஏத்திப் பலருடன்
சீர் திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடிச்.

9 சூரர மகளிர் ஆடும் சோலை
மந்தியும் அறியா மரன் பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப் பூங்காந்தள்
பெருந்தண் கண்ணிமிலைந்த சென்னியன்
பார் முதிர் பனிக்கடல் கலங்க உள்புக்குச்.

10 சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடுவேல்
உலறிய கதுப்பின் பிறழ்பல் பேழ்வாய்ச்
சுழல் விழிப் பசுங்கண் சூர்த்த நோக்கின்
கழல்கண் கூகையொடு கடும் பாம்பு தூங்கப்
பெருமுலை அலைக்கும் காதின் பிணர் மோட்டு.

11 உருகெழு செலவின் அஞ்சு வரு பேய்மகள்
குருதி ஆடிய கூருகிர்க் கொடுவிரல்
கண் தொட்டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறல் களம் பாடித்தோள் பெயரா.

12 நிணந்தின் வாயள் துணங்கை தூங்க
இருபேர் உருவின் ஒருபேர் யாக்கை
அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டி
அவுணர் நல்வலம் அடங்கக் கவிழ் இணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து

13 எய்யா நல்லிசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம் பிரிந்துறையும்
செலவு நீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்னசை வாய்ப்ப

14 இன்னே பெறுதி நீ முன்னிய வினையே
செருப்புகன் றெடுத்த சேண் உயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொரு நர்த்தேய்த்த போர் அருவாயில்
திரு வீற்றிருந்த தீதுதீர் நியமத்து.

15 மாடமலி மறுகில் கூடல் குடவயின்
இருஞ் சேற்றகல் வயல் விரிந்துவாய் அவிழ்ந்த
முள்தாள் தாமரைத் துஞ்சி வைகறைக்
கள் கமழ் நெய்தல் ஊதி எல் படக்
கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்

அஞ்சிறை வண்டின் அரிக்கணம் ஒலிக்கும்
குன்றமர்ந் துறைதலும் உ ரியன் அதா அன்று.

**திருச்சீரலைவாய்**

1 வைந்நுதி பொருத வடுஆழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்
படுமணி இரட்டும் மருங்கின் கடுநடைக்.

2 கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பின்
கால் கிளர்ந்தன்ன வேழ மேல் கொண்டு
ஐவேறு உருவின் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண் மிகு திருமணி
மின் உறழ் இமைப்பின் சென்னிப் பொற்ப.

3 நகை தாழ்பு துயல் வரூஉம் வகையமை பொலங்குழை
சேண் விளங்கு இயற்கை வாண்மதி கவையி
அகலா மீனின் அவிர் வன இமைப்பத்
தாவில் கொள்கைத் தந்தொழில் முடிமார்
மனன் நேர்பு எழு தருவாள்நிற முகனே.

4 மாயிருள் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல் கதிர் விரிந்தன்றொரு முகம் ஒரு முகம்
ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக்
காதலின் உவந்து வரங் கொடுத்தன்றே ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ

5 அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித்
திங்கள் போலத் திசை விளக்கும்மே ஒருமுகம்
செறுநர்த் தேய்த்துச் செல் சமம் முருக்கிக்
கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே ஒருமுகம்

6 குறவர் மடமகள் கொடி போல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகை யமர்ந்தன்றே ஆங்கு அம்
மூவிரு முகனும் முறை நவின்றொழுகலின்
ஆரந் தாழ்ந்த அம்ப கட்டு மார்பின்
செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு.

7 வண் புகழ் நிறைந்து வசிந்து வாங்கு நிமிர் தோள்
விண் செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது
ஒருகை உக்கம் சேர்த்தியது ஒருகை

நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசை இயது ஒருகை
அங்குசம் கடாவ ஒருகை இருகை.

8 ஐயிரு வட்ட மொரு எஃகு வலம் திரிப்ப ஒருகை
மார்பொடு விளங்க ஒருகை தாரொடு பொலிய ஒருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப ஒருகை
பாடின் படுமணி இரட்ட ஒருகை.

9 நீல்நிற விசும்பின் மலிதுளி பொழிய ஒருகை
வான் அர மகளிர்க்கு வதுவை சூட்ட ஆங்கு அப்
பன்னிரு கையும் பாற்பட இயற்றி அந்தரப் பல்லியம்
கறங்கத் திண் காழ்வயி ரெழுந்திசைப்ப வால்வளை ஞரல.

10 உரம் தலைக் கொண்ட உருமிடி முரச மொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி அகவ
விசும் பாறாக விரை செலல் முன்னி
உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலை இய பண்பே அதா அன்று.

## திருவாவினன்குடி

1 சீரைதை  இய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வால்நரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவைதை இய ஊன்கெடு மார்பின்
என்பெழுந் தியங்கும் யாக்கையர் நன்பகல்.

2 பலவுடன் கழிந்த உண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தினர் யாவதும்
கற்றோர் அறியா அறிவினர் கற்றோர்க்குத்
தாம் வரம் பாகிய தலைமையர் காம மொடு
கடுஞ்சினம் கடிந்த காட்சியர் இடும்பை .

3 யாவதும் அறியா இயல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முன்புகப்
புகை முகந்தன்ன மாசில் தூவுடை
முகைவாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்துச்
செவி நேர்பு வைத்த செய்வுறு திவவின்.

4 நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மென் மொழி மேவலர் இன்னரம் புளர
நோயின்றி யன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர் இன்னகைப்.

5 பருமம் தாங்கிய பணிந்தேந்தல் குல்
மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடு வோடொடுங்கிய தூம்புடை வாலெயிற்று
அழலென உயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பாம்பு படப்புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்.

6 புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயின் உயரிய பலர் புகழ் திணிதோள்
உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயில் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறு பல்.

7 வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரி ரண்டேந்திய மருப்பின் எழில் நடைத்
தாழ் பெருந் தடக்கை உயர்த்த யானை
எருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்
நாற் பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய.

8 உலகம் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவர் ஆக
ஏமுறு ஞாலந் தன்னில் தோன்றித்
தாமரை பயந்த தாவில் ஊழி
நான் முகன் ஒருவன் சுட்டிக் காண்வரப்.

9 பகலில் தோன்றும் இகலில் காட்சி
நால் வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற்று இரட்டி உயர்நிலை பெறீ இயர்
மீன் பூத்தன்ன தோன்றலர் மீன் சேர்பு
வளி கிளர்ந்தன்ன செலவினர் வளியிடைத்.

10 தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உருமிடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கில் தம்பெறு முறை கொண்மார்

அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சில்நாள்
ஆவினன்குடி அசைதலும் உரியன்அதா அன்று.

## திருவேரகம்

1 இருமூன்று எய்திய இயல்பினின் வழா அது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய அறன் நவில் கொள்கை.

2 மூன்று வகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இரு பிறப்பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்று புரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர உடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற் புகழ்ந்து.

3 ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி
நாவியல் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமலர் ஏந்திப் பெரிதுவந்து
ஏரகத் துறைதலும் உரியன் அதா அன்று.

## குன்றுதோறாடல்

1 பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரை இக் குளவியொடு
வெண்கூ தாளந் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ் கிளர் மார்பின்
கொடுந் தொழில் வல்வில் கொலை இய கானவர்
நீடு அமை விளைந்த தேங்கள் தேறல்.

2 குன்றகச் சிறு குடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர
விரல் உளர்ப்ப அவிழ்ந்த வேறுபடு நறுங்கால்
குண்டு சுனை பூத்த வண்டு படு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்.

3 முடித்த குல்லை இலையுடை நறும்பூச்
செங்கால் மரா அத்த வாலிணர் இடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகாழ் அல்குல் திளைப்ப உடீஇ
மயில் கண்டன்ன மட நடை மகளிரொடு.

4 செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரைச்
செயலைத் தண்தளிர் துயல் வரும்கா தினன்
கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் இயத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவல் அம்.

5 கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன் குரல் தொகுதியொடு
குறும் பொறிக் கொண்ட நறுந்தண் சாயல்
மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இயல ஏந்தி.

6 மென்தோள் பல் பிணை தழீஇத் தலைத்தந்து
குன்று தோறாடலும் நின்றதன் பண்பே அதா அன்று.

**பழமுதிர்சோலை**

1 சிறு தினை மலரொடு விரைஇ மறி அறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழ வினும்.

2 ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தை இய வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின் பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப் பூங் கடம்பும்.

3 மன்றமும் பொதியிலுங் கந்துடை நிலையினும்
மாண்டலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யோடு ஐயவி அப்பி ஐதுரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழு மலர் சிதறி
முரண்கொள் உருவின் இரண்டுடன் உடீஇச்..

4 செந்நூல் யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலை இய மாத்தாள் கொழு விடைக் குருதியொடு
விரை இய தூவெள் அரிசி சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்.

5 பெருந்தண் கண வீரம் நறுந்தண் மாலை
துணை அற அறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை அருவியோடு இன்னியம் கறங்க.

6 உருவப் பல் பூத்தூ உய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலவுடன்.

7 கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங்கு எய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே
ஆண்டு ஆண்டு ஆயினும் ஆகக் காண்தக.

8 முந்துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழஊ உப்பரவிக் கால் உற வணங்கி
நெடும் பெரும் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ.

9 ஆல் கெழுகடவுள் புதல்வ மால்வரை
மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல் போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பின் பழையோள் குழவி
வானோர் வணங்குவில் தானைத் தலைவ.

10. மாலை மார்ப நூலறி புலவ
செருவில் ஒருவ பொருவிறல் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை
மங்கையர் கணவ மைந்தர் ஏறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ.

11. குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவர் ஏறே
அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருக
நசையு நர்க்கு ஆர்த்தும் இசை பேராள.

12. அலர்ந்தோர்க்கு அளிக்கும் பொலம் பூண் சேஎய்
மண்டமர் கடந்த நின் வென்று ஆடு அகலத்துப்
பரி சிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேள்
பெரியோர் ஏத்தும் பெரும் பெயர் இயவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி.

13 போர்மிகு பொரு நகுரிசில் எனப்பல
யான்அறி அளவையின் ஏத்தி ஆனாது
நின் அளந்து அறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி உள்ளி வந்தனன் நின்னொடு
புரையு நர் இல்லாப் புலமையோய் எனக்.

14 குறித்தது மொழியா அளவையின் குறித்துடன்
வேறுபல் உருவின் குறும்பல் கூளியர்
சாறயர் களத்து வீறு பெறத் தோன்றி
அளியன் தானே முதுவாய் இரவலன்
வந்தோன் பெரும நின் வண்புகழ் நயந்தென.

15 இனியவும் நல்லவும் நனி பல ஏத்தித்
தெய்வம் சான்ற திறல் விளங்குருவின்
வான் தோய் நிவப்பின் தான் வந்து எய்தி
அணங்கு சால் உயர்நிலை தழீ இப்பண்டைத்தன்
மணம் கமழ் தெய்வத்து இள நலம் காட்டி.

16 அஞ்சல் ஓம்பு மதி அறிவல் நின் வரவென
அன்புடை நன்மொழி அளை இவிளிவின்று
இருள் நிற முன்னீர் வளை இய உலகத்து
ஒருநீ ஆகித் தோன்ற விழுமிய
பெறலரும் பரிசில் நல்கு மதி பலவுடன்.

17 வேறு பல் துகிலின் நுடங்கி அகில் சுமந்து
ஆர முழு முதல் உருட்டி வேரல்
பூவுடை அலங்கு சினை புலம்ப வேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியின் தொடுத்த
தண்கமழ் அலர் இறால் சிதைய நன்பல

18 ஆசினி முது சுளை கலாவமீ மிசை
நாக நறுமலர் உதிர ஊகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப்பூ நுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீ இத்தத் துற்று.

19 நன்பொன் மணிநிறம் கிளரப் பொன் கொழியா
வாழை முழு முதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்
கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்.

20 கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சாய் அன்ன
குரூஉ மயிர் யாக்கைக் குடா அடி உளியம்
பெருங்கல் விடர் அளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச் சேண் நின்று.
இழுமென இழிதரும் அருவிப் பழமுதிர் சோலை
மலை கிழவோனே!

21. குன்றம் !எறிந்தாய் குரைகடலில் சூர் தடிந்தாய்
புன்தலைய பூதப்பொருபடையாய்-என்றும்
இளையாய் அழகியாய் ஏறூர்ந்தான் ஏறே
உளையாய் என் உள்ளத்து உறை.

22. குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்று அங்கு அமரர் இடர் தீர்த்ததுவும் இன்று என்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்.

23. வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.

24. இன்னம் ஒருகால் எனது இடும்பைக் குன்றுக்குக்
கொல் நவில் வேல் சூர்தடிந்த கொற்றவா - முன்னம்
பனிவேய் நெடுங்குன்றம் பட்டுருவத் தொட்ட
தனிவேலை வாங்கத் தகும்.

25. உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா வானோர் கொடிய வினை தீர்த்தருளும்
வேலப்பா செந்தில்வாழ் வே.

26. அஞ்சு முகம் தோன்றில் ஆறு முகம் தோன்றும்
வெஞ்ச மரில் அஞ்சல் என வேல் தோன்றும் நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இரு காலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்.

27. முருகனே செந்தில் முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே - ஒருகைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைத்தொழுவேன் நான்.

28. காக்கக் கடவியநீ காவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடங்காண் இரங்காய் இனி.

29. பரங்குன்றில் பன்னிருகைக் கோமான் தன் பாதம்
கரங்கூப்பிக் கண்குளிரக் கண்டு - சுருங்காமல்

ஆசையால் நெஞ்சே அணி முருகாற்றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.

30. நக்கீரர் தாமுரைத்த நன் முருகாற்றுப்படையைத்
தற்கோல நாள்தோறும் சாற்றினால் முற்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளித்
தான் நினைத்த எல்லாம் தரும்.

31. கொண்ட பலிநுமக்கும் கொய்தார் குமரர்க்கும்
புண்டரிக மாதினுக்கும் போதுமே மண்டி
உயரிழந்தார் சேர் புறங்காட் டோரிவாய் ஈர்ப்ப
மயிரிழந்த வெண்டலை வாய்வந்து.

32. கொண்டற் கார்எயிற்றுச் செம்மருப்பு இறாலின்
புண்படு சிமையத்துப் புலவு நாறு குடுமி
வரையோன் மருக புனலாள் கொழுந
இளையோன் தாதை முதுகாட்டுப் பொருநநின்
நீறாடு பொலங்கழல் பரவ
வேறாங்கு கவர்க்குமோ வீடு தரு நெறியே.

33. வேந்துக்க மாக்கடற் சூரன் முன்னாள் படவென்றி கொண்ட
சேந்தற்குத் தாதையிவ் வையம் அளந்த தெய்வத்திகிரி
ஏந்தற்கு மைத்துனத் தோழனின்தேன் மொழி வள்ளியென்னும்
கூந்தற் கொடிச்சி தன்மாமன்வெம்மால்விடைக்கொற்றவனே.

34. சு டர்ப்பிழம்பு தழைத்த அழல்தனி நெடுவேல்
சேய் மூவுலகம் வலம் வர வேயக்
கொன்றையம் படலை துன்று சடைக் கிடந்த
ஓங்கிருந் தாதையை வளாஅய் மாங்கனி
அள்ளல் தீஞ்சுவை அருந்திய
வள்ளற்கு இங்கென் மனங்கனிந் திடுமே.

35. பரவித் தனை நினை யக்கச்சி ஏகம்பர் பண்ணும் மையல்
வரவித் தனையுள்ளது எங்கறிந் தேன் முன் அவர் மகனார்
புரவித் தனையடிக்கக் கொடி தாய் விடியா இரவில்
அரவித் தனையுங் கொண்டார் மட வார் முன்றில் ஆட்டிடவே.

36. கொம்பனைய வள்ளி கொழு நன் குறுகாமே
வம்பனைய மாங்கனியை நாரையூர் - நம்பனையே
தன்னவலம் செய்து கொளும் தாழ் தடக்கையாய் என் நோய்
பின்னவலம் செய்வதெனோ பேசு.

37. மலஞ்செய்த வல்வினை நோக்கி உலகை வலம் வருமப்
புலஞ் செய்த காட்சிக் குமரற்கு முன்னே புரிசடை மேல்
சலஞ் செய்த நாரைப் பதியரன் தன்னைக் கனிதரவே
வலஞ் செய்து கொண்ட மதக்களிறே உன்னை வாழ்த்துவனே.

38. ஏறிய சீர் வீரணக்குடி ஏந்திழைக்கும் இருந்தேன்
நாறிய பூந்தார்க் குமரற்கும் முன்னினை நண்ணலரைச்
சீறிய வெம்பணைச் சிங்கத்தினுக் கிளையானை விண்ணோர்
வேறியல் பால் தொழு நாரைப் பதியுள் விநாயகனே.

39. அமரா அமரர் தொழுஞ்சரண் நாரைப் பதி அமர்ந்த
குமரா குமரற்கு முன்னவனே கொடித் தேர் அவுணர்
தமரா சறுத்தவன் தன்னுழைத் தோன்றினனே என நின்ற
அமரா மனத்தவர் ஆழ் நரகத்தில் அழுந்துவரே.

40 சத்தித் தடக்கைக் குமரன் நல் தாதைதன் தானம் எல்லாம்
முத்திப் பத மொரோர் வெண்பா மொழிந்து முடியரசா
மத்திற்கு மும்மை நன்றானால் காய் ஐயம் ஏற்றலென்னும்
பத்திக் கடல்ஜ யடிகளா கின்ற நம் பல்லவனே.

41. கொடுத்தான் முதலை கொள் பிள்ளைக் குயிர் அன்று புக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவி அவி நாசியை வேடர் சுற்றம்
படுத்தான் திருமுருகன் பூண்டியினில் பராபரத்தேன்
மடுத்தான் அவனென்பர் வன்தொண்ட னாகின்ற மாதவனே.

42. முன்னே வந்து எதிர் தோன்றும் முருகனோ? பெருகு ஒளியால்
தன்னேரில் மாரனோ? தார் மார்பின் விஞ்சையனோ?
மின் நேர் செஞ்சடை அண்ணல் மெய்யருள் பெற்று உடையவனோ?
என்னே என் மனம் திரித்த இவன் யாரோ என நினைந்தார்.

43. பொரு அரும் சிறப்பின் மிக்கார் இவர்க்கு இனிப் புதல்வர் பேறே
அரியது என்று எவரும் கூற அதற்படு காதலாலே
முருகலர் அலங்கல் செவ்வேள் முருகவேள் முன்றில் சென்று
பரவுதல் செய்து நாளும் பராய்க் கடன் நெறியில் நிற்பார்.

44. வாரணச் சேவலோடும் வரி மயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள் தூக்கிச் சுரும்பு கதம்பம் நாற்றிப்
போரணி நெடுவேலோற்குப் புகழ்புரி குரவை தூங்கப்
பேரணங்கு ஆடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை.

45. பயில் வடுப் பொலிந்த யாக்கை வேடர் தம்பதியாம் நாகற்கு
எயிலுடைப் புரங்கள் செற்ற எந்தையார் மைந்தர் ஆன
மயிலுடைக் கொற்ற ஊர்தி வரையுரங் கிழித்த திண்மை
அயிலுடைத் தடக்கை வென்றி அண்ணலார் அருளினாலே.

46. வேடர் தம் கோமான் நாகன் வென்றி வேள் அருளால் பெற்ற
சேடரின் மிக்க செய்கைத் திண்ணன் வில் பிடிக்கின்றான்' என்று
ஆடியல் துடியும் சாற்றி அறைந்தபேர் ஓசை கேட்டு
மாடுஉயர் மலைகள் ஆளும் மறக்குலத் தலைவர் எல்லாம்.

47. அஞ்சு வன் கரத்தாறு இழி மதத்தோர்
ஆனை நிற்கவும் அரை இருள் திரியும்
மஞ்சு நீள்வது போலும் மா மேனி
மலர்ப் பதங்களில் வண் சிலம்பு ஒலிப்ப
நஞ்சு பில்கு எயிற்று அரவ வெற்றரையின்
நாம மூன்றிலைப் படை உடைப் பிள்ளை
எஞ்சல் இன்றி முன் திரியவும் குன்றம்
எறிந்த வேலவன் காக்கவும் இசையும்.

48. பூந்தண் பொன்னி எந் நாளும் பொய்யாது அளிக்கும் புனல் நாட்டு
வாய்ந்த மண்ணித் தென் கரையில் மன்ன முன் நாள் வரை கிழிய
ஏந்தும் அயில் வேல் நிலை காட்டி இமையோர் இகல் வெம் பகை
- கடக்கும்
சேந்தன் அளித்த திருமறையோர் மூதூர் செல்வச் சேய்ஞலூர்.

49. செய்ய மேனிக் கருங்குஞ்சிச்
செழுங்கஞ்சுகத்துப் பயிரவர் யாம்
உய்ய அமுது செய்யாதே
ஒளித்தது எங்கே எனத் தேடி
மையல் கொண்டு புறத்து அணைய
மறைந்த அவர் தாம் மலை பயந்த
தையலோடும் சரவணத்துத்
தனயரோடும் தாம் அணைவார்.

50. ஆரூரர் அவர் தமக்கு விடை அருளி அங்கு அன்று
காரூரும் மலைநாடு கடந்து அருளிக் கல் சுரமும்
நீரூரும் கான் யாரும் நெடுங் கானும் பலகழிய
சீரூரும் திருமுருகன் பூண்டி வழிச்செல்கின்றார்.

51. திரு முருகன் பூண்டி அயல் செல்கின்ற போழ்தின் கண்
பொருவிடையார் நம்பிக்குத் தாமே பொன் கொடுப்பதலால்
ஒருவர் கொடுப்பக் கொள்ள ஒண்ணாமைக்கு அதுவாங்கிப்
பெருகருளால் தாம் கொடுக்கப் பெறுவதற்கோ அது அறியோம்.

52. ஆரூரர் தம்பால் அவ்வேடுவர் சென்று அணையாதே
நீரூருஞ் செஞ்சடையார் அருளினால் நீங்க அவர்
சேரூராம் திருமுருகன் பூண்டியினில் சென்று எய்திப்
போரூரு மழவிடையார் கோயிலை நாடிப் புக்கார்.

53. செறிவுண்டு என்று திருத்தொண்டில்
சிந்தை செல்லும் பயனுக்கும்
குறியுண்டு ஒன்றாகிலும்
குறை ஒன்று இல்லோம் நிறை கருணையினால்
வெறியுண் சோலைத் திருமுருகன்
பூண்டி வேடர் வழிபறிக்க
பறியுண்டவர் எம்பழவினை வேர்
பறிப்பார் என்னும் பற்றாலே.

54. செற்றார்தம் புரம் எரித்த சிலையார் செல்வத்
திருமுருகன் பூண்டியினில் செல்லும் போதில்
சுற்றாரும் சிலை வேடர் கவர்ந்து கொண்டு

தொகு நிதியின் பரப்பு எல்லாம் சுமந்து கொண்டு
முற்றாத முலை உமையாள் பாகன் பூத
முதற்கணமே உடன் செல்ல முடியாப் பேறு
பெற்றார் தம் கழல் பரவ அடியேன் முன்னைப்
பிறவியினில் செய்த தவம் பெரியவாமே..

**வேலுண்டு வினையில்லை**

வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை மனமே
கந்தனுண்டு கவலையில்லை மனமே
வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை மனமே
கந்தனுண்டு கவலையில்லை மனமே
நீலகண்டன் நெற்றிக் கண்ணில்
நெருப்பு வடிவாகத் தோன்றி
நிருதர் குலத்தை அழித்த நிர்மலன் - முருகன்
வேலவனே என்றுதினம் வேண்டிடும் அடியவர்க்கு
வேண்டும் வரம் தந்திடுவான் பாருமே
வேலன் வேண்டும் வரம் தந்திடுவான்
வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை மனமே
கந்தனுண்டு கவலையில்லை மனமே
நெற்றியிலே நீறணிந்து
நெறியாக உனை நினைந்து
பற்றினேன் உள்ளமதில் உன்னடி - முருகா
ஓயாது, ஒழியாது உன் நாமம் சொல்பவர்க்கு
உயர் கதிதான் தந்திடுவாய் முருகா - குமரா
வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை மனமே

கந்தனுண்டு கவலையில்லை மனமே
விழிகளொரு பன்னிரண்டு
உடையவனே என்று சொல்லி
விழிகளிலே நீர் பெருக்கி நின்றேன்
முருகா
கருணையே வடிவமான கந்தசாமித் தெய்வமே
கழலடியைக் காட்டி என்னை ஆளுவாய்
கந்தனே
வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை மனமே
கந்தனுண்டு கவலையில்லை மனமே

வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறைவில்லை மனமே
கந்தனுண்டு கவலையில்லை மனமே மனமே மனமே

**கந்த சட்டி கவசம்**

குறள் வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம்; நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்து ஓங்கும்;
நிஷ்டையுங் கைகூடும்; நிமலர் அருள் கந்தர்
சட்டிகவசந் தனை.

காப்பு: அமரர் இடர் தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி.

**கந்த சட்டிகவசம் நூல்**

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடஞ்செய்யும் மயில்வா கனனார்

கையில் வேலால் எனைக் காக்கவென்று உவந்து
வரவர வேலாயுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக!
வாசவன் மருகா வருக வருக!
நேசக் குறமகள் நினைவோன்! வருக
ஆறுமுகம் படைத்த ஐயா! வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிற நிற நிறென

வசர ஹணபவ வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங்குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டு இலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங்கிலியும்
கிலியுஞ்சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்று என் முன் நித்தமும் ஒளிரும்

சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறுஇடும் நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்

நன்னெறி நெற்றியில் நவமணிச்சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண்டலமும்
ஆறிரு திண்புயத்து அழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நககென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
எந்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்து உதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று

உன் திருவடியை உறுதியென் றெண்ணும்
என் தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க
நாசிகள் இரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னம் இரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவேல் இருதோள் வளம்பெறக் காக்க
பிடரிகள் இரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாண்ஆம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்டம் இரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கை இரண்டும் முரண்வேல் காக்க
பின்கை இரண்டும் பின்னவள் இரக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க

எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தண்ணில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அணையவேல் காக்க

ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கி சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லிசூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வாலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழங்கடை முனியும்

கொள்ளிவாப் பேய்களும் குறளைப்பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடி விழுந்து ஓடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்

பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகள் உடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓது மஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாள் எனைக் கண்டால் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டு அலறி மதிகெட்டு ஓடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கைகால் முறியக்

கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணல் அதுஆக
விடு விடு வேலை வெருண்டது ஓட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்து ஓட

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துயரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ்சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணாள் அரசரும் மகிழ்ந்து உறவாகவும்

உன்னைத் துதித்த உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொளிபவனே!
திரிபுர பவனே! திகழ்ஒளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே! கதிர்வே லவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!

கதிர்காமத்து உறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மாமலையுறும் செங்கல்வராயா!
சமரா புரிவாழ் சண்முகத்து அரசே

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யான் உனைப்பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்

சித்தி பெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குறமகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சட்டிகவசம் விரும்பிய

பாலன் தேவராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகிக்
கந்தர் சட்டிகவசம் இதனைச்

சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத்தாறுரு கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரொட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை

வழியாய் காண மெய்யாய் விளங்கும்
விழியால் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி

அறிந்தென உள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனாபதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சிப் புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே

மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவ ஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்!

“ஸ்ரீ கந்த சட்டிகவசம் முற்றிற்று”

**ஓம் சரவணபவ ஆறு எழுத்து மந்திரம்**

சரவணபவ மந்திரத்தை சக்கர முறையில் (மாற்றி மாற்றி) 6 முறை சொல்வதால்: கந்த சட்டி கவசத்தை 36 முறை ஓதுவதற்கு இணையான பலனைத் தரும் என்று பெரியோர்கள் கூறுவதன் பின்னணியில் ஒரு கணித மற்றும் ஆன்மீக ரகசியம் உள்ளது.

இதன் விளக்கத்தை கீழே காண்போம்:

1. சக்கர கணித விளக்கம் (6 x 6 = 36)

சரவணபவ மந்திரம் என்பது ஆறெழுத்து மந்திரம். இதைச் சக்கர வரிசையில் (Permutation) மாற்றும்போது ஆறு விதமான அடுக்குகள் உருவாகின்றன:

| | |
|---|---|
| ஓம் சரவணபவ | [அனைத்தும் வசமாகும்] |
| ரவணபவச | [செல்வம் பெருகும்] |
| வணபவசர | [நோய் நீங்கும்] |
| ணபவசரவ | [எதிரிகளை வெல்ல] |
| பவசரவண | [அனைவரும் விரும்புவர்] |
| வசரவணப | [தீமைகள் செயலிழக்கும்] |

இந்த 6 வரிசைகளையும் நீங்கள் ஒரு சுற்றாகச் சொல்லும்போது, மந்திரத்தின் சக்தி 6 மடங்காகப் பெருகுகிறது. இந்த ஆறு வரிசைகளையும் தலா ஆறு முறை (6 வரிசை x 6 முறை) சொல்லும்போது அது 36 அலைவரிசைகளை உருவாக்குகிறது. கந்த சஷ்டி கவசத்தின் முழுமையான ஆற்றல் இந்த 36 சுழற்சிகளுக்குள் அடங்கிவிடுவதால், இது 36 முறை கவசம் படித்ததற்குச் சமமாகக் கருதப்படுகிறது.

**திருமுருகாற்றுப்படை** தோன்றிய பின்னர், பிற்காலச் சான்றோர்கள் பாடியருளிய நேரிசை வெண்பாக்கள் சில பின்வருமாறு:

'குன்றம் எறிந்தாய்! குரைகடலில் சூர்தடிந்தாய்!
புன்தலைய பூதப்பொரு படையாய் - என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறுஊர்ந்தான் ஏறே!
உளையாய்! என் உள்ளத்து உறை.' - - - - 1

'குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றுஅங்கு அமரர் இடர் தீர்த்ததுவும் - இன்று என்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்!' ------- 2

'வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.' ---------- 3

'இன்னம் ஒருகால் எனது இடும்பைக் குன்றுக்கும்
கொல்நவில் வேல்சூர் தடிந்த கொற்றவா! - முன்னம்
பனிவேய்நெடுங் குன்றம்பட்டு உருவத் தொட்ட
தனி வேலை வாங்கத் தகும்.' -------- 4

'உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தில் வாழ்வே!' ------- 5

'அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் 'அஞ்சல்!' எனவேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
'முருகா!' என்று ஓதுவார் முன்.' ----- 6

'முருகனே! செந்தில் முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! ஒருகை முகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.' ------ 7

'காக்க கடவியநீ காவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா! - பூக்கும்
கடம்பா! முருகா! கதிர்வேலா! நல்ல
இடம்காண் இரங்காய் இனி!' -- ----- 8

'பரங்குன்றில் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரம்கூப்பி கண்குளிரக்கண்டு - சுருங்காமல்

ஆசையால் நெஞ்சே! அணிமுருகு ஆற்றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.' ------- 9

'நக்கீரர்தாம் உரைத்த நல்முருகு ஆற்றுப்படையை
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முன்கோல
மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளி
தான் நினைத்த எல்லாம் தரும்.'------ 10

திருமுருகாற்றுப்படை முற்றிட்டு

# கந்த குரு கவசம்

(சிறீமத் சத்குரு சாந்தானந்த சுவாமிகள் அருளிய)

## விநாயகர் வாழ்த்து

கலியுகத் தெய்வமே கந்தனுக்கு மூத்தோனே
முஷpக வாகனனே மூலப் பொருளோனே
கந்தாகுரு கவசத்தை கலிதோஷம் நீங்கிடவே
திருவடியின் திருவருளால் செப்புகிறேன் காத்தருள்வாய்
சித்தி விநாயக ஜயமருள் போற்றுகிறேன் ......

சிற்பர கணபதே நற்கதியும் தந்தருள்வாய்
கணபதி தாளிணையைக் கருத்தினில் வைத்திட்டேன்
அச்சம் தீர்த்து என்னை கத்தருள்வீரே.

## செய்யுள்

கந்தா சரணம் கந்தா சரணம்
சரவணபவ குகா சரணம் சரணம் ......

குருகுகா சரணம் குருபரா சரணம்
சரணம் அடைந்திட்டேன் கந்தா சரணம்
தனைத் தானறிந்து நான் தன்மயமாகிடவே
கந்தகிரி குருநாதா தந்திடுவீர் ஞானமுமே
தத்தகிரி குருநாதா வந்திடுவீர் வந்திடுவீர் ......

அவதூத சத்குருவாய் ஆண்டவனே வந்திடுவீர்
அன்புருவாய் வந்தென்னை ஆட்கொண்ட குருபரனே
அறம் பொருள் இன்பம் வீடுமே தந்தருள்வாய்
தந்திடுவாய் வரமதனை கந்தாகுருநாதா
சண்முகா சரணம் சரணம் கந்தா குரோ ...... (20)

காத்திடுவாய் காத்திடுவாய் கந்தாகுரு நாதா
போற்றிடுவேன் போற்றிடுவேன் புவனகுரு நாதா
போற்றி போற்றி கந்தா போற்றி
போற்றி போற்றி முருகா போற்றி
அறுமுகா போற்றி அருட்பதம் அருள்வாய் ...... (25)
தகப்பன் ஸ்வாமியே என் இதயத்துள் தங்கிடுவாய்
சுவாமி மலைதனில் சொன்னதனைச் சொல்லிடுவாய்
சிவகுரு நாதா செப்பிடுவாய் ப்ரணவமதை
அகக்கண் திறக்க அருள்வாய் உபதேசம்
திக்கெலாம் வென்று திருச்செந்தில் அமர்ந்தோனே ...... (30)

ஆறுமுக சுவாமி உன்னை அருட்ஜோதியாய்க் காண
அகத்துள்ளே குமரா நீ அன்பு மயமாய் வருவாய்
அமரத் தன்மையினை அனுக்கிரகித்திடுவாயே
வேலுடைக் குமரா நீ வித்தையும் தந்தருள்வாய்
வேல் கொண்டு வந்திடுவாய் காலனை விரட்டிடவே ...... (35)

தேவரைக் காத்த திருச்செந்தில் ஆண்டவனே
திருமுருகன் பூண்டியிலே திவ்ய ஜோதியான கந்தா
பரஞ் சோதியும் காட்டி பரிபூர்ணமாக்கிடுவாய்
திருமலை முருகா நீ திடஞானம் அருள் புரிவாய்
செல்வமுத்துக் குமரா மும்மலம் அகற்றிடுவாய் ...... (40)

அடிமுடி யறியவொணா அண்ணா மலையோனே
அருணாசலக் குமரா அருணகிரிக்கு அருளியவா
திருப்பரங்கிரிக் குகனே தீர்த்திடுவாய் வினை முழுதும்
திருத்தணி வேல்முருகா தீரனாய் ஆக்கிடுவாய்
எட்டுக்குடிக் குமரா ஏவல்பில்லி சூனியத்தை ...... (45)

பகைவர் சூதுவாதுகளை வேல்கொண்டு விரட்டிடுவாய்
எல்லாப் பயன்களும் எனக்குக் கிடைத்திடவே
எங்கும் நிறைந்த கந்தா எண்கண் முருகா நீ
என்னுள் அறிவாய் நீ உள்ளொளியாய் வந்தருள்வாய
திருப்போரூர் மாமுருகா திருவடியே சரணமய்யா ...... (50)

அறிவொளியாய் வந்து நீ அகக்கண்ணைத் திறந்திடுவாய்
திருச்செந்தூர் ஷண்முகனே ஜகத்குருவிற் கருளியவா
ஜகத்குரோ சிவகுமரா சித்தமலம் அகற்றிடுவாய்
செங்கோட்டு வேலவனே சிவானுபூதி தாரும்
சிக்கல் சிங்காரா ஜீவனைச் சிவனாக்கிடுவாய் ...... (55)

குன்றக்குடிக் குமரா குருகுகனாய் வந்திடப்பா
குமரகிரிப் பெருமானே மனத்தையும் மாய்த்திடுவீர்
பச்சைமலை முருகா இச்சையைக் களைந்திடப்பா
பவழமலை ஆண்டவனே பாவங்களைப் போக்கிடப்பா
விராலிமலை சண்முகனே விரைவில் நீ வந்திடப்பா ...... (60)

வயலூர் குமாரகுரோ ஞானவரமெனக் கருள்வீரே
வெண்ணைமலை முருகா மெய்வீட்டைத் தந்திடுவீர்
கதிர்க்காம வேலவனே மனமாயை அகற்றிடுவாய்
காந்த மலைக் குமரா கருத்துள் வந்திடுவீர்
மயிலத்து முருகா நீ மனத்தகத்துள் வந்திடுவீர் ...... (65)

கஞ்சமலை சித்தகுரோ கண்ணொளியாய் வந்திடுவீர்
குமரமலை குருநாதா கவலையெலாம் போக்கிடுவீர்
வள்ளிமலை வேல்முருகா வேல்கொண்டு வந்திடுவீர்
வடபழனி ஆண்டவனே வல்வினைகள் போக்கிடுவீர்
ஏழுமலை ஆண்டவனே எத்திக்கும் காத்திடுவீர் ...... (70)

ஏழ்மை அகற்றிக் கந்தா எமபயம் போக்கிடுவீர்
அசையாத நெஞ்சத்தில் அறிவாக நீ அருள்வாய்
அறுபடைக் குமரா மயிலேறி வந்திடுவாய்
பணிவதே பணியென்று பணித்தனை நீ எனக்கு
பணிந்தேன் கந்தா உன்பாதம் பணிந்துவப்பேன் ...... (75)

அருட்பெருஞ் சோதியே அன்பெனக் கருள்வாயே
படர்ந்த அன்பினை நீ பரப்பிரம்மம் என்றனையே
உலகெங்கும் உள்ளது ஒருபொருள் அன்பேதான்
உள்ளுயிராகி இருப்பதும் அன்பென்பாய்
அன்பே குமரன் அன்பே கந்தன் ...... (80)

அன்பே ஓம் என்னும் அருள்மந்திரம் என்றாய்
அன்பை உள்ளத்திலே அசையாது அமர்த்திடுமோர்
சக்தியைத் தந்து தடுத்தாட் கொண்டிடவும்
வருவாய் அன்பனாய் வந்தருள் கந்தகுரோ
யாவர்க்கும் இனியன் நீ யாவர்க்கும் எளியன் நீ ...... (85)

யாவர்க்கும் வலியன் நீ யாவர்க்கும் ஆனோய் நீ
உனக்கொரு கோயிலை என் அகத்துள்ளே புனைவேனே
சிவசக்திக் குமரா சரணம் சரணம் ஐயா
அபாயம் தவிர்த்துத் தடுத்தாட் கொண்டருள்வாய்
நிழல்வெயில் நீர்நெருப்பு மண்காற்று வானதிலும் ...... (90)

பகைமையை அகற்றி அபயமளித்திடுவீர்
உணர்விலே ஒன்றி என்னை நிர்மலமாக்கிடுவாய்
யானென தற்ற மெய்ஞ் ஞானமது அருள்வாய் நீ
முக்திக்கு வித்தான முருகா கந்தா
சதுர்மறை போற்றும் ஷண்முக நாதா ...... (95)

ஆகமம் ஏத்தும் அம்பிகை புதல்வா
ஏழையைக் காக்க நீ வேலேந்தி வந்திடுவாய்
தாயாய்த் தந்தையாய் முருகா தக்கணம் நீ வருவாய்
சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில் நீ வருவாய்
பரம்பொருளான பாலனே கந்தகுரோ ...... (100)

ஆதிமூலமே அருவாய் உருவாய் நீ
அடியனைக் காத்திட அறிவாய் வந்தருள்வாய்
உள்ளொளியாய் முருகா உடனே நீ வா வா வா
தேவாதி தேவா சிவகுரோ வா வா வா
வேலாயுதத்துடன் குமரா விரைவில் நீ வந்திடப்பா ...... (105)

காண்பன யாவுமாய்க் கண்கண்ட தெய்வமாய்
வேதச் சுடராய் மெய்கண்ட தெய்வமே
மித்தையாம் இவ்வுலகை மித்தையென்று அறிந்திடச்செய்
அபயம் அபயம் கந்தா அபயம் என்று அலறுகின்றேன்
அமைதியை வேண்டி அறுமுகவா வாவென்றேன் ......

உன்துணை வேண்டினேன் உமையவள் குமரா கேள்
அச்சம் அகற்றிடுவாய் அமைதியைத் தந்திடுவாய்
வேண்டியது உன்அருளே அருள்வது உன் கடனேயாம்
உன் அருளாலே உன்தாள் வணங்கிட்டேன்
அட்டமா சித்திகளை அடியனுக்கு அருளிடப்பா ......

அஜபை வழியிலே அசையாமல் இருத்திவிடு
சித்தர்கள் போற்றிடும் ஞானசித்தியும் தந்துவிடு
சிவானந்தத் தேனில் திளைத்திடவே செய்துவிடு
அருள் ஒளிக் காட்சியை அகத்துளே காட்டிவிடு
அறிவை அறிந்திடும் அவ்வருளையும் நீ தந்துவிடு ......

அனுக்கிரகித்திடுவாய் ஆதிகுருநாதா கேள்
கந்தகுரு நாதா கந்தகுரு நாதா
தத்துவம் மறந்து தன்னையும் நான் மறந்து
நல்லதும் கெட்டதும் நான் என்பதும் மறந்து
பாவ புண்ணியத்தோடு பரலோகம் மறந்திடச்செய் ......

அருள் வெளிவிட்டு இவனை அகலாது இருத்திடுவாய்
அடிமையைக் காத்திடுவாய் ஆறுமுகக் கந்தகுரோ
சித்தியிலே பெரிய ஞானசித்தி நீ அருள
சீக்கிரமே வருவாய் சிவானந்தம் தருவாய்
சிவானந்தம் தந்தருளி சிவசித்தர் ஆக்கிடுவாய் ......

சிவனைப் போல் என்னைச் செய்திடுவது உன் கடனே
சிவசத் குருநாதா சிவசத் குருநாதா
கந்தா குருநாதா கதறுகிறேன் கேட்டிடுவாய்
தாளினைப் பிடித்தேன் தந்திடு வரம் எனக்கு
திருவருட் சக்தியைத் தந்தாட் கொண்டிடுவாய் ......

சத்ருப் பகைவர்களை ஷண்முகா ஒழித்திட்டு
கிழக்குத் திசையிலிருந்து க்ருபாகரா காப்பாற்றும்
தென்கிழக்குத் திசையிலிருந்து தீனபந்தோ காப்பாற்றும்
தென்திசையிலும் என்னைத் திருவருளால் காப்பாற்றும்
தென்மேற்கிலும் என்னைத் திறன்வேலால் காப்பாற்றும் ......

மேற்குத் திக்கில் என்னை மால்மருகா கத்தருள்வாய்
வடமேற்கிலும் என்னை மயிலோனே கத்தருள்வாய்
வடக்கில் என்னைக் காப்பாற்ற வந்திடுவீர் சத்குருவாய்
வடகிழக்கில் எனக்காக மயில்மீது வருவீரே
பத்துத் திக்குத் தோறும் எனை பறந்துவந்து கத்தருள்வாய்...

என் சிகையையும் சிரசினையும் சிவகுரோ கத்தருள்வாய்
நெற்றியும் புருவமும் நினதருள் காக்கட்டும்
புருவங்களுக்கிடையே புருஷோத்தமன் காக்கட்டும்
கண்கள் இரண்டையும் கந்தவேல் காக்கட்டும்
நாசிகள் இரண்டையும் நல்லவேல் காக்கட்டும் ......

செவிகள் இரண்டையும் சேவற்கொடி காக்கட்டும்
கன்னங்கள் இரண்டையும் காங்கேயன் காக்கட்டும்
உதட்டினையும் தான் உமாசுதன் காக்கட்டும்
நாக்கை நன் முருகன் நயமுடன் காக்கட்டும்
பற்களைக் கந்தன் பலம்கொண்டு காக்கட்டும் ......

கழுத்தைக் கந்தன் கைகளால் காக்கட்டும்
தோள்கள் இரண்டையும் தூய வேல் காக்கட்டும்
கைகள் விரல்களைக் கார்த்திகேயன் காக்கட்டும்
மார்பையும் வயிற்றையும் வள்ளிமணாளன் காக்கட்டும்
மனத்தை முருகன்கை மாத்தடிதான் காக்கட்டும் ......

மனதில் கந்தன் இனிது நிலைத்திருக்கட்டும்
உதரத்தை யெல்லாம் உமைமைந்தன் காக்கட்டும்
தொப்புள் மற்றும் பிறப்புறுப்புக்கள் (நாபிகுஹ்யம் ) லிங்கம்
நவயுடைக் குதத்தோடு இடுப்பை முழங்காலை இணையான
கால்களையும்
புறங்கால் விரல்களையும் பொருந்தும் உகிர் அனைத்தையுமே....

உரோமத் துவாரம் எல்லாம் உமைபாலா கத்தருள்வாய்
தோல் ரத்தம் மஜ்ஜையையும் மாம்சமென்பு மேதசையும்
அறுமுகவா காத்திடுவீர் அமரர் தலைவா காத்திடுவீர்
என் அகங்காரமும் அகற்றி அறிவொளியாய் இருந்தும்
முருகா எனைக் காக்க வேல் கொண்டு வந்திடுவீர் ...... (170)

பாபத்தைப் பொசுக்கிப் பாரெல்லாம் சிறப்புறவே
ஓம் ஸௌம் சரவணபவ ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் என்றும்
க்லௌம் ஸௌம் போற்றி என்று சேர்த்திடடா நாள்தோறும்
ஓமிருந்து போற்றிவரை ஒன்றாகச் சேர்த்திடடா
ஒன்றாகக் கூட்டியுமே உள்ளத்திலே இருத்தி ...... (175)
ஒருமனத் தோடு நீ உருவையும் ஏத்திடடா
முருகனின் மூலமிது முழுமனத்தோடு ஏத்திட்டால்
மும்மலம் அகன்றுவிடும் முக்தியுந்தன் கையிலுண்டாம்
முக்தியை வேண்டியுமே எத்திக்கும் செல்ல வேண்டாம்
முருகன் இருப்பிடமே முக்தித் தலம் ஆகுமப்பா ...... (180)

இதயத்தில் முருகனை இருத்திவிடு இக்கணமே
இக்கணமே மூலமந்த்ரம் ஏத்திவிடு ஏத்திவிடு
முலமதை ஏத்துவோர்க்கு காலபயம் இல்லையடா
காலனை நீ வென்றிட கந்தனைப் பற்றிடடா
சொன்னபடிச் செய்தால் சுப்ரமண்ய குருநாதன் ...... (185)

தண்ணொளிப் பெருஞ்சுடராய் உன்னுள்ளே தானிருப்பான்
ஜகமாயை ஜயித்திடவே செப்பினேன் மூலமுமே
முலத்தை நீ ஜபித்தே முக்தனுமாகிடடா
அக்ஷர லக்ஷமிதை அன்புடன் ஜபித்துவிடில்
எண்ணிய தெலாம்கிட்டும் எமபய மகன்றோடும் ...... (190)

முவுலகும் பூஜிக்கும் முருகனருள் முன்னிற்கும்
பூவுலகில் இணையற்ற பூஜ்யனுமாவாய் நீ
கோடித்தரம் ஜபித்துக் கோடிகாண வேண்டுமப்பா
கோடிகாணச் சொன்னதை நீ நாடிடுவாய் மனமே
ஜன்மம் கடைத்தேற ஜபித்திடுவாய் கோடியுமே ...... (195)

வேதாந்த ரகசியமும் வெளியாகும் உன்னுள்ளே
வேத சூட்சுமத்தை விரைவாகப் பற்றிடலாம்
சுப்ரமண்யகுரு ஜோதியாயுள் தோன்றிடுவான்
அருட் பெரும் ஜோதியான ஆறுமுக ஸ்வாமியுமே
அந்தர் முகமிருந்து ஆட்கொள்வான் சத்தியமாய் ...... (200)

சித்தியையும் முக்தியையும் கந்தாகுரு தந்திடுவான்
நின்னையே நான் வேண்டி நித்தமும் ஏத்துகிறேன்
மெய்யறிவாகக் கந்தா வந்திடுவாய் இவனுளே நீ
வந்திடுவாய் மருவிடுவாய் பகுத்தறிவாகவே நீ
பகுத்தறி வோடிவனைப் பார்த்திடச் செய்திடப்பா ...... (205)

பகுத்தறிவான கந்தன் பரங்குன்றில் இருக்கின்றான்
பழனியில் நீயும் பழம்ஜோதி ஆனாய் நீ
பிரம்மனுக்கு அருளியவா ப்ரணவப் பொருளோனே
பிறவா வரமருளி ப்ரம்ம மயமாக்கிடுவாய்
திருச்செந்தூரில் நீ சக்திவேல் தாங்கி விட்டாய் ...... (210)

பழமுதிர் சோலையில் நீ பரஞ்ஜோதி மயமானாய்
ஸ்வாமி மலையிலே சிவஸ்வாமிக் கருளிய நீ
குன்றுகள் தோறும் குருவாய் அமர்ந்திட்டோய்
கந்தகிரியை நீ சொந்தமாக்கிக் கொண்டனையே
கந்தா குருநாதா கந்தாஸ்ரம ஜோதியே ...... (215)

பிறப்பையும் இறப்பையும் பெயர்த்துக் காத்திடுவாய்
பிறவாமை என்கின்ற பெருவரம் நீ தந்திடுவாய்
தத்துவக் குப்பையை மறந்திடச் செய்திடுவாய்
எந்த நினைப்பையும் எரித்து நீ காத்திடுவாய்
கந்தா சரணம் கந்தா சரணம் ...... (220)

சரணம் அடைந்திட்டேன் சடுதியில் வாருமே
சரவண பவனே சரவண பவனே
உன்னருளாலே நான் உயிரோடிருக்கின்றேன்
உயிருக்குயிரான கந்தா உன்னிலென்னைக் கரைத்திடப்பா
என்னில் உன்னைக் காண எனக்கு வரமருள்வாய் ...... (225)

சீக்கிரம் வந்து சிவசக்தியும் தந்தருள்வாய்
இடகலை பிங்கலை ஏதும் அறிந்திலேன் நான்
இந்திரியம் அடக்கி இருந்தும் அறிகிலேன் நான்
மனதை அடக்க வழி ஒன்றும் அறிந்திலேன் நான்
கந்தா உன் திருவடியைப் பற்றினேன் சிக்கெனவே ......

சிக்கெனப் பற்றினேன் செப்பிடுவீர் உபதேசம்
காமக் கசடுகள் யாவையும் களைந்திடுவாய்
சித்த சுத்தியும் ஜபமும் தந்திடுவாய்
நினைப்பு எல்லாம் நின்னையே நினைந்திடச் செய்திடுவாய்
திருமுருகா உன்னைத் திடமுற நினைத்திடவே ......

திருவருள் தந்திடுவாய் திருவருள்தான் பொங்கிடவே
திருவருள் ஒன்றிலே நிலைபெறச் செய்திடுவாய்
நிலைபெறச் செய்திடுவாய் நித்யானந்தமதில்
நித்யானந்தமே நின்னுரு வாகையினால்
அத்வைத ஆனந்தத்தில் இமைப்பொழுது ஆழ்த்திடுவாய் ......

ஞான பண்டிதா நான்மறை வித்தகா கேள்
கந்தா குருநாதா கந்தா குருநாதா கேள்
மெய்ப்பொருளைக் காட்டி மேன்மை அடைந்திடச்செய்
வினைகள் யாவையுமே வேல்கொண்டு விரட்டிடுவாய்
தாரித்திரியங்களை உன் தடி கொண்டு விரட்டிடுவாய் ......

துக்கங்கள் அனைத்தையும் தொலைதூரம் போக்கிடுவாய்
பாப உடலைப் பரிசுத்த மாக்கிடுவாய்
இன்ப துன்பத்தை இருவிழியால் விரட்டிடுவாய்
ஆசைப் பேய்களை அறவே நசுக்கிடுவாய்
அகந்தைப் பிசாசை அழித்து ஒழித்திடடா ......

மெய்யருளாம் உன்னருளில் முருகா இருத்திடுவாய்
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
ஆறுமுகமான குரோ அறிந்திட்டேன் உன் மகிமை
இக்கணமே வருவாய் என் கந்தா குருவே நீ
என்னைக் காத்திடவே எனக்கு நீ அருளிடவே ......

அரைக் கணத்தில் நீயும் ஆடி வருவாயப்பா
வந்தெனைத் தடுத்து வலிய ஆட்கொள் வரதகுரோ
அன்புத் தெய்வமே ஆறுமுக மானவனே
சுப்ரமண்யனே சோகம் அகற்றிடுவாய்
ஞான கந்தாரே ஞானம் அருள்வாய் நீ ......

ஞான தண்ட பாணியே என்னை ஞான பண்டிதனக்கிடுவாய்
அகந்தையெல்லாம் அழித்து அன்பினை ஊட்டிடுவாய்
அன்பு மயமாக்கி ஆட்கொள்ளு வையப்பா
அன்பை என் உள்ளத்தில் அசைவின்றி நிறுத்திவிடு
அன்பையே கண்ணாக ஆக்கிக் காத்திடுவாய் ......

உள்ளும் புறமும் உன்னருளாம் அன்பையே
உறுதியாக நானும் பற்றிட உவந்திடுவாய்
எல்லை இல்லாத அன்பே இறைவெளி என்றாய் நீ
அங்கிங்கெனாதபடி எங்கும் அன்பென்றாய்
அன்பே சிவமும் அன்பே சக்தியும் ......

அன்பே ஹரியும் அன்பே ப்ரமனும்
அன்பே தேவரும் அன்பே மனிதரும்
அன்பே நீயும் அன்பே நானும்
அன்பே சத்தியம் அன்பே நித்தியம்
அன்பே சாந்தம் அன்பே ஆனந்தம் ......

அன்பே மௌனம் அன்பே மோக்ஷம்
அன்பே ப்ரம்மமும் அன்பே அனைத்தும் என்றாய்
அன்பிலாத இடம் அங்குமிங்கு மில்லை என்றாய்
எங்கும் நிறைந்த அன்பே என் குருநாதனப்பா
அன்பில் உறையும் அருட்குரு நாதரே தான் ......

கந்தாஸ்ரமத்தில் கந்தாகுரு வானான்காண்
மூவரும் தேவரும் முனிவரும் போற்றிடவே
கந்தாஸ்ரமம் தன்னில் கந்தா ஜோதியுமாய்
ஆத்ம ஜோதியுமாய் அமர்ந்திட்ட கந்தாகுரு
இருளை அகற்றவே எழுந்திட்ட எங்கள் குரு ......

எல்லை இல்லாத உன் இறைவெளியைக் காட்டிடுவாய்
முக்தியைத் தந்திடுவாய் மூவரும் போற்றிடவே
நம்பினேன் உ ன்னையே நம்பினேன் கந்தாகுரோ
உன்னையன்றி இவ்வுலகில் ஒன்றுமில்லை என்றுணர்ந்தேன்
நன்கறிந்து கொண்டேன் நானும் உனதருளால் ...... (290)

விட்டிட மாட்டேன் கந்தா வீட தருள்வீரே
நடுநெற்றித் தானத்து நானுனைத் தியானிப்பேன்
ப்ரம்மமந்திரத்தைப் போதித்து வந்திடுவாய்
சுழுமுனை மார்க்கமாய் ஜோதியை காட்டிடுவாய்
சிவயோகியாக எனைச் செய்திடும் குருநாதா ...... (295)

ஆசை அறுத்து அரனடியைக் காட்டிவிடும்
மெய்யடி யராக்கி மெய் வீட்டில் இருத்திவிடும்
கொங்கு நாட்டிலே கோயில் கொண்ட கந்தாகுரோ
கொல்லிமலை மேலே குமரகுரு வானவனே
கஞ்சமலை சித்தர் போற்றும் கந்தாகிரி குருநாதா ...... (300)

கருவூரார் போற்றும் காங்கேயா கந்தகுரோ
மருதமலைச் சித்தன் மகிழ்ந்துபணி பரமகுரோ
சென்னிமலைக் குமரா சித்தர்க்கு அருள்வோனே
சிவவாக்கியர் சித்தர் உனைச் சிவன் மலையில் போற்றுவரே
பழனியில் போகருமே பாரோர் வாழப் பிரதிஷ்டித்தான் ...... (305)

புலிப்பாணி சித்தர்களால் புடை சூழ்ந்த குமரகுரோ
கொங்கில் மலிந்திட்ட கந்தா குருநாதா
கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் அருள்வீரே
கற்றவர்களோடு என்னைக் களிப்புறச் செய்திடுமே
உலகெங்கும் நிறைந்திருந்தும் கந்தகுரு உள்ளஇடம் ...... (310)

கந்தாகிரி என்பதை தான் கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்
நால்வர் அருணகிரி நவமிரண்டு சித்தர்களும்
பக்தர்களும் போற்றும் பழநிமலை முருகா கேள்
கொங்குதேசத்தில் குன்றுதோறும் குடிகொண்டோய்
சீலம் நிறைந்த சேலம்மா நகரத்தில் ...... (315)

கன்னிமார் ஓடையின்மேல் கந்தாகிரி அதனில்
கந்தாஸ் ரமத்தினிலே ஞானகந்தா சத்குருவாய்
அமர்ந்திருக்கும் ஜோதியே ஆதிமுல மானகுரோ
அயர்ச்சியை நீக்கிடுவாய் என் தளர்ச்சியை அகற்றிடுவாய்
சுகவனேசன் மகனே சுப்ரமண்ய ஜோதியே ......

பேரின்ப மகிழ்ச்சியையும் பெருகிடச் செய்திடப்பா
பரமானந்தமதில் எனை மறக்க பாலிப்பாய்
மால் மருகா வள்ளி மணவாளா கந்தாகுரோ
சிவகுமரா உன்கோயில் கந்தாகிரி என்றுணர்ந்தேன்
ஜோதிப்பிழம்பான சுந்தரனே பழனியப்பா ......

சிவஞானப் பழமான கந்தாகுருநாதா
பழம் நீ என்றதினால் பழனிமலை யிருந்தாயோ
திருவாவினன் குடியில் திருமுருகன் ஆனாயோ
குமரா முருகா குருகுகா வேலவனே
அகத்தியர்க்குத் தந்து ஆட்கொண்டாய் தமிழகத்தை ......

கலியுக வரதனென்று கலசமுனி உனைப்புகழ்ந்தான்
ஔவைக்கு அருள் செய்த அறுமுகவா கந்தாகுரோ
ஒழுக்கமொடு கருணையையும் தவத்தையும் தந்தருள்வாய்
போகருக்கருள் செய்த புவன சுந்தரனே
தண்டபாணித் தெய்வமே தடுத்தாட் கொண்டிடப்பா ......

ஆண்டிக் கோலத்தில் அணைத்திடுவாய் தண்டுடனே
தெய்வங்கள் போற்றிடும் தண்டாயுத ஜோதியே
கந்தாகிரி மேலே கந்தாகிரி ஜோதி யானவனே
கடைக்கண்ணால் பார்த்திடப்பா கருணையுள்ள கந்தாகுரோ
ஏழையைக் காத்திடப்பா ஏத்துகிறேன் உன்நாமம் ......

உன்னை அன்றி வேறொன்றை ஒருபோதும் நம்புகிலேன்
கண்கண்ட தெய்வமே கலியுக வரதனே
கந்தன் என்ற பேர்சொன்னால் கடிதாக நோய்தீரும்
புவனேஸ்வரி மைந்தா போற்றினேன் திருவடியை
திருவடியை நம்பினேன் திருவடி சாட்சியாக ......

புவனமாதா மைந்தனே புண்ணிய மூர்த்தியே கேள்
நின் நாமம் ஏத்துவதே நான் செய்யும் தவமாகும்
நாத்தழும் பேறவே ஏத்திடுவேன் நின்நாமம்
முருகா முருகாவென்றே மூச்செல்லாம் விட்டிடுவேன்
உள்ளும் புறமும் ஒருமுருகனையே காண்பேன் ......

அங்கிங்கு எனாதபடி எங்குமே முருகனப்பா
முருகன் இலாவிட்டால் மூவுலக மேதப்பா
அப்பப்பா முருகாநின் அருளே உலகமப்பா
அருளெல்லாம் முருகன் அன்பெல்லாம் முருகன்
ஸ்தாவர ஜங்கமாய் கந்தானாய் அருவுருவாய் ......

முருகனாய் முதல்வனாய் ஆனவன் கந்தாகுரு
கந்தாஸ்ரமம் இருக்கும் கந்தாகுரு அடிபற்றிச்
சரணம் அடைந்தவர்கள் சாயுஜ்யம் பெற்றிடுவர்
சத்தியம் சொல்கின்றேன் சந்தேக மில்லையப்பா
வேதங்கள் போற்றிடும் வடிவேலன் முருகனை நீ ......

சந்தேகம் இல்லாமல் சத்தியமாய் நம்பிடுவாய்
சத்திய மானதெய்வம் கந்தா குருநாதன்
சத்தியம் காணவே நீ சத்தியமாய் நம்பிடப்பா
சத்தியம் வேறல்ல கந்தாகுரு வேறல்ல
கந்தாகுருவே சத்தியம் சத்தியமே கந்தாகுரு ......

சத்தியமாய்ச் சொன்னதை சத்தியமாய் நம்பியே நீ
சத்தியமாய் ஞானமாய் சதானந்த மாகிவிடு
அழிவற்ற ப்ரம்மமாய் ஆக்கி விடுவான் முருகன்
திருமறைகள் திருமுறைகள் செப்புவதும் இதுவேதான்
கந்தாகுரு கவசமதை சொந்தமாக்கிக் கொண்டு நீ ......

பொருளுணர்ந்து ஏத்திடப்பா பொல்லாப்பு வினையகலும்
பிறவிப் பிணி அகலும் ப்ரம்மானந்த முண்டு
இம்மையிலும் மறுமையிலும் இமையோருன்னைப் போற்றிடுவர்
முவருமே முன்னிற்பர் யாவருமே பூஜிப்பர்
அனுதினமும் கவசத்தை அன்புடன் ஏத்திடப்பா ......

சிரத்தா பக்தியுடன் சிந்தையொன்றிச் செப்பிடப்பா
கவலைய கன்றிடுமே கந்தனருள் பொங்கிடுமே
பிறப்பும் இறப்பும் பிணிகளும் தொலைந்திடுமே
கந்தன் கவசமே கவசமென்று உணர்ந்திடுவாய்
கவசம் ஏத்துவீரேல் கலியை ஜெயித்திடலாம் ...... (380)

கலி என்ற அரக்கனைக் கவசம் விரட்டிடுமே
சொன்னபடிச் செய்து சுகமடைவாய் மனமே நீ
கந்தாகுரு கவசத்தைக் கருத்தூன்றி ஏத்துவோர்க்கு
அஷ்ட ஐஸ்வர்யம் தரும் அந்தமில்லா இன்பம் தரும்
ஆல்போல் தழைத்திடுவன் அறுகுபோல் வேரோடிடுவன் ...... (385)

வாழையடி வாழையைப்போல் வம்சமதைப் பெற்றிடுவன்
பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடுவன்
சாந்தியும் சௌக்யமும் சர்வமங்களமும் பெருகிடுமே
கந்தாகுரு கவசமிதை கருத்து நிறுத்தி ஏற்றுவீரேல்
கர்வம் காமம் குரோதம் கலிதோஷம் அகற்றுவிக்கும் ...... (390)

முன்செய்த வினையகன்று முருகனருள் கிட்டிவிடும்
அறம் பொருள் இன்பம் வீடு அதிசுலபமாய்க் கிட்டும்
ஆசாரம் சீலமுடன் ஆதிநேம நிஷ்டையுடன்
கள்ளமிலா உள்ளத்தோடு கந்தகுரு கவசம் தன்னை
சிரத்தா பக்தியுடன் சிவகுமரனை நினைத்துப் ...... (395)

பாராயணம் செய்வீரேல் பார்க்கலாம் கந்தனையும்
கந்தகுரு கவசமிதை ஒரு மண்டலம் நிஷ்டையுடன்
பகலிரவு பாராமல் ஒருமனதாய் பகருவீரேல்
திருமுருகன் வேல்கொண்டு திக்குகள் தோறும் நின்று
காத்திடுவான் கந்தகுரு கவலை இல்லை நிச்சயமாய் ...... (400)

ஞான கந்தானின் திருவடியை நம்பியே நீ
கந்தகுரு கவசம் தன்னை ஓதுவதே தவம் எனவே
உணர்ந்துகொண்டு ஓதுவையேல் உனக்குப் பெரிதான
இகபரசுகம் உண்டாம் எந்நாளும் துன்பம் இல்லை
துன்பம் அகன்று விடும் தொந்தரவுகள் நீங்கிவிடும் ...... (405)

இன்பம் பெருகிவிடும் இஷ்டசித்தி கூடிவிடும்
பிறவிப்பிணி அகற்றி ப்ரம்ம நிஷ்டையும் தந்து
காத்து ரக்ஷிக்கும் கந்தகுரு கவசமுமே
கவலையை விட்டுநீ கந்தகுரு கவசமிதை
இருந்த படியிருந்து ஏற்றிவிடு ஏற்றினால் ...... (410)

தெய்வங்கள் தேவர்கள் சித்தர்கள் பக்தர்கள்
போற்றிடுவர் ஏவலுமே புரிந்திடுவர் நிச்சயமாய்
கந்தாகுரு கவசம் சம்சயப் பேயோட்டும்
அஞ்ஞானமும் அகற்றி அருள் ஒளியும் காட்டும்
ஞான கந்தாகுரு நானென்றும் முன்நிற்பன் ...... (415)

உள்ளொளியாய் இருந்து உன்னில் அவனாக்கிடுவன்
தன்னில் உனைக்காட்டி உன்னில் தனைக்காட்டி
எங்கும் தனைக்காட்டி எங்குமுனைக் காட்டிடுவான்
கந்தாஜோதி யானகந்தன் கந்தகிரி இருந்து
தண்டாயுதம் தாங்கித் தருகின்றான் காட்சியுமே ...... (420)

கந்தன் புகழ் பாடக் கந்தகிரி வாருமினே
கந்தகிரி வந்து நிதம் கண்டுய்ம்மின் ஜகத்தீரே
கலிதோஷம் அகற்றுவிக்கும் கந்தகுரு கவசமிதை
பாராயணம் செய்து பாரில் புகழ் பெறுமின்
கந்தாகுரு கவச பலன் பற்றறுத்துப் பரம்கொடுக்கும் ...... (425)

ஒருதரம் கவசம் ஓதின் உள்ளழுக்குப் போகும்
இருதரம் ஏற்றுவீரேல் எண்ணியதெல்லாம் கிட்டும்
முன்றுதரம் ஓதின் முன்னிற்பன் கந்தாகுரு
நான்குமுறை தினம் ஓதி நல்லவரம் பெறுவீர்
ஐந்துமுறை தினம் ஓதி பஞ்சாட்சரம் பெற்று ...... (430)

ஆறுமுறை யோதி ஆறுதலைப் பெற்றிடுவீர்
ஏழு முறை தினம் ஓதின் எல்லாம் வசமாகும்
எட்டுமுறை ஏத்தில் அட்டமா சித்தியும் கிட்டும்
ஒன்பதுதரம் ஓதின் மரணபயம் ஒழியும்
பத்துதரம் ஓதி நித்தம் பற்றற்று வாழ்வீரே ...... (435)

கன்னிமார் ஓடையிலே நீராடி நீறுபூசிக்
கந்தகுரு கவசம் ஓதி கந்தகிரி ஏறிவிட்டால்
முந்தை வினை எல்லாம் கந்தன் அகற்றிடுவான்
நிந்தைகள் நீங்கிவிடும் நிஷ்டையுமே கைகூடும்
கன்னிமார் ஓடை நீரை கைகளில் நீ எடுத்துக் ...... (440)

கந்தன் என்ற மந்திரத்தைக் கண்மூடி உருவேற்றி
உச்சியிலும் தெளித்து உட்கொண்டு விட்டிட்டால் உன்
சித்த மலம் அகன்று சித்த சுத்தியும் கொடுக்கும்
கன்னிமார் தேவிகளைக் கன்னிமார் ஓடையிலே
கண்டு வழிபட்டு கந்தகிரி ஏறிடுவீர் ...... (445)

கந்தகிரி ஏறி ஞான கந்தகுரு கவசமிதைப்:-மீண்டும் மீண்டும்
உச்சரித்து உலகில் பாக்கியமெல்லாம் பெற்றுடுவீர்.

---- கந்த குரு கவசம் முற்றிற்று. ----

# கந்தர் அலங்காரம்

1. பேற்றைத் தவஞ்சற்று மில்லாத வென்னைப்ர பஞ்சமென்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட வா! செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை யிதழியைத் தும்பையை யம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் க்ருபாகரனே.

2. அழித்துப் பிறக்கவொட்டா அயில் வேலன் கவியையன்பால்
எழுத்துப் பிழையறக் கற்கின்றி லீரெரி மூண்டதென்ன
விழித்துப் புகையெழப் பொங்குவெங் கூற்றன் விடுங்கயிற்றாற்
கழுத்திற் சுருக்கிட் டிழுக்குமன் றோகவி கற்கின்றதே.

3. தேரணி யிட்டுப் புரமெரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடக நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தேவந்த்ர லோகம் பிழைத்ததுவே.

4. ஓரவொட் டாரொன்றை யுன்னவொட் டார்மல ரிட்டுனதாள்
சேரவொட் டாரைவர் செய்வதென் யான்சென்று தேவருய்யச்
சோரநிட் டூரனைச் சூரனைக் காருடல் சோரிகக்கக்
கூரகட்டாரியிட் டோரிமைப் போதினிற் கொன்றவனே.

5. திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர்கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழுங்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோதுங் குவலயமே.

6. பெரும்பைம் புனத்தினுட் சிற்றேனல் காக்கின்ற பேதை கொங்கை
விரும்பும் குமரனை மெய்யன்பி னான்மெல்ல மெல்லவுள்ள
அரும்புந் தனிப்பர மானந்தத் தித்தித் தறிந்தவன்றே
கரும்புந் துவர்த்துச் செந்தேனும் புளித்தறக் கைத்ததுவே.

7. சளத்திற் பிணிபட் டசட்டு க்ரியைக்குட் டவிக்குமென்றன்
உளத்திற் ப்ரமத்தைத் தவிர்ப்பா யவுண ருரத்துதிரக்
குளத்திற் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்திற் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே.

8. ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததொ ராநந்தத் தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வா! முக மாறுடைத் தேசிகனே.

9. தேனென்று பாகென்றுவமிக் கொணாமொழித் தெய்வ வள்ளி
கோனன் றெனக்குப தேசித்த தொன்றுண்டு கூறவற்றோ
வானன்று காலன்று தீயன்று நீரன்று மண்ணுமன்று
தானன்று நானன் றசரீரி யன்று சரீரியன்றே.

10. சொல்லுகைக் கில்லையென் றெல்லாமிழந்து சும்மா விருக்கும்
எல்லையுட் செல்ல எனைவிட்ட வாஇகல் வேலனல்ல
கொல்லியைச் சேர்க்கின்ற சொல்லியைக் கல்வரைக்
கொவ்வைச் செவ்வாய் வல்லியைப் புல்கின்ற மால்வரைத்
தோளண்ணல் வல்லபமே.

11. குசைநெகி ழாவெற்றி வேலோ னவுணர் குடர்குழம்பக்
கசையிடு வாசி விசை கொண்ட வாகனப் பீலியின்கொத்
தசைபடு கால்பட் டசைந்தது மேரு அடியிடவெண்
டிசைவரை தூள்பட்ட அத்தூளின் வாரி திடர்பட்டதே.

12. படைபட்ட வேலவன் பால்வந்த வாகைப் பதாகையென்னுந்
தடைபட்ட சேவல் சிறகடிக் கொள்ளச் சலதிகிழிந்
துடைபட்ட தண்ட கடாக முதிர்ந்த துடுபடலம்
இடைபட்ட குன்றமு மாமேரு வெற்பு மிடிபட்டவே.

13. ஒருவரைப் பங்கி லுடையாள் குமார னுடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி யோசை படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன தேவர் பயங்கெட்டதே.

14. குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று வாயிரு நான்குவெற்பும்
அப்பாதி யாழ்விழ மேருங் குலுங்கவிண் ணாருமுய்யச்
சப்பாணி கொட்டிய கையா றிரண்டுடைச் சண்முகனே.

15. தாவடி யோட்டு மயிலிலுந் தேவர் தலையிலுமென்
பாவடி யேட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே.

16. தடுங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத் தானமென்றும்
இடுங்கோ ளிருந்த படியிருங் கோளெழு பாருமுய்யக்
கொடுங்கோபச் சூருடன் குன்றந் திறக்கத் தொளைக்கவை வேல்
விடுங்கோ னருள்வந்து தானே யுமக்கு வெளிப்படுமே.

17. வேதா கமசித்ர வேலா யுதன் வெட்சி பூத்ததண்டைப்
பாதார விந்தம் அரணாக அல்லும் பகலுமில்லாச்
சூதான தற்ற வெளிக்கே யொளித்துச்சும் மாவிருக்கப்
போதா யினிமன மேதெரி யாதொரு பூதர்க்குமே.

18. வையிற் கதிர்வடி வேலோனை வாழ்த்தி வறிஞர்க்கென்றும்
நொய்யிற் பிளவள வேனும் பகிர்மின்க ணுங்கட்கிங்ஙன்
வெய்யிற் கொதுங்க வுதவா உடம்பின் வெறுநிழல்போற்
கையிற் பொருளு முதவாது காணுங் கடைவழிக்கே.

19. சொன்ன கிரௌஞ்ச கிரியூ டுருவத் தொளைத்தவைவேல்
மன்ன கடம்பின் மலர்மாலை மார்பமௌ னத்தையுற்று
நின்னை யுணர்ந்துணர்ந் தெல்லா மொருங்கிய நிர்குணம் பூண்
டென்னை மறந்திருந் தேனிறந் தேவிட்ட திவ்வுடம்பே.

20. கோழிக் கொடிய னடிபணி யாமற் குவலத்தே
வாழக் கருது மதியிலி காளுங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவொட்டாது உங்களத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வருமோ நும் மடிப்பிறகே.

21. மரணப்ர மாத நமக்கில்லை யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுண் டேகிண் கிணிமுகுள
சரணப்ர தாப சசிதேவி மங்கல்ய தந்துரக்ஷா
பரணக்ரு பாகர ஞானா கரசுர பாஸ்கரனே.

22. மொய்தா ரணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதா ரையுமங்கு வாழவைப் போன்வெய்ய வாரணம்போற்
கைதா னிருப துடையான் தலைப்பத்துங் கத்தரிக்க
எய்தான் மருகன் உமையாள் பயந்த இலஞ்சியமே.

23. தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடரே
வைவைத்த வேற்படை வானவ னேமற வேனுனைநான்
ஐவர்க் கிடம்பெறக் காலிரண் டோட்டி யதிலிரண்டு
கைவைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே.

24. கின்னங் குறித்தடி யேன்செவி நீயன்று கேட்கச்சொன்ன
குன்னங் குறிச்சி வெளியாக்கி விட்டது கோடுகுழல்
சின்னங் குறிக்க குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை
முன்னங் குறிச்சியிற் சென்றுகல் யாண முயன்றவனே.

25. தண்டா யுதமுந் திரிசூல மும்விழத் தாக்கியுன்னைத்
திண்டாட வெட்டி விழவிடு வேன்செந்தில் வேலுனக்குத்

தொண்டா கியவென் னவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டா யடாவந்த காவந்து பார்சற்றென் கைக்கெட்டவே.

26. நீலச் சிகண்டியி லேறும் பிரானெந்த நேரத்திலுங்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மௌ;ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப்பார், மரிப் பார்வெறுங் கர்மிகளே.

27. ஓலையுந் தூதருங் கண்டுதிண் டாட லொழித்தெனக்குக்
காலையு மாலையு முன்னிற்கு மேகந்த வேள்மருங்கிற்
சேலையுங் கட்டிய சீராவுங் கையிற் சிவந்தசெச்சை
மாலையுஞ் சேவற் பதாகையுந் தோகையும் வாகையுமே.

28. வேலே விளங்குகை யான்செய்ய தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொளவிங்ஙன் காண்பதல் லான்மன வாக்குச்செய
லாலே யடைதற் கரிதா யருவுரு வாகியொன்று
போலே யிருக்கும் பொருளையெவ் வாறு புகல்வதுவே.

29. கடத்திற் குறத்தி பிரானரு ளாற்கலங் காதசித்தத்
திடத்திற் புணையென யான்கடந் தேன்சித்ர மாதரல்குற்
படத்திற் கழுத்திற் பழுத்தசெவ் வாயிற் பணையிலுந்தித்
தடத்திற் றனத்திற் கிடக்கும்வெங் காம சமுத்திரமே.

30. பாலென் பதுமொழி பஞ்சென் பதுபதம் பாவையற்கண்
சேலென்ப தாகத் திரிகின்ற நீசெந்தி லோன்றிருக்கை
வேலென் கிலைகொற்ற மயூர மென்கிலை வெட்சித்தண்டைக்
காலென் கிலைமன மேயெங்ங னேமுத்தி காண்பதுவே.

31. பொக்கக் குடிலிற் புகுதா வகைபுண்ட ரீகத்தினுஞ்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள் சிந்துவெந்து
கொக்குத் தறிபட் டெறிபட் டுதிரங் குமுகுமெனக்
கக்கக் கிரியுரு வக்கதிர் வேல்தொட்ட காவலனே.

32. கிளைத்துப் புறப்பட்ட சூர்மார் புடன்கிரி யூடுருவத்
தொளைத்துப் புறப்பட்ட வேற்கந்த னேதுறந் தோருளத்தை
வளைத்துப் பிடித்துப் பதைக்கப் பதைக்க வதைக்குங் கண்ணார்க்
கிளைத்துத் தவிக்கின்ற என்னை யெந்நாள்வந் திரட்சிப்பையே.

33. முடியாப் பிறவிக் கடலிற் புகார்முழு துங்கெடுக்கு
மிடியாற் படியில் விதனப் படார்வெற்றி வேற்பெருமாள்
அடியார்க்கு நல்ல பெருமாள் அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மாள்திரு நாமம் புகல்பவரே.

34. பொட்டாக வெற்பைப் பொருதகந்தா தப்பிப் போனதொன்றற்
கெட்டாத ஞான கலைதரு வாயிருங் காமவிடாய்ப்
பட்டா ருயிரைத் திருகிப் பருகிப் பசிதணிக்குங்
கட்டாரி வேல்விழி யார்வலைக் கேமனங் கட்டுண்டதே.

35. பத்தித் துறையிழிந் தாநந்த வாரி படிவதினால்
புத்தித் தரங்கந் தெளிவதென் றோபொங்கு வெங்குருதி
மெத்திக் குதிகொள்ள வெஞ்சூ ரனைவிட்ட சுட்டியிலே
குத்தித் தரங்கொண் டமரா வதிகொண்ட கொற்றவனே.

36. சுழித்தோடு மாற்றிற் பெருக்கானது செல்வந் துன்ப மின்பங்
கழித்தோடு கின்றதெக் காலநெஞ்சே கரிக் கோட்டு முத்தைக்
கொழித்தோடு காவிரிச் செங்கோட னென்கிலைகுன்றமெட்டுங்
கிழித்தோடு வேலென் கிலையெங்ங னேமுத்தி கிட்டுவதே.

37. கண்டுண்ட சொல்லியர் மெல்லியர் காமக் கலவிக்கள்ளை
மொண்டுண் டயர்கினும் வேன்மற வேன்முது கூளித்திரள்
டுண்டுண் டுடுடுடு டூடூ டுடுடுடு டுண்டுடுண்டு
டிண்டிண் டெனக்கொட்டி யாடவெஞ் சூர்க்கொன்ற ராவுத்தனே.

38. நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென் செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையும் தண்டையுஞ் சண்முகமுந்
தோளுங் கடம்பு மெனக்குமுன் னேவந்து தோன்றிடினே.

39. உதித்தாங் குழல்வதுஞ் சாவதுந் தீர்த்தெனை யுன்னி லொன்றா
விதித்தாண் டருள்தருங் காலமுண் டோவெற்பு நட்டுரக
பதித்தாம்பு வாங்கிநின் றம்பரம் பம்பரம் பட்டுழல
மதித்தான் திருமரு காமயி லேறிய மாணிக்கமே.

40. சேல்பட் டழிந்தது செந்தூர் வயற்பொழில் தேங்கடம்பின்
மால்பட் டழிந்தது பூங்கொடி யார்மனம் மாமயிலோன்

வேல்பட் டழிந்தது வேலையுஞ் சூரனும் வெற்புமவன்
கால்பட் டழிந்ததிங் கென்றலை மேலயன் கையெழுத்தே.

41. பாலே யனைய மொழியார்த மின்பத்தைப் பற்றியென்றும்
மாலே கொண்டுய்யும் வகையறி யேன்மலர்த் தாள்தருவாய்
காலே மிகவுண்டு காலே யிலாத கணபணத்தின்
மேலே துயில்கொள்ளு மாலோன் மருகசெவ் வேலவனே.

42. நிணங்காட்டுங் கொட்டிலை விட்டொரு வீடெய்தி நிற்கநிற்குங்
குணங்காட்டி யாண்ட குருதே சிகனங் குறச்சிறுமான்
பணங்காட்டு மல்குற் குருகுங் குமரன் பதாம்புயத்தை
வணங்காத் தலைவந்தி தெங்கே யெனக்கிங்ஙன் வாய்த்ததுவே.

43. கவியாற் கடலடைத் தோன்மரு கோனைக் கணபணக்கட்
செவியாற் பணியணி கோமான் மகனைத் திறலரக்கர்
புவியார்ப் பெழத்தொட்ட போர்வேன் முருகனைப் போற்றியன்பாற்
குவியாக் கரங்கள்வந் தெங்கே யெனக்கிங்ஙன் கூடியவே.

44. தோலாற் சுவர்வைத்து நாலாறு காலிற் சுமத்தியிரு
காலா லெழுப்பி வளைமுது கோட்டிக்கைந் நாற்றிநரம்
பாலார்க்கை யிட்டுத் தசைகொண்டு மேய்ந்த அகம்பிரிந்தால்
வேலாற் கிரிதொளைத் தோனிரு தாளன்றி வேறில்லையே.

45. ஒருபூ தருமறி யாத்தனி வீட்டி லுரையுணர்வற்
றிருபூத வீட்டி லிராமலென் றான்னிரு கோட்டொருகைப்
பொருபூ தரமுரித் தேகாச மிட்ட புராந்தகற்குக்
குரு பூத வேலவ னிட்டூர சூர குலாந்தகனே.

46. நீயான ஞான விநோதந் தனையென்று நீயருள்வாய்
சேயான வேற்கந்த னேசெந்தி லாய்சித்ர மாதரல்குற்
றோயா வுருகிப் பருகிப் பெருகித் துவளுமிந்த
மாயா விநோத மநோதுக்க மானது மாய்வதற்கே.

47. பத்தித் திருமுக மாறுடன் பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கு மமுதுகண் டேன்செயன் மாண்டடங்கப்
புத்திக் கமலத் துருகிப் பெருகிப் புவனமெற்றித்
தத்திக் கரைபுர ளும்பர மாநந்த சாகரத்தே.

48. புத்தியை வாங்கிநின் பாதாம் புயத்திற் புகட்டியன்பாய்
முத்தியை வாங்க அறிகின்றி லேன்முது சூர்நடுங்கச்
சத்தியை வாங்கத் தரமோ குவடு தவிடுபடக்
குத்திய காங்கேய னேவினை யேற்கென் குறித்தனையே.

49. சூரிற் கிரியிற் கதிர்வே லெறிந்தவன் தொண்டர்குழாஞ்
சாரிற் கதியன்றி வேறிலை காண் தண்டு தாவடிபோய்த்
தேரிற் கரியிற் பரியிற் றிரிபவர் செல்வமெல்லாம்
நீரிற் பொறியென் றறியாத பாவி நெடுநெஞ்சமே.

50. படிக்குந் திருப்புகழ் போற்றுவன் கூற்றுவன் பாசத்தினாற்
பிடிக்கும் பொழுதுவந் தஞ்லென் பாய்பெரும் பாம்பினின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ் சூர னடுங்கவெற்பை
இடிக்குங் கலாபத் தனிமயி லேறு மிராவுத்தனே.

51. மலையாறு கூறெழ வேல்வாங்கி னானை வணங்கியன்பின்
நிலையான மாதவஞ் செய்குமி னோநும்மை நேடிவருந்
தொலையா வழிக்குப் பொதிசோறு முற்ற துணையுங்கண்டீர்
இலையா யினும்வெந்த தேதா யினும்பகிர்ந் தேற்றவர்க்கே.

52. சிகராத்ரி கூறிட்ட வேலுஞ்செஞ் சேவலுஞ் செந்தமிழாற்
பகரார்வமீ பணி பாசசங் க்ராம பணாமகுட
நிகராட் சமபட்ச பட்சி துரங்க ந்ருபகுமரா
குகராட் சசபட்ச விட்சோப தீர குணதுங்கனே.

53. வேடிச்சி கொங்கை விரும்புங் குமரனை மெய்யன்பினாற்
பாடிக் கசிந்துள்ள போதே கொடாதவர் பாதகத்தாற்
தேடிப் புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே.

54. சாகைக்கு மீண்டு பிறக்கைக்கு மன்றித் தளர்ந்தவர்க்கொன்
றீகைக் கெனைவிதித் தாயிலை யேயிலங் காபுரிக்குப்
போகைக்கு நீவழி காட்டென்று போய்க்கடல் தீக்கொளுந்த
வாகைச் சிலைவளைத் தோன்மரு காமயில் வாகனனே.

55. ஆங்கா ரமுமடங் காரொடுங் கார்பர மாநந்தத்தே
தேங்கார் நினைப்பு மறப்பு மறார்தினைப் போதளவும்
ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யா ரென்செய் வார்யம தூதருக்கே.

56. கிழியும் படியடற் குன்றெறிந் தோன்கவி கேட்டுருகி
இழியுங் கவிகற் றிடாதிருப் பீரெரி வாய்நரகக்
குழியுந் துயரும் விடாய்ப்படக் கூற்றுவனூர்க் குச்செல்லும்
வழியுந் துயரும் பகரீர் பகரீர் மறந்தவர்க்கே.

57. பொருபிடி யுங்களி றும்விளை யாடும் புனச்சிறுமான்
தருபிடி காவல சண்முக வாவெனச் சாற்றிநித்தம்
இருபிடி சோறுகொண் டிட்டுண் டிருவிளை யோமிறந்தால்
ஒருபிடி சாம்பருங் காணாது மாய உடம்பிதுவே.

58. நெற்றாப் பசுங்கதிர்ச் செவ்வேனல் காக்கின்ற நீலவள்ளி
முற்றாத் தனத்திற் கினிய பிரானிக்கு முல்லையுடன்
பற்றாக்கை யும்வெந்து சங்க்ராம வேளும் படவிழியாற்
செற்றார்க் கினியவன் தேவந்த்ர லோக சிகாமணியே.

59. பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரு மேற்பவர்க் கிட்ட திடாமல்வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீருயிர் போமத் தனிவழிக்கே.

60. சிந்திக் கிலேனின்று சேவிக் கிலேன்றண்டைச் சிற்றடியை
வந்திக் கிலேனொன்றும் வாழ்த்து கிலேன்மயில் வாகனனைச்
சந்திக் கிலேன்பொய்யை நிந்திக்கி லேலுண்மை சாதிக்கிலேன்
புந்திக் கிலேசமுங் காயக் கிலேசமும் போக்குதற்கே.

61. வரையற் றவுணர் சிரமற்று வாரிதி வற்றச்செற்ற
புரையற்ற வேலவன் போதித் தவா, பஞ்ச பூதமுமற்
றுரையற் றுணர்வற் றுடலற் றுயிரற் றுபாயமற்றுக்
கரையற் றிருளற் றெனதற் றிருக்குமக் காட்சியதே.

62. ஆலுக் கணிகலம் வெண்டலை மாலை யகிலமுண்ட
மாலுக் கணிகலந் தண்ணந் துழாய்மயி லேறுமையன்

காலுக் கணிகலம் வானோர் முடியுங் கடம்புங்கையில்
வேலுக் கணிகலம் வேலையுஞ் சூரனும் மேருவுமே.

63. பாதித் திருவுருப் பச்சென் றவர்க்குத்தன் பாவனையைப்
போதித்த நாதனைப் போர்வேல னைச்சென்று போற்றியுய்யச்
சோதித்த மெய்யன்பு பொய்யோ அழுது தொழுதுருகிச்
சாதித்த புத்திவந் தெங்கே யெனக்கிங்ஙன் சந்தித்ததே.

64. பட்டிக் கடாவில் வருமந்த காவுனைப் பாரறிய
வெட்டிப் புறங்கண் டலாதுவிடேன் வெய்ய சூரனைப்போய்
முட்டிப் பொருதசெவ் வேற்பெரு மாள்திரு முன்புநின்றேன்
கட்டிப் புறப்பட டாசத்தி வாளென்றன் கையதுவே.

65. வெட்டுங் கடாமிசைத் தோன்றும் வெங்கூற்றன் விடுங் கயிற்றாற்
கட்டும் பொழுது விடுவிக்க வேண்டுங் கராசலங்கள்
எட்டுங் குலகிரி யெட்டும்விட் டோடவெட் டாதவெளி
மட்டும் புதைய விரிக்குங் கலாப மயூரத்தனே.

66. நீர்க் குமிழிக்கு நிகரென்பர் யாக்கைநில் லாதுசெல்வம்
பார்க்கு மிடத்தந்த மின்போலு மென்பர் பசித்துவந்தே
ஏற்கு மவர்க்கிட வென்னினெங் கேனு மெழுந்திருப்பார்
வேற் குமரற் கன்பிலாதவர் ஞான மிகவுநன்றே.

67. பெறுதற் கரிய பிறவியைப் பெற்றுநின் சிற்றடியைக்
குறுகிப் பணிந்து பெறக்கற் றிலேன்மத கும்பகம்பத்
தறுகட் சிறுகட் சங்க்ராம சயில சரசவல்லி
இறுகத் தழுவுங் கடகா சலபன் னிருபுயனே.

68. சாடுஞ் சமரத் தனிவேன் முருகன் சரணத்திலே
ஓடுங் கருத்தை யிருத்தவல் லார்க்குகம் போய்ச்சகம்போய்ப்
பாடுங் கவுரி பவுரிகொண்டாடப் பசுபதிநின்
றாடும் பொழுது பரமா யிருக்குமதீதத்திலே.

69. தந்தைக்கு முன்னந் தனிஞான வாளொன்று சாதித்தருள்
கந்தச் சுவாமி யெனைத்தேற் றியபின்னர்க் காலன் வெம்பி
வந்திப் பொழுதென்னை யென்செய்ய லாஞ்சத்தி வாளொன்றினாற்
சிந்தத் துணிப்பன் தணிப்பருங் கோபத்ரி சூலத்தையே.

70. விழிக்குத் துணைதிரு மென்மலர்ப் பாதங்கள் மெய்ம்மைகுன்றா
மொழிக்குத் துணைமுரு காவெனு நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங் கோடன் மயூரமுமே.

71. துருத்தி யெனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி யுடம்பை யொருக்கிலென் னாஞ்சிவ யோகமென்னுங்
குருத்தை யறிந்து முகமா றுடைக்குரு நாதன் சொன்ன
கருத்தை மனத்தி லிருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே.

72. சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித் தோனை விளங்குவள்ளி
காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்
சாந்துணைப் போது மறவா தவர்க்கொரு தாழ்வில்லையே.

73. போக்கும் வரவு மிரவும் பகலும் புறம்புமுள்ளும்
வாக்கும் வடிவு முடிவுமில் லாதொன்று வந்துவந்து
தாக்கு மனோலயந் தானே தருமெனைத் தன்வசத்தே
ஆக்கு மறுமுக வாசொல் லொணாதிந்த ஆனந்தமே.

74. அராப்புனை வேணியன் சேயருள் வேண்டு மவிழ்ந்த அன்பாற்
குராப்புனை தண்டையந் தாள்தொழல் வேண்டுங்கொடிய ஐவர்
பராக்கறல் வேண்டும் மனமும் பதைப்பறல் வேண்டு மேன்றால்
இராப்பக லற்ற இடத்தே யிருக்கை யெளிதல்லவே.

75. படிக்கின் றிலைபழ நித்திரு நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காவென் கிலைமுசி யாமலிட்டு
மிடிக்கின் றிலைபர மாநந்த மேற்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்ச மேது நமக்கினியே.

76. கோடாத வேதனுக் கியான்செய்த குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக் குமரநின் றண்டையந்தாள்
சூடாத சென்னியு நாடாத கண்ணுந் தொழாதகையும்
பாடாத நாவு மெனக்கே தெரிந்து படைத்தனனே.

77. சேல்வாங்கு கண்ணியர் வண்ணப் பயோதரஞ் சேரஎண்ணி
மால்வாங்கி யேங்கி மயங்காமல் வெள்ளி மலையெனவே

காலவாங்கி நிற்குங் களிற்றான் கிழத்தி கழுத்திற்கட்டு
நூல்வாங்கி டாதன்று வேல்வாங்கி பூங்கழல் நோக்கு நெஞ்சே.

78. கூர்கொண்ட வேலனைப் போற்றாம லேற்றங்கொண் டாடுவிர்காள்
போர்கொண்ட கால னுமைக்கொண்டு போமன்று பூண்பனவுந்
தார்கொண்ட மாதரு மாளிகை யும்பணச் சாளிகையும்
ஆர்கொண்டு போவரை யோகெடு வீர்நும் மறிவின்மையே.

79. பந்தாடு மங்கையர் செங்கயற் பார்வையிற் பட்டுழலுஞ்
சிந்தா குலந்தனைத் தீர்த்தருள் வாய்செய்ய வேல்முருகா
கொந்தார் கடம்பு புடைசூழ் திருத்தணிக் குன்றினிற்குங்
கந்தா இளங்கும ராஅம ராவதி காவலனே.

80. மாகத்தை முட்டி வருநெடுங் கூற்றவன்வந் தாலென்முன்னே
தோகைப் புரவியிற் றோன்றிநிற் பாய்சுத்த நித்தமுத்தித்
த்யாகப் பொருப்பைத் த்ரிபுராந் தகனைத் த்ரியம்பகனைப்
பாகத்தில் வைக்கும் பரமகல் யாணிதன் பாலகனே.

81. தாரா கணமெனுந் தாய்மார் அறுவர் தருமுலைப்பால்
ஆரா துமைமுலைப் பாலுண்ட பால னரையிற்கட்டுஞ்
சீராவுங் கையிற் சிறுவாளும் வேலுமென் சிந்தையவே
வாரா தகலந்த காவந்த போதுயிர் வாங்குவனே.

82. தகட்டிற் சிவந்த கடம்பையு நெஞ்சையுந் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு ளாய் புண்ட ரீகனண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர லோகத்தை முட்ட வெட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர சூர பயங்கரனே.

83. தேங்கிய அண்டத் திமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள் கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளந்தனிவேல்
வாங்கிய னுப்பிடக் குன்றங்க ளெட்டும் வழிவிட்டவே.

84. மைவருங் கண்டத்தர் மைந்தகந் தாவென்று வாழ்த்துமிந்தக்
கைவருந் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற கல்வியும் போய்ப்
பைவருங் கேளும் பதியுங் கதறப் பழகிநிற்கும்
ஐவருங் கைவிட்டு மெய்விடும் போதுன் னடைக்கலமே.

85. காட்டிற் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டிற் புகுதன் மிகவெளிதே விழிநாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்தெங்கு மோடாமற் சாதிக்கும் யோகிகளே.

86. வேலா யுதன்சங்கு சக்ராயு தன்விரிஞ் சன்னறியாச்
சூலா யுதன் தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
காலா யுதக்கொடி யோனரு ளாய கவசமுண்டென்
பாலா யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே.

87. குமரா சரணஞ் சரணமென் றண்டர் குழாந்துதிக்கும்
அமரா வதியிற் பெருமாள் திருமுக மாறுங்கண்ட
தமராகி வைகுந் தனியான ஞான தபோதனர்க்கிங்
கெமராசன் விட்ட கடையேடு வந்தினி யென்செயுமே.

88. வணங்கித் துதிக்க அறியா மனிதருடன் இணங்கிக்
குணம் கெட்ட துட்டனை ஈடேற்றுவாய் கொடியும் கழுகும்
பிணங்கத் துணங்கை அலகை கொண்டாடப் பிசிதர்தம் வாய்
நிணம் கக்க விக்கிரம வேலாயுதம் தொட்ட நிர்மலனே.

89. பங்கே ருகனெனைப் பட்டோ லையிலிடப் பண்டுதளை
தங்காலி லிட்ட தறிந்தில னோதனி வேலெடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்பவரும்
எங்கோ னறியி னினிநான் முகனுக் கிருவிலங்கே.

90. மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே.

91. கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக் கோளனை வானமுய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வேல னைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

92. தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக் குஞ்சுத்த ஞானமெனுந்
தண்டையம் புண்டரி கந்தருவாய் சண்ட தண்டவெஞ்சூர்

மண்டலங் கொண்டுபண் டண்டரண் டங்கொண்டு மண்டிமிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல் வேல்தொட்ட காவலனே.

93. மண்கம ழுந்தித் திருமால் வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங் கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற்
கிண்கிணி யோசை பதினா லுலகமுங் கேட்டதுவே.

94. தள்ளிய ஏனலிற் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட் டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச் சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார மூரலை வேட்டநெஞ்சே.

95. யான் தான் எனும் சொல் லிரண்டுங் கெட்டாலன்றி யாவருக்குந்
தோன்றாது சத்தியந் தொல்லைப் பெருநிலஞ் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன் க்ருபாகரன் கேள்வியினாற்
சான்றாரு மற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே.

96. தடம் கொற்ற வேள் மயிலேயிடர் தீரத் தனிவிடில் நீ
வடக்கிற் கிரிக்கப் புறத்துநின் றோகையின் வட்டமிட்டுக்
கடற்கப் புறத்துங் கதிர்க்கப் புறத்துங் கனகசக்ரத்
திடர்க்கப் புறத்துந் திசைக்கப் புறத்துந் திரிகுவையே.

97. சேலில் திகழ் வயற் செங்கோடை வெற்பன் செழுங்கலபி
ஆலித் தநந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்ததிர்ந்து
காலிற் கிடப்பன மாணிக்க ராசியுங் காசினியைப்
பாலிக்கு மாயனுஞ் சக்ரா யுதமும் பணிலமுமே.

98. கதிதனை ஒன்றை யுங் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்விலன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யுங்கொண்டு திண்டாடு மாறெனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே.

99. காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்
தூவிக் குலமயில் வாகன னேதுணை யேதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனந் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

100. இடுதலைச் சற்றுங் கருதேனைப் போதமி லேனையன்பாற்
கெடுதலி லாத்தொண் டரிற்கூட் டியவா! கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன் பிறவி யறவிச்சிறை
விடுதலைப் பட்டது விட்டது பாச வினைவிலங்கே.

101. சலம் காணும் வேந்தர்தமக்கு மஞ்சார் யமன் சண்டைக்கஞ்சார்
துலங்கா நரகக் குழியணு கார்துட்ட நோயணுகார்
கலங்கார் புலிக்குங் கரடிக்கும் யானைக்குங் கந்தனன்னூல்
அலங்கார நூற்று ளொருகவிதான்கற் றறிந்தவரே.

102. திருவடியும் தண்டையும் சிலம்புஞ் சிலம் பூடுருவப்
பொருவடி வேலுங் கடம்புந் தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்க ளாறும் மலர்க்கண்களுங்
குருவடி வாய்வந்தென் னுள்ளங் குளிரக் குதிகொண்டவே.

103. இராப் பகலற்ற இடங்காட்டி யானிருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாளரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார பயங்கரனே.

104. செங்கே ழடுத்த சினவடி வேலுந் திருமுகமும்
பங்கே நிரைத்தநற் பன்னிரு தோளும் பதுமமலர்க்
கொங்கே தரளஞ் சொரியுஞ்செங் கோடைக் குமரனென
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந் தெதிர்நிற்பனே.

105. ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் னருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி லேன்வினை தீர்த்தருளாய்
வாவித் தடவயல் சூழுந் திருத்தணி மாமலைவாழ்
சேவற் கொடியுடை யானே யமர சிகாமணியே.

106. கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையுமென்றன்
உள்ளத் துயரை யொழித்தரு ளாயொரு கோடிமுத்தந்
தெள்ளிக் கொழிக்குங் கடற்செந்தின் மேவிய சேவகனே
வள்ளிக்கு வாய்த்தவ னேமயிலேறிய மாணிக்கமே.

107. சூலம் பிடித்தெம பாசஞ் சுழற்றித் தொடர்ந்துவருங்
காலன் தனக்கொரு காலுமஞ் சேன் கடல் மீதெழுந்த

ஆலங் குடித்த பெருமான் குமாரன் அறுமுகவன்
வேலுந் திருக்கையு முண்டே நமக்கொரு மெய்த்துணையே.

"கந்தர் அலங்காரம் முற்றிற்று"

## கந்தரந்தாதி

திருவாவி னன்குடி பங்காள ரெண்முது சீருரைச
திருவாவி னன்குடி வானார் பரங்குன்று சீரலைவாய்
திருவாவி னன்குடி யேரகங் குன்றுதொ றாடல்சென்ற
திருவாவி னன்குடி கொண்டதண் கார்வரை செப்புமினே. ... 1

செப்புங் கவசங் கரபா லகதெய்வ வாவியம்பு
செப்புங் கவசங் கரிமரு காவெனச் சின்னமுன்னே
செப்புங் கவசம் பெறுவார் கணுந்தெய்வ யானைதனச்
செப்புங் கவசம் புனைபுயன் பாதமென் சென்னியதே. ... 2

சென்னிய மோகந் தவிராமு தோகண் டிகிரிவெண்ணெய்ச்
சென்னிய மோகம் படவூ தெனத்தொனி செய்தபஞ்ச
சென்னிய மோகந் தரம்புனத் தேன்புணர் தேவைத்தெய்வச்
சென்னிய மோகம் பணிபணி யேரகத் தேமொழிக்கே. ... 3

தேமொழி யத்தம் பெறவோந் தனக்கன்று சேணுலகத்
தேமொழி யத்தம் சினங்காட் டவுணரைச் சேமகரத்

தேமொழி யத்தம் புயமவர் சூடிகை சிந்தவென்ற
தேமொழி யத்தம் பதினா லுலகுமந் தித்ததொன்றே. ... 4

தித்தவித் தார மனித்தரைத் தேவர் வணங்க முன்போ
தித்தவித் தாரகை மைந்தர்செந் தூர்க்கந்தர் சிந்துரவா
தித்தவித் தார முடையா ரருள்வெள்ளந் தேக்கியன்பு
தித்தவித் தாரந் தனிவீ டுறத்துக்கச் செவ்வனலே. ... 5

செவ்வந்தி நீலப் புயமுரு காபத்தர் சித்தமெய்யிற்
செவ்வந்தி நீலத்தை யுற்றருள் வாய்திங்கட் சேய்புனைந்த
செவ்வந்தி நீலத் தொருபாகர் போன்ற தினிச்சிந்தியார்
செவ்வந்தி நீலத்தி னீடுமுற் றாத திமிரமுமே. ... 6

திமிரத் திமிரக் கதரங்க கோபசெவ் வேலகைவேல்
திமிரத் திமிரக் ககுலாந் தகவரைத் தேன்பெருகுந்
திமிரத் திமிரத் தனையாவி யாளுமென் சேவகனே
திமிரத் திமிரக் கனலாய சந்தன சீதளமே. ... 7

சீதனங் கோடு புயங்கைகொண் டார்தந் திருமருக
சீதனங் கோடு முடியாளர் சேய்தனக் கேதுளதோ
சீதனங் கோடு னிதருமென் பார்தொழுந் தேவிபெறுஞ்
சீதனங் கோடு கொடிவேன் மயூரஞ் சிலையரசே. ... 8

சிலைமத னம்படு மாறெழுஞ் சேய்மயி லுச்சிட்டவெச்
சிலைமத னம்படு சிந்துவை யிந்துவைச் செய்வதென்யான்
சிலைமத னம்படு காட்டுவர் கேளிருஞ் செங்கழுநீர்ச்
சிலைமத னம்படு தாமரை வாவி திரள்சங்கமே. ... 9

திரளக் கரக்கரை வென்கண்ட வேலன் றிசைமுகன்மால்
திரளக் கரக்கரை யான்பாட நாடுதல் செய்யசங்க
திரளக் கரக்கரை காண்பான்கைந் நீத்திசை வார்பனிக்க
திரளக் கரக்கரை வானீட்டு மைந்தர்புந் திக்கொக்குமே. ... 10

திக்கத்திக் கோடு படிபுடைச் சூதத் தெறிபடபத்
திக்கத்திக் கோடு கடடக் கடறடி சேப்படைச்சத்
திக்கத்திக் கோடு துறைத்திறத் தற்ற குறக்குறச்சத்
திக்கத்திக் கோடு பறித்துக்கொ டாதி சிறைபிறப்பே. ... 11

சிறைவர வாமையி லேறிச் சிகரி தகரவந்து
சிறைவர வாமையில் கூப்பிடத் தானவர் சேனைகொண்ட
சிறைவர வாமையில் வாங்கிதன் றேங்கழல் யாங்கழலாச்
சிறைவர வாமையி னெஞ்சுட னேநின்று தேங்குவதே. ... 12

தேங்கா வனமும் மதகரி வேந்துடன் சேர்ந்த விண்ணோர்
தேங்கா வனமுனை யவ்வேற் பணியெனுஞ் சேயிடமேல்
தேங்கா வனமுந் தளர்நடை யாயஞ்சல் செண்பகப்பூந்
தேங்கா வனமுங் கழுநீ ரிலஞ்சியுஞ் செந்திலுமே. ... 13

செந்தி லகத்தலர் வாணுதல் வேடிச் சிமுகபங்க
செந்தி லகத்தலர் துண்டமென் னாநின்ற சேயசங்க
செந்தி லகத்தலர் ராசிதந் தானைச் சிறையிட்டவேற்
செந்தி லகத்தலர் தூற்றிடுங் கேடு திவாகருளே. ... 14

திவாகர கன்ன கொடைப்பாரி யென்றுழ ரீனவல்லீர்
திவாகர கன்ன புரக்குழை வல்லி செருக்குரவந்
திவாகர கன்ன சுகவா சகதிறல் வேல்கொடென்புந்
திவாகர கன்ன மறலி யிடாதுயிர்ச் சேவலுக்கே. ... 15

சேவற் கொடியும் பனிசாந் தகனுந் திருக்கரத்துச்
சேவற் கொடியுங் கொடியகண் டாய்ததினை சூழ்புனத்துச்
சேவற் கொடியுந் திவளத் தவளுந்தந் திக்களபச்
சேவற் கொடியு முடையாய் பிரியினுஞ் சேரினுமே. ... 16

சேரிக் குவடு மொழிவிழி யாடனச் செவ்விகுறச்
சேரிக் குவடு விளைந்ததன் றேநன்று தெண்டிரைநீர்
சேரிக் குவடு கடைநாளி லுஞ்சிதை வற்றசெவ்வேள்
சேரிக் குவடு புடைசூழ் புனத்திற் றினைவிளைவே. ... 17

தினைவேத் தியன்புசெய் வேந்தன் பதாம்புயத் திற்பத்திபுந்
தினைவேத் தியமுகந் தேற்றினர் மாற்றினர் பாற்றினந்தீத்
தினைவேத் தியர்நெறி செல்லாத விந்தியத் தித்தியினத்
தினைவேத் தியங்குயிர் கூற்றாரி லூசிடுஞ் சீயுடம்பே. ... 18

சீயனம் போதி யெனவாய் புதைத்துச் செவித்தரத்தோல்
சீயனம் போதி யமலையிற் றாதை சிறுமுநிவன்

சீயனம் போதி கடைந்தான் மருகன்செப் பத்திகைத்தார்
சீயனம் போதி லரனா திருக்கென் செயக்கற்றதே. ... 19

செயதுங்க பத்திரி போற்றும் பகீர திகரசெவ்வேற்
செயதுங்க பத்திரி சூடுங் குறத்தி திறத்ததண்டஞ்
செயதுங்க பத்திரி புத்திரி பாதத்தர் செல்வதென்பாற்
செயதுங்க பத்திரி யத்திரி யாதிரென் சிந்தையிலே. ... 20

சிந்தா குலவ ரிசைப்பேரு மூருநஞ் சீருமென்றோர்
சிந்தா குலவ ரிடத்தணு காதரு டீமதலை
சிந்தா குலவரி மாயுர வீர செகமளப்பச்
சிந்தா குலவரி மருக சூரனைச் செற்றவனே. ... 21

செற்றை வரும்பழ னஞ்சோலை யிஞ்சி திகழ்வரைமேற்
செற்றை வரும்பழ நிக்கந்த தேற்றிடு நூற்றுவரைச்
செற்றை வரும்பழ நாடாள நாடிகண் சேய்விடுத்த
செற்றை வரும்பழ மாங்கூடு வேமத் தினத்தில்வந்தே. ... 22

தினகர ரக்கர தங்கெடுத் தார்குரு தேசிகர்செந்
தினகர ரக்கர மாறுடை யார்தெய்வ வாரணத்தந்
தினகர ரக்கர சத்தியின் றாகிலத் தேவர்நண்ப
தினகர ரக்கர தந்தீர்வ ரீர்வர் செகமெங்குமே. ... 23

செகம்புர வார்கிளை யெல்லா மருண்டு திரண்டுகொண்ட
செகம்புர வாதிங்ஙன் செய்வதென் னோமயல் செய்யவன்பு
செகம்புர வாச மெனத்துயில் வார்செப்ப பங்கபங்க
செகம்புர வாமுரல் செந்தூர வென்னத் தெளிதருமே. ... 24

தெளிதரு முத்தமிழ் வேதத்திற் றெய்வப் பலகையின்கீழ்
தெளிதரு முத்தமிழா நித்தர் சேவித்து நின்றதென்னாள்
தெளிதரு முத்தமிழ் தேய்நகை வாசகச் செல்விதினைத்
தெளிதரு முத்தமிழ் செவ்வே ளிருப்பச் செவிகுனித்தே. ... 25

செவிக்குன்ற வாரண நல்கிசை பூட்டவன் சிந்தையம்பு
செவிக்குன்ற வாரண மஞ்சலென் றாண்டது நீண்டகன்மச்
செவிக்குன்ற வாரண வேலா யுதஞ்செற்ற துற்றனகட்
செவிக்குன்ற வாரண வள்ளிபொற் றாண்மற்றென் றேடுவதே. ... 26

தேடிக் கொடும்படை கைக்கூற் றடாதுளஞ் சேவின்மைமீன்
தேடிக் கொடும்படை கோமான் சிறைபட வேறுளபுத்
தேடிக் கொடும்படை யாவெகு நாட்டன் சிறைகளையுந்
தேடிக் கொடும்படை மின்கேள்வ னற்றுணை சிக்கெனவே. ... 27

சிக்குறத் தத்தை வழங்கா திழந்து தியங்குவர்தே
சிக்குறத் தத்தை வடிவே லனார்சில ரன்பர்செந்தாள்
சிக்குறத் தத்தை கடிந்தேனல் காக்குஞ் சிறுமிகுறிஞ்
சிக்குறத் தத்தை யனகிலெப் போதுந் திகழ்புயனே. ... 28

திகழு மலங்கற் கழல்பணி வார்சொற் படிசெய்யவோ
திகழு மலங்கற் பகவூர் செருத்தணி செப்பிவெண்பூ
திகழு மலங்கற் பருளுமென் னாவமண் சேனையுபா
திகழு மலங்கற் குரைத்தோ னலதில்லை தெய்வங்களே. ... 29

தெய்வ மணம்புணர் தீகால் வெளிசெய்த தேவரைந்த
தெய்வ மணம்புண ராரிக்கு மருக செச்சையந்தார்
தெய்வ மணம்புண ருங்குழ லாளைத் தினைப்புனத்தே
தெய்வ மணம்புணர் கந்தனென் னீருங்க டீதறவே. ... 30

தீதா வசவ னுபவிக்க மண்ணிலும் விண்ணிலுஞ்செந்
தீதா வசவ னியாயஞ்செய் வேதிய ரேதியங்காத்
தீதா வசவ னிமலர்செல் வாசாக் கிரவசத்த
தீதா வசவன் புறப்பா ரெனுமுத்தி சித்திக்கவே. ... 31

சித்திக்கத் தத்துவ ருத்திர பாலக செச்சைகுறிஞ்
சித்திக்கத் தத்துவ ரத்தியின் மாவென்ற சேவகவிச்
சித்திக்கத் தத்துவர் வாய்மொழி மாதர்க் கெனுந்திணைவா
சித்திக்கத் தத்துவ ருத்தப் படாதுநற் சேதனமே. ... 32

சேதனந் தந்துறை யென்றுமை செப்புங் குருந்துறைகாற்
சேதனந் தந்துறை யல்லிமன் வாவிச் செந்தூர்கருத
சேதனந் தந்துறை யென்றறி யார்திற நீங்கிநெஞ்சே
சேதனந் தந்துறை மற்றுமுற் றாடித் திரிகைவிட்டே. ... 33

திரிகையி லாயிர வெல்லாழி மண்விண் டருசிரபாத்
திரிகையி லாயிர வாநந்த நாடகி சேரிமகோத்

திரிகையி லாயிர மிக்குமைந் தாசெந்தி லாயொருகால்
திரிகையி லாயிரக் கோடிசுற் றோடுந் திருத்துளமே. ... 34

திருத்துள வாரிகல் போதுடன் சேண்மழை தூங்குஞ்சங்க
திருத்துள வாரிதி கண்டுயி லாசெயன் மாண்டசிந்தை
திருத்துள வாரன்னை செந்தூரையன் னள்செம் மேனியென்பு
திருத்துள வார்சடை யீசர்மைந் தாவினிச் செச்சைநல்கே. ... 35

செச்சைய வாவி கலயில்வல்வாயிடைச் சேடனிற்கச்
செச்சைய வாவி பருகுஞ் சிகாவல செங்கைவெந்தீ
செச்சைய வாவி விடுகெனுஞ் செல்வநின் றாளணுகச்
செச்சைய வாவி னுயிர்வாழ் வினியலஞ் சீர்ப்பினுமே. ... 36

சீர்க்கை வனப்பு மலர்வேங்கை யானவன் செஞ்சிலையோர்
சீர்க்கை வனப்பு னிதத்தவ வேடன் றினைவளைக்குஞ்
சீர்க்கை வனப்பு னமதுருக் காட்டிய சேய்தமிழ்நூற்
சீர்க்கை வனப்பு னிமிர்சடை யோன்மகன் சிற்றடிக்கே. ... 37
சிற்றம் பலத்தை யரன்புநெய் நூற்றிரி சிந்தையிடுஞ்
சிற்றம் பலத்தை வரஞான தீபமிட் டார்க் குப்பரி
சிற்றம் பலத்தை யருளுஞ்செந் தூரர் பகைக்குலமாஞ்
சிற்றம் பலத்தைப் பதவரந் தோளிலிந் தீவரமே. ... 38

தீவர கந்தரி தாம்பகி ராருற வானசெம்பொன்
தீவர கந்தரி யாநொந்த போதினிற் செச்சையவிந்
தீவர கந்தரி சிந்துரை பாக சிவகரண
தீவர கந்த ரிபுதீ ருனதடி சேமநட்பே. ... 39

சேமர விக்கம் படையாக வீசுப தேசமுன்னூற்
சேமர விக்கம் பலந்தரு வாய்செரு வாயவெஞ்சூர்ச்
சேமர விக்கம் திரித்தாய் வருத்திய வன்றிறென்றல்
சேமர விக்கம் புயவாளி விண்டிரை தெண்டிரையே. ... 40

தெண்டன் புரந்தர வக்குன்றில் வாழ்கந்த சிந்துவிலுத்
தெண்டன் புரந்தர லோகஞ் செறாதுசெற் றோய்களைவாய்
தெண்டன் புரந்தர நற்கேள் சிறுவ ரழச்செய்தெம்மைத்
தெண்டன் புரந்தர வின்படி நூக்கிய தீநரகே. ... 41

தீனந் தினத்து தரச்செல்வர் பாற்சென் றெனக்கென்பதோர்
தீனந் தினத்து முதரா ணலஞ்சுடச் சேர்ந்துசுடுந்
தீனந் தினத்து ணிகளைசெங் கோட்டினன் செந்திலந்நீர்
தீனந் தினத்து தவத்துப் பிரசதஞ் செய்யவற்றே. ... 42

செய்யசெந் தாமரை யில்லாத மாதுடன் செந்தினைசூழ்
செய்யசெந் தாமரை மானார் சிலம்பிற் கலந்துறையுஞ்
செய்யசெந் தாமரை யென்னுங் குமார சிறுசதங்கைச்
செய்யசெந் தாமரை சேர்வதென் றோவினை சேய்தொலைத்தே.... 43

சேதாம் பலதுறை வேறும் பணிகங்கை செல்வநந்தன்
சேதாம் பலதுறை யாதசிற் றாயன் றிருமருக
சேதாம் பலதுறை செவ்வாய்க் குறத்தி திறத்தமுத்திச்
சேதாம் பலதுறை யீதென் றெனக்குப தேசநல்கே. ... 44

தேசம் புகல வயிலே யெனச்சிறை புக்கொருகந்
தேசம் புகல வணவாரி செற்றவ னீசற்குப
தேசம் புகல திகவாச கன்சிறி தோர்கிலன்மாந்
தேசம் புகல கமுதவி மானைச் செருச் செய்வதே. ... 45

செருக்கும் பராக வயிராவ தத்தெய்வ யானைமணஞ்
செருக்கும் பராக தனந்தோய் கடம்ப செகமதநூல்
செருக்கும் பராக மநிரு பனந்தந் தெளிவியம்பு
செருக்கும் பராகம் விடுங்கடை நாளுந் திடம்பெறவே. ... 46

திடம்படு கத்துங் கெடீர்கன்ம லோகச் சிலுகுமச்சோ
திடம்படு கத்துந் திரித்தம்பு வாலி யுரத்தும்பத்துத்
திடம்படு கத்துந் தெறித்தான் மருக திருகுமும்ம
திடம்படு கத்துங் கநகங் குனித்தவன் சேயெனுமே. ... 47

சேயவன் புந்தி வனவாச மாதுடன் சேர்ந்தசெந்திற்
சேயவன் புந்தி கனிசா சராந்தக சேந்தவென்னிற்
சேயவன் புந்தி பனிப்பானு வெள்ளிபொன் செங்கதிரோன்
சேயவன் புந்தி தடுமாற வேதருஞ் சேதமின்றே. ... 48

சேதக மொன்று மனாதியுந் தாதையுந் தேடரியார்
சேதக மொன்றுஞ் சதங்கையங் கிண்கிணி செச்சையந்தாள்

சேதக மொன்றும் வகைபணி யாயினித் தீயவினைச்
சேதக மொன்று மறியா துழலுயிர்ச் சித்திரமே. ... 49

சித்திர மிக்க னவில்வாழ் வெனத்தெளி யுந்தவவா
சித்திர மிக்க னெறிக்கழிந் தேற்கினிச் செச்சைநல்வி
சித்திர மிக்க தனக்குறத் தோகை திறத்தமுத்தி
சித்திர மிக்க வருளாய் பிறவிச் சிகையறவே. ... 50

சிகைத்தோகை மாமயில் வீரா சிலம்புஞ் சிலம்பம்புரா
சிகைத்தோகை மாமயில் வாங்கிப் பொருது திசைமுகன்வா
சிகைத்தோகை மாமயில் வானில்வைத் தோய்வெஞ் செருமகள்வா
சிகைத்தோகை மாமயில் செவ்விநற் கீரர்சொற் றித்தித்ததே. ... 51

தித்திக்குந் தொந்திக்கு நித்தம் புரியுஞ் சிவன் செவிபத்
தித்திக்குந் தொந்திக் கறமொழி பாலக தேனலைத்துத்
தித்திக்குந் தொந்திக் கிளையாய் விளையுயிர்க் குஞ்சிதைதோல்
தித்திக்குந் தொந்திப் பனவேது செய்வினைத் தீவிலங்கே. ... 52

தீவிலங் கங்கை தரித்தார் குமார திமிர முந்நீர்
தீவிலங் கங்கை வருமான் மருக தெரிவற்றவான்
தீவிலங் கங்கை வரவா விரைக்குத் திரிந்துழலுந்
தீவிலங் கங்கை யமன்றொட ராமற் றிதம்பெறவே. ... 53

திதத்தத்தத் தித்தத் திதிதாதை தாததுத் தித்தத்திதா
திதத்தத்தத் தித்த திதித்தித்த தேதுத்து தித்திதத்தா
திதத்தத்தத் தித்தத்தை தாததி தேதுதை தாததத்து
திதத்தத்தத் தித்தித்தி தீதீ திதிதுதி தீதொத்ததே. ... 54

தீதோ மரணந் தவிரும் பிறப்பறுந் தீயகற்புந்
தீதோ மரணம் பரமீது தானவர் சேனை முற்றுந்
தீதோ மரணந் தனபூசு ரர்திரண் டேத்தியமுத்
தீதோ மரண மலையாளி யென்றுரை தென்னுறவே. ... 55

தென்ன வனங்கனஞ் சூழ்காத் திரிநக சூலகரத்
தென்ன வனங்கனந் தப்பத நீட்டினன் செல்வமுன்பின்
தென்ன வனங்கனன் னீற்றாற் றிருத்திய தென்னவின்னந்
தென்ன வனங்கனங் கைச்சிலைக் கூனையுந் தீர்த்தருளே. ... 56

தீத்தன் பரவை வெளிநீங்கிச் சேய்தொழச் செல்பதவுத்
தீத்தன் பரவை முறையிட மாங்குறை தீங்குறவே
தீத்தன் பரவை தழைக்கவிண் காவெனச் சென்னியின்மேல்
தீத்தன் பரவையில் வேலத்த னேகுரு சீலத்தனே. ... 57

சீலங் கனமுற்ற பங்கா கரசல தீரக்கநி
சீலங் கனமுற்ற முத்தூர்செந் தூர சிகண்டியஞ்சு
சீலங் கனமுற்ற வேதனை மேவித் தியங்கினஞ்சீ
சீலங் கனமுற்ற விப்பிறப் பூடினிச் சேர்ப்பதன்றே. ... 58

சேர்ப்பது மாலய நீலோற் பலகிரித் தெய்வவள்ளி
சேர்ப்பது மாலய முற்றா ரெனப்பலர் செப்பவெப்புச்
சேர்ப்பது மாலய வத்தைமன் யாக்கை சிதைவதன்முன்
சேர்ப்பது மாலய வாசவன் செப்பிய செப்பதத்தே. ... 59

செப்பத் தமதிலை மாற்றார் கொளுமுன்னங் செல்வர்க்கிடச்
செப்பத் தமதிலை யெங்ஙனுய் வார்தெய்வ வேழமுகன்
செப்பத் தமதிலை வானுத னோக்கினர் சேணில்வெள்ளிச்
செப்பத் தமதிலை வென்றார் குமாரவத் திக்கரசே. ... 60

திக்கர சத்தி தவன்சென்று முன்றி திகுமரர்வந்
திக்கர சத்தி யிடத்தோயென் செய்வ தெனத்தருநீ
திக்கர சத்தி விதிர்த்திலை யேலெவன் செய்குவரத்
திக்கர சத்தி யலைவாய் வளர்நித் திலக்கொழுந்தே. ... 61

திலமுந் தயில முநிகர வெங்குந் திகழ்தருசெந்
திலமுந் தயில முருகா வெனாதத் திநகையினித்
திலமுந் தயிலமு தத்தா லுருகிய சித்தவென்னே
திலமுந் தயில கலவினை மேவித் தியங்குவதே. ... 62

தியங்காப் பொறியுண் டெனுந்தனுத் தீதலு மேதியையூர்
தியங்காப் பொறியுண் டவமிலி யேயென்று செப்பலுஞ்சத்
தியங்காப் பொறியுண் டயன்கைப் படாது திரவெற்புநி
தியங்காப் பொறியுண்டை பண்டுயப் போர்செய்த சேவகனே. ... 63

சேவக மன்ன மலர்க்கோமுன் னீசொலத் தெய்வவள்ளி
சேவக மன்ன வதனாம் புயகிரி செற்றமுழுச்
சேவக மன்ன திருவாவி னன்குடிச் செல்வகல்விச்
சேவக மன்ன முநிக்கெங்ங னாணித் திகைப்புற்றதே. ... 64

திகைப்படங் கப்புயந் தந்தரு ளானென் படிங்கணிய
திகைப்படங் கத்தமை யார்செந்தி லாரென்ப டென்னனுய
திகைப்படங் கப்புகல் சேயென்பள் கன்னிகண் ணீர்தரவி
திகைப்படங் கத்தமை யாதெமை யாட்கொளுஞ்சீகரமே. ... 65

சீகர சிந்துர வுத்தவெஞ் சூர செயபுயவ
சீகர சிந்துர வல்லிசிங் கார சிவசுதசு
சீகர சிந்துர கந்தர வாகன் சிறைவிடுஞ்சு
சீகர சிந்துர மால்வினைக் குன்றைச் சிகண்டிகொண்டே. ... 66

சிகண்டிதத் தத்த மரவாரி விட்டத் திதிபுத்ரரா
சிகண்டிதத் தத்த நகபூ தரதெய்வ வள்ளிக்கொடிச்
சிகண்டிதத் தத்த மலர்மேற் குவித்திடை செப்புருவஞ்
சிகண்டிதத் தத்த கறபோ பலமென்னுஞ் சேகரனே. ... 67

சேகர வாரண வேல்வீர வேடச் சிறுமிபத
சேகர வாரண மேவும் புயாசல தீவினையின்
சேகர வாரண வெற்பாள நாளுந் த்ரியம்பகனார்
சேகர வாரண நின்கையில் வாரணஞ் சீவனொன்றே. ... 68

சீவன சத்துரு கன்பாற் பிறப்பறத் தேவருய்யச்
சீவன சத்துரு மிக்குமெய் யோன்கையிற் சேர்த்தசெவ்வேள்
சீவன சத்துருச் செய்யாண் மருகவெ னாதிடையே
சீவன சத்துரு வெய்தியெய் தாப்பழி சிந்திப்பதே. ... 69

சிந்துர வித்தக வாரும் புகர்முகத் தெய்வவெள்ளைச்
சிந்துர வித்தக வல்லிசிங் காரசெந் தூரகுன்றஞ்
சிந்துர வித்தக முத்திக்கு மாய்நின்ற செல்வதுஞ்சா
சிந்துர வித்தக னம்போலு மிங்கிளந் திங்களுமே. ... 70

திங்களு மாசுண மும்புனை வார்செல்வ னென்னையிரு
திங்களு மாசுண மாக்கும் பதாம்புயன் செந்திலன்னாள்

திங்களு மாசுண மன்போல் விழியுஞ் செழுங்கரும்புந்
திங்களு மாசுண நன்றான மாற்றமுந் தீட்டினன்றே. ... 71

தீட்டப் படாவினி யுன்னாலென் சென்னி கறைப்பிறப்பில்
தீட்டப் படாவி யவரல்லன் யான்றிக்கு நான்மருப்புத்
தீட்டப் படாவி தமுகா சலன்சிறை விட்டவன்றாள்
தீட்டப் படாவி வனையே நினைவன் றிசாமுகனே. ... 72

திசாமுக வேதனை யன்பாற் கரன்றிங் கடங்களவ
திசாமுக வேதனை யீறிலு மீறிலர் சீறுமம்போ
திசாமுக வேதனை வென்கண்ட வேலன் றினைப்புனத்தந்
திசாமுக வேதனை நண்ணுதண் கார்வரை சேர்பவரே. ... 73

சேரப் பொருப்பட வித்தே னிறைவன் றிரைசிறையைச்
சேரப் பொருப்பட வல்லவன் சூரைச் சிகரியுடன்
சேரப் பொருப்பட வென்றண்ட ரேத்திய சேவகன்வான்
சேரப் பொருப்பட வேணியிற் சேர்த்தவன் செய்தவமே. ... 74

செய்தவத் தாலஞ்சு சீரெழுத் தோதிலத் தீதலருஞ்
செய்தவத் தாலஞ்சு கம்பெறச் சேயுரைக் கேற்றுருப்போய்ச்
செய்தவத் தாலஞ்சு வைக்கனி யீன்றதென் னேம்வினையே
செய்தவத் தாலஞ்சு கின்றன மும்மலச் செம்மல்கொண்டே. ... 75

செம்மலை வண்டு கடரங்க மாவென்ற திண்படைவேற்
செம்மலை வண்டு வசவார ணத்தனைச் செப்பவுன்னிச்
செம்மலை வண்டு தவந்தமிழ்ப் பாணதெண் டீங்கையில்வாய
செம்மலை வண்டு விருப்புறு மோவிது தேர்ந்துரையே. ... 76

தேரை விடப்பணி யேறேறி முப்புரஞ் செற்றபிரான்
தேரை விடப்பணி சூராரி யென்க தெரிவையர்பால்
தேரை விடப்பணி வாய்ப்படு மாறு செறிந்தலகைத்
தேரை விடப்பணித் தென்றோடி யென்றுந் திரிபவரே. ... 77

திரிபுரத் தப்புப் புவிதரத் தோன்றி சிலைபிடிப்பத்
திரிபுரத் தப்புத் தலைப்பட நாண்டொடுஞ் சேவகன்கோத்
திரிபுரத் தப்புத் திரமான் மருக திருக்கையம்போ
திரிபுரத் தப்புத் துறையா யுதவெனச் செப்புநெஞ்சே. ... 78

செப்பா ரமுதலை மன்னோ திகனங் குரும்பைமுலை
செப்பா ரமுதலை கண்கா னகைமுருந் தீரிருகண்
செப்பா ரமுதலை வாவியிற் சென்ற பிரான்மருகன்
செப்பா ரமுதலை வேர்களை வான்வரைச் சீரினுக்கே. ... 79

சீராம ராம சிவசங்க ராநுந் திருமுடிக்குச்
சீராம ராம துகரத் துழாயென்பர் தெண்டிரைமேற்
சீராம ராம நிறந்திறக் கத்தொட்ட சேய்கழற்குச்
சீராம ராம னிமையோர் மகுடச் சிகாவிம்பமே. ... 80

சிகாவல வன்பரி தப்பாடு செய்யுஞ்செவ் வேலவிலஞ்
சிகாவல வன்பரி வூரார் மதனித் திலஞ்சலரா
சிகாவல வன்பரி யங்கங் குழல்பெற்ற தேமொழிவஞ்
சிகாவல வன்பரி யானல மன்றிலுந் தென்றலுமே. ... 81

தென்றலை யம்பு புனைவார் குமார திமிரமுந்நீர்த்
தென்றலை யம்பு மின்கோ மருக செழுமறைதேர்
தென்றலை யம்பு சகபூ தரவெரி சிந்திமன்றல்
தென்றலை யம்பு படுநெறி போயுயிர் தீர்க்கின்றதே. ... 82

தீரா கமல சலிகித போக மெனத்தெளிந்துந்
தீரா கமல மெனக்கரு தாததென் சேயவநூல்
தீரா கமல குகரம் பொறுப்ப னெனத்திருக்கண்
தீரா கமல மரவே கருகச் சிவந்தவனே. ... 83

சிவசிவ சங்கர வேலா யுததினை வஞ்சிகுறிஞ்
சிவசிவ சங்கர வாமயில் வீர செகந்திருக்கண்
சிவசிவ சங்கர மாவை யெனுந்திற லோய்பொறைவா
சிவசிவ சங்கர மான்பட்ட வாவொளி சேர்ந்தபின்னே. ... 84

சேர்ந்த மராத்துடர் தானவர் சேனையைத் தெண்டிரைக்கண்
சேர்ந்த மராத்துடன் கொன்றசெவ் வேல திருமுடிமேற்
சேர்ந்த மராத்துட ரச்சூடி மைந்த திளைத்திளைத்தேன்
சேர்ந்த மராத்துட ரின்னாரி யென்னுமிச் சேறுபுக்கே. ... 85

சேறலைத் தாறலைக் கப்பா லெழுந்து செழுங்கமுகிற்
சேறலைத் தாறலைக் குஞ்செந்தி லாய்சிந்தை தீநெறியிற்

சேறலைத் தாறலைத் தீர்க்குங் குமார திரியவினைச்
சேறலைத் தாறலைக் கத்தகு மோமெய்த் திறங்கண்டுமே. ... 86

திறம்பா டுவர்தண் புனத்தெய்வ மேயென்பர் சேதத்துமாந்
திறம்பா டுவர்முது நீரெனக் காய்பவர் செந்தினைமேல்
திறம்பா டுவரிதழ் கண்டுரு காநிற்பர் செப்புறச்செந்
திறம்பா டுவரி லிவர்வல் லவர்நஞ் செயல்கொள்ளவே. ... 87

செயலங்கை வாளை யிறைகோயி லைச்சிவ னாரமுதைச்
செயலங்கை வாளை முனிகொண்டல் வாளியைத் தேவர்பிரான்
செயலங்கை வாளை முனைவேலை யன்னவிச் சேயுறையுஞ்
செயலங்கை வாளை யுகள்செந்தில் வாழ்பவள் சேல்விழியே. ... 88

சேலையி லாருந் தவன்சூல மேறச் சினத்தவன்கண்
சேலையி லாருந் திவனோற் பவையர சிந்திரியச்
சேலையி லாரும் பராபரி புக்குறச் சிக்கெனுமிச்
சேலையி லாருந் திறையிட் டனர்தங்கள் சித்தங்களே. ... 89

சித்தத் தரங்கத்தர் சித்தியெய் தத்திரி கின்றதென்னர்ச
சித்தத் தரங்கத்தர் சந்ததி யேசெந்தி லாய்சலரா
சித்தத் தரங்கத்த ரக்கரைச் செற்றகந் தாதிங்களிஞ்
சித்தத் தரங்கத்தர் சேயா ரணத்தந் திகிரியையே. ... 90

திகிரி வலம்புரி மாற்கரி யார்க்குப தேசஞ்சொன்ன
திகிரி வலம்புரி செய்யா ரிலஞ்சிசெந் தூர்கனதந்
திகிரி வலம்புரி வேறும் படைத்தருள் சேய்தணியில்
திகிரி வலம்புரி சூடிய வாநன்று சேடியின்றே. ... 91

சேடி வணங்கு வளைத்தோ ளனெப் புணர் சேயவட
சேடி வணங்கு திருத்தணி காவல நின்செருக்காற்
சேடி வணங்கு கொடியிடை யாரையென் செப்புமுலைச்
சேடி வணங்கு தலைக்களி றீந்தது செல்லநில்லே. ... 92

செல்லலை யம்பொழில் சூழ்செந்தி லானறி யானிறைகைச்
செல்லலை யம்பொழி லெங்கணு மேற்ப வெனத்தெறித்த
செல்லலை யம்பொழி லங்கைக் கருடிரு மானிறம்போற்
செல்லலை யம்பொழி லாகவ மாதுயிர் சேதிப்பதே. ... 93

சேதிக் கனைத்து களதாக்கு நோக்கினன் செல்வசெந்திற்
சேதிக் கனைத்து நிலைபெறச் சூரங்கஞ் சீரங்கமால்
சேதிக் கனைத்து வரிதோ யயில்கொடெற் சேர்க்கவந்தாற்
சேதிக் கனைத்து வருமா மறலி திறலினையே. ... 94

திறவா வனக புரிவாச னீக்கச் சிகரிநெஞ்சந்
திறவா வனச முனியைவென் றோய்தென் றிசைத்திருச்செந்
திறவா வனமயி லோயந்த காலமென் சிந்தைவைக்கத்
திறவா வனநின் றிருவான தண்டைத் திருவடியே. ... 95

திருக்கையம் போதிக ளோகஞ்ச மோநஞ்ச மோதிருமால்
திருக்கையம் போசெய்ய வேலோ விலோசனந் தென்னனங்கத்
திருக்கையம் போருகக் கைந்நீற்றின் மாற்றித்தென் னூல்சிவபத்
திருக்கையம் போக வுரைத்தோன் சிலம்பிற் சிறுமிதற்கே. ... 96

சிறுமிக் குமர நிகர்வீ பகிரச் சிதையுயிர்த்துச்
சிறுமிக் குமர சரணமென் னீருய்விர் செந்திலைமேற்
சிறுமிக் குமர புரைத்துநின் றோன்சிலை வேட்டுவனெச்
சிறுமிக் குமர வணிமுடி யான்மகன் சீறடிக்கே. ... 97

சீரங்க ராக மறமோது திகிரி செங்கைகொண்ட
சீரங்க ராக மருகந்த தேசிக செந்திலைமேற்
சீரங்க ராக தனகிரி தோய்கந்த செந்தமிழ்நூற்
சீரங்க ராக விநோதவென் பார்க்கில்லை தீவினையே. ... 98

தீவினை யற்ற சினந்தீ ரகத்துண்மெய்த் தீபநந்தந்
தீவினை யற்ற வநந்தா தெடுத்தனஞ் செந்திலைமேல்
தீவினை யற்ற புனமான் கொழுநன் செழுங்கனகத்
தீவினை யற்ற வடியார்க் கருள்பெறுஞ் செல்வனுக்கே. ... 99

செல்வந் திகழு மலநெஞ்ச மேயவன் றெய்வமின்னூர்
செல்வந் திகழு நமதின்மை தீர்க்கும்வெங் கூற்றுவற்குச்
செல்வந் திகழுந் திருக்கையில் வேறினை காத்த செல்வி
செல்வந் திகழு மணவாள னல்குந் திருவடியே. ... 100

**... கந்தரந்தாதி முற்றிட்டு.**

# கந்தர் சரணப்பத்து

1. அருளார் அமுதே சரணம் சரணம்
அழகா அமலா சரணம் சரணம்
பொருளா எனைஆள் புனிதா சரணம்
பொன்னே மணியே சரணம் சரணம்
மருள்வார்க் கரியாய் சரணம் சரணம்
மயில்வா கனனே சரணம் சரணம்
கருணா லயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

2. பண்ணேர் மறையின் பயனே சரணம்
பதியே பரமே சரணம் சரணம்
விண்ணோர் ஒளியே வெளியே சரணம்
வெளியின் விளைவே சரணம் சரணம்
உண்ணேர் உயிரே உணர்வே சரணம்
உருவே அருவே உறவே சரணம்
கண்ணே மணியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

3. முடியா முதலே சரணம் சரணம்
முருகா குமரா சரணம் சரணம்
வடிவேல் அரசே சரணம் சரணம்
மயிலூர் மணியே சரணம் சரணம்
அடியார்க் கெளியாய் சரணம் சரணம்
அரியாய் பெரியாய் சரணம் சரணம்
கடியாக் கதியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

4. பூவே மணமே சரணம் சரணம்
பொருளே அருளே சரணம் சரணம்
கோவே குகனே சரணம் சரணம்
குருவே திருவே சரணம் சரணம்
தேவே தெளிவே சரணம் சரணம்
சிவசண் முகனே சரணம் சரணம்

காவேர் தருவே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

5. நடவும் தனிமா மயிலோய் சரணம்
நல்லார் புகழும் வல்லோய் சரணம்
திடமும் திருவும் தருவோய் சரணம்
தேவர்க் கரியாய் சரணம் சரணம்
தடவண் புயனே சரணம் சரணம்
தனிமா முதலே சரணம் சரணம்
கடவுள் மணியே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

6. கோலக் குறமான் கணவா சரணம்
குலமா மணியே சரணம் சரணம்
சீலத் தவருக் கருள்வோய்சரணம்
சிவனார் புதல்வா சரணம் சரணம்
ஞாலத் துயர்தீர் நலனே சரணம்
நடுவா கியநல் ஒளியே சரணம்
காலன் தெறுவோய் சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

7. நங்கட் கிளியாய் சரணம் சரணம்
நந்தா உயர்சம் பந்தா சரணம்
திங்கட் சடையான் மகனே சரணம்
சிவைதந் தருளும் புதல்வா சரணம்
துங்கச் சுகம்நன் றருள்வோய் சரணம்
சுரர்வாழ்த் திடுநம் துரையே சரணம்
கங்கைக் கொருமா மதலாய் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

8. ஒளியுள் ஒளியே சரணம் சரணம்
ஒன்றே பலவே சரணம் சரணம்
தெளியும் தெருளே சரணம் சரணம்
சிவமே தவமே சரணம் சரணம்
அளியும் கனியே சரணம் சரணம்
அமுதே அறிவே சரணம் சரணம்

களியொன் றருள்வோய் சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

9. மன்னே எனைஆள் வரதா சரணம்
மதியே அடியேன் வாழ்வே சரணம்
பொன்னே புனிதா சரணம் சரணம்
புகழ்வார் இதயம் புகுவாய் சரணம்
அன்னே வடிவேல் அரசே சரணம்
அறுமா முகனே சரணம் சரணம்
கன்னேர் புயனே சரணம் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

10. வேதப் பொருளே சரணம் சரணம்
விண்ணோர் பெருமாள் சரணம் சரணம்
போதத் திறனே சரணம் சரணம்
புனைமா மயிலோய் சரணம் சரணம்
நாதத் தொலியே சரணம் சரணம்
நவைஇல் லவனே சரணம் சரணம்
காதுக் கினிதாம் புகழோய் சரணம்
கந்தா சரணம் சரணம் சரணம்

**திருமுருகாற்றுப்படை** - நேரிசை வெண்பாக்கள்
(திருமுருகாற்றுப்படை தோன்றிய பின்னர், பிற்காலச் சான்றோர்கள் பாடியருளிய நேரிசை வெண்பாக்கள் சில பின்வருமாறு):

'குன்றம் எறிந்தாய்! குரைகடலில் சூர்தடிந்தாய்!
புன்தலைய பூதப்பொரு படையாய் - என்றும்
இளையாய்! அழகியாய்! ஏறுஊர்ந்தான் ஏறே!
உளையாய்! என் உள்ளத்து உறை.' - - - - - - - 1

'குன்றம் எறிந்ததுவும் குன்றப்போர் செய்ததுவும்
அன்றுஅங்கு அமரர் இடர் தீர்த்ததுவும் - இன்று என்னைக்
கைவிடா நின்றதுவும் கற்பொதும்பில் காத்ததுவும்
மெய்விடா வீரன்கை வேல்!' - - - - - - - - - - - - 2

'வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்தவேல் உண்டே துணை.' -------- 3

'இன்னம் ஒருகால் எனது இடும்பைக் குன்றுக்கும்
கொல்நவில் வேல்சூர் தடிந்த கொற்றவா! - முன்னம்
பனிவேய்நெடுங் குன்றம்பட்டு உருவத் தொட்ட
தனி வேலை வாங்கத் தகும்.' ----------- 4

'உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தில் வாழ்வே!' ---------- 5

'அஞ்சுமுகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் 'அஞ்சல்!' எனவேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இருகாலும் தோன்றும்
'முருகா!' என்று ஓதுவார் முன்.' --- ----- 6

'முருகனே! செந்தில் முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! ஒருகை முகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.' ---------- 7

'காக்க கடவியநீ காவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரமாம் அறுமுகவா! - பூக்கும்
கடம்பா! முருகா! கதிர்வேலா! நல்ல
இடம்காண் இரங்காய் இனி!' ---- ------- 8

'பரங்குன்றில் பன்னிருகைக் கோமான்தன் பாதம்
கரம்கூப்பி கண்குளிரக்கண்டு - சுருங்காமல்
ஆசையால் நெஞ்சே! அணிமுருகு ஆற்றுப்படையைப்
பூசையாக் கொண்டே புகல்.' --- -------- 9

'நக்கீரர்தாம் உரைத்த நல்முருகு ஆற்றுப்படையை
தற்கோல நாள்தோறும் சாற்றினால் - முன்கோல

மாமுருகன் வந்து மனக்கவலை தீர்த்தருளி
தான் நினைத்த எல்லாம் தரும்.' -- ------- 10

## திருமுருகாற்றுப்படை முற்றிட்டு

**கந்தர் அநுபூதி** – “திரு அருணகிரிநாதர் அருளிய”

1. ஆடும் பரி, வேல், அணிசேவல் எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடும் தனி யானைச் சகோதரனே.

2. உல்லாச, நிராகுல, யோக இதச்
சல்லாப, விநோதனும் நீ அலையோ?
எல்லாம் அற, என்னை இழந்த நலம்
சொல்லாய், முருகா சுரபூ பதியே.

3. வானோ? புனல் பார் கனல் மாருதமோ?
ஞானோ தயமோ? நவில் நான் மறையோ?
யானோ? மனமோ? எனை ஆண்ட இடம்
தானோ? பொருளாவது சண்முகனே.

4. வளைபட்ட கைம் மாதொடு, மக்கள் எனும்
தளைபட்டு அழியத் தகுமோ? தகுமோ?
கிளைபட்டு எழு சூர் உரமும், கிரியும்,
தொளைபட்டு உருவத் தொடு வேலவனே.

5. மக மாயை களைந்திட வல்ல பிரான்
முகம் ஆறும் மொழிந் தொழிந்திலனே
அகம் மாடை, மடந்தையர் என்(று) அயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே.

6. திணியான மனோ சிலை மீது, உனதாள்
அணியார், அரவிந்தம் அரும்பு மதோ?
.. பணியா? .. என, வள்ளி பதம் பணியும்
தணியா அதிமோக தயா பரனே.

7. கெடுவாய் மனனே, கதி கேள், கரவாது
இடுவாய், வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடு வேதனை தூள்படவே
விடுவாய் விடுவாய் வினை யாவையுமே.

8. அமரும் பதி, கேள், அகம் ஆம் எனும் இப்
பிமரம் கெட மெய்ப் பொருள் பேசியவா
குமரன் கிரிராச குமாரி மகன்
சமரம் பெரு தானவ நாசகனே.

9. மட்டூர் குழல் மங்கையர் மையல் வலைப்
பட்டு, ஊசல்படும் பரிசு என்று ஒழிவேன்?
தட்டு ஊடு அற வேல் சயிலத்து எறியும்
நிட்டூர நிராகுல, நிர்பயனே.

10. கார் மா மிசை காலன் வரில், கலபத்
தேர்மா மிசை வந்து, எதிரப் படுவாய்
தார் மார்ப, வலாரி தலாரி எனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

11. கூகா என என் கிளை கூடி அழப்
போகா வகை, மெய்ப்பொருள் பேசியவா
நாகாசல வேலவ நாலு கவித்
தியாகா சுரலோக சிகாமணியே.

12. செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன், பிறவான், இறவான்
.. சும்மா இரு, சொல் அற .. என்றலுமே
அம்மா பொருள் ஒன்றும் அறிந்திலனே.

13. முருகன், தனிவேல் முனி, நம் குரு .. என்று
அருள் கொண்டு அறியார் அறியும் தரமோ
உரு அன்று, அரு அன்று, உளது அன்று, இலது அன்று,
இருள் அன்று, ஒளி அன்று என நின்றதுவே.

14. கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்று
உய்வாய், மனனே, ஒழிவாய் ஒழிவாய்

மெய் வாய் விழி நாசியொடும் செவி ஆம்
ஐவாய் வழி செல்லும் அவாவினையே.

15. முருகன், குமரன், குகன், என்று மொழிந்து
உருகும் செயல் தந்து, உணர்வு என்று அருள்வாய்
பொரு புங்கவரும், புவியும் பரவும்
குருபுங்கவ, எண் குண பஞ்சரனே.

16. பேராசை எனும் பிணியில் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ?
வீரா, முது சூர் பட வேல் எறியும்
சூரா, சுர லோக துரந்தரனே.

17. யாம் ஓதிய கல்வியும், எம் அறிவும்
தாமே பெற, வேலவர் தந்ததனால்
பூ மேல் மயல் போய் அறம் மெய்ப் புணர்வீர்
நாமேல் நடவீர், நடவீர் இனியே.
18. உதியா, மரியா, உணரா, மறவா,
விதி மால் அறியா விமலன் புதல்வா,
அதிகா, அநகா, அபயா, அமரா
பதி காவல, சூர பயங் கரனே.

19. வடிவும் தனமும் மனமும் குணமும்
குடியும் குலமும் குடிபோ கியவா
அடி அந்தம் இலா அயில் வேல் அரசே
மிடி என்று ஒரு பாவி வெளிப்படினே.

20. அரிதாகிய மெய்ப் பொருளுக்கு அடியேன்
உரிதா உபதேசம் உணர்த்தியவா
விரிதாரண, விக்ரம வேள், இமையோர்
புரிதாரக, நாக புரந்தரனே.

21. கருதா மறவா நெறிகாண, எனக்கு
இருதாள் வனசம் தர என்று இசைவாய்
வரதா, முருகா, மயில் வாகனனே
விரதா, சுர சூர விபாடணனே.

22. காளைக் குமரேசன் எனக் கருதித்
தாளைப் பணியத் தவம் எய்தியவா
பாளைக் குழல் வள்ளி பதம் பணியும்
வேளைச் சுர பூபதி, மேருவையே.

23. அடியைக் குறியாது அறியா மையினால்
முடியக் கெடவோ? முறையோ? முறையோ?
வடி விக்ரம வேல் மகிபா, குறமின்
கொடியைப் புணரும் குண பூதரனே.

24 கூர்வேல் விழி மங்கையர் கொங்கையிலே
சேர்வேன், அருள் சேரவும் எண்ணுமதோ
சூர் வேரொடு குன்று தொளைத்த நெடும்
போர் வேல, புரந்தர பூபதியே.

25. மெய்யே என வெள;வினை வாழ்வை உகந்து
ஐயோ, அடியேன் அலையத் தகுமோ?
கையோ, அயிலோ, கழலோ முழுதும்
செய்யோய், மயில் ஏறிய சேவகனே.

26. ஆதாரம் இலேன், அருளைப் பெறவே
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோத, மன
அதீதா சுரலோக சிகாமணியே.

27. மின்னே நிகர் வாழ்வை விரும்பிய யான்
என்னே விதியின் பயன் இங்கு இதுவோ?
பொன்னே, மணியே, பொருளே, அருளே,
மன்னே, மயில் ஏறிய வானவனே.

28. ஆனா அமுதே, அயில் வேல் அரசே,
ஞானாகரனே, நவிலத் தகுமோ?
யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே.

29. இல்லே எனும் மாயையில் இட்டனை நீ
பொல்லேன் அறியாமை பொறுத்திலையே

மல்லேபுரி பன்னிரு வாகுவில் என்
சொல்லே புனையும் சுடர் வேலவனே.

30. செவ்வான் உருவில் திகழ் வேலவன், அன்று
ஒவ்வாதது என உணர்வித் ததுதான்
அவ்வாறு அறிவார் அறிகின்றது அலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப்பதுவே.

31 பாழ்வாழ்வு எனும் இப் படுமாயையிலே
வீழ்வாய் என என்னை விதித்தனையே
தாழ்வானவை செய்தன தாம் உளவோ?
வாழ்வாய் இனி நீ மயில் வாகனனே.

32. கலையே பதறிக், கதறித் தலையூடு
அலையே படுமாறு, அதுவாய் விடவோ?
கொலையே புரி வேடர் குலப் பிடிதோய்
மலையே, மலை கூறிடு வாகையனே.
33. சிந்தாகுல இல்லொடு செல்வம் எனும்
விந்தாடவி என்று விடப் பெறுவேன்
மந்தாகினி தந்த வரோதயனே
கந்தா, முருகா, கருணாகரனே.

34. சிங்கார மடந்தையர் தீநெறி போய்
மங்காமல் எனக்கு வரம் தருவாய்
சங்க்ராம சிகாவல, சண்முகனே
கங்காநதி பால, க்ருபாகரனே.

35. விதிகாணும் உடம்பை விடா வினையேன்
கதிகாண மலர்க் கழல் என்று அருள்வாய்?
மதி வாள்நுதல் வள்ளியை அல்லது பின்
துதியா விரதா, சுர பூபதியே.

36. நாதா, குமரா நம என்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்?
வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்
பாதா குறமின் பத சேகரனே.

37. கிரிவாய் விடு விக்ரம வேல் இறையோன்
பரிவாரம் எனும் பதம் மேவலையே
புரிவாய் மனனே பொறையாம் அறிவால்
அரிவாய் அடியோடும் அகந்தையையே.

38. ஆதாளியை, ஒன்று அறியேனை அறத்
தீது ஆளியை ஆண்டது செப்புமதோ
கூதாள கிராத குலிக்கு இறைவா
வேதாள கணம் புகழ் வேலவனே.

39. மாஏழ் சனனம் கெட மாயைவிடா
மூஏடணை என்று முடிந்திடுமோ
கோவே, குறமின் கொடிதோள் புணரும்
தேவே சிவ சங்கர தேசிகனே.

40. வினை ஓட விடும் கதிர் வேல் மறவேன்
மனையோடு தியங்கி மயங்கிடவோ?
சுனையோடு, அருவித் துறையோடு, பசுந்
தினையோடு, இதணோடு திரிந்தவனே.

41. சாகாது, எனையே சரணங் களிலே
கா கா, நமனார் கலகம் செயும் நாள்
வாகா, முருகா, மயில் வாகனனே
யோகா, சிவ ஞான உபதேசிகனே.

42. குறியைக் குறியாது குறித்து அறியும்
நெறியைத் தனிவேலை நிகழ்த்திடலும்
செறிவு அற்று, உலகோடு உரை சிந்தையும் அற்று
அறிவு அற்று, அறியாமையும் அற்றதுவே.

43. தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினது அன்பு அருளால்
ஆசா நிகளம் துகளாயின பின்
பேசா அநுபூதி பிறந்ததுவே.

44. சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படி தந்தது சொல்லு மதோ?

வீடும், சுரர் மாமுடி, வேதமும், வெம்
காடும், புனமும் கமழும் கழலே.

45. கரவாகிய கல்வி உளார் கடை சென்று
இரவா வகை மெய்ப் பொருள் ஈகுவையோ?
குரவா, குமரா, குலிசாயுத, குஞ்
சரவா, சிவயோக தயாபரனே.

46. எம் தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா, கதிர் வேலவனே, உமையாள்
மைந்தா, குமரா, மறை நாயகனே.

47. ஆறு ஆறையும் நீத்து அதன் மேல் நிலையைப்
பேறா அடியேன், பெறுமாறு உளதோ?
சீறாவரு சூர் சிதைவித்து, இமையோர்
கூறா உலகம் குளிர்வித்தவனே.
48. அறிவு ஒன்று அற நின்று, அறிவார் அறிவில்
பிறிவு ஒன்று அற நின்ற, பிரான் அலையோ?
செறிவு ஒன்று அற வந்து, இருளே சிதைய
வெறி வென்றவரோடு உறும் வேலவனே.

49. தன்னந் தனி நின்றது, தான் அறிய
இன்னம் ஒருவர்க்கு இசைவிப் பதுவோ?
மின்னும் கதிர் வேல் விகிர்தா, நினைவார்
கின்னம் களையும் க்ருபை சூழ் சுடரே.

50. மதிகெட்டு அறவாடி, மயங்கி, அறக்
கதிகெட்டு, அவமே கெடவோ கடவேன்?
நதி புத்திர, ஞான சுகாதிப, அத்
திதி புத்திரர் வீறு அடு சேவகனே.

51. உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.

# வேல் மாறல்

**திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை**
**விருத்தன்என(து) உளத்தில்உறை**
**கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே.**
( ... இந்த அடியை முதலில் 12 முறை ஓதவும் ... )

( ... பின்வரும் ஒவ்வோரடியின் முடிவிலும் 'திரு' என்ற இடத்தில் மேற்கண்ட முழு அடியையும் கூறவேண்டும் ... )

1. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
   கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
   விழிக்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

2. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
   விருத்தன்என(து) உளத்தில்உறை
   கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ... ( ... திரு ... )

3. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
   அடுத்தபகை அறுத்(து)எறிய
   உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் ... ... ... ( ... திரு ... )

4. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
   தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
   கழற்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

5. பனைக்கைமுக படக்கரட மதத்தவள
   கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
   களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ... ... ... ( ... திரு ... )

6. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
   குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
   கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ... ... ... ( ... திரு ... )

7. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
   நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
   எனக்(கு)ஓர் துணை ஆகும் ... ... ... ( ... திரு ... )

8. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ... ... ... ( ... திரு ... )

9. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ... ... ... ( ... திரு ... )

10. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ... ... ... ( ... திரு ... )

11. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ... ... ... ( ... திரு ... )

12. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ... ... ... ( ... திரு ... )

13. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ... ... ... ( ... திரு ... )

14. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ... ... ( ... திரு ... )

15. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ... ... ... ( ... திரு ... )

16. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ... ... ... ( ... திரு ... )

17. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ... ... ... ( ... திரு ... )

18. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ... ... ... ( ... திரு ... )

19. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ... ... ... ( ... திரு ... )

20. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் .... ... ( ... திரு ... )

21. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ... ... ... ( ... திரு ... )

22. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ... ... ... ( ... திரு ... )

23. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ... ... ... ( ... திரு ... )

24. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ... ... ... ( ... திரு ... )

25. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஓர் துணை ஆகும் ... ... ... ( ... திரு ... )

26. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ... ... ... ( ... திரு ... )

27. பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ... ... ... ( ... திரு ... )

28. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ... ... ... ( ... திரு ... )

29. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்(து)எறிய
உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் ... ... ... ( ... திரு ... )

30. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

31. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

32. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ... ... ... ( ... திரு ... )

33. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

34. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்(து)எறிய
உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் ... ... ... ( ... திரு ... )

35. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ... ... ... ( ... திரு ... )

36. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

37. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ... ... ... ( ... திரு ... )

38. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஓர் துணை ஆகும் ... ... ... ( ... திரு ... )

39. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ... ... ... ( ... திரு ... )

40. பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ... ... ... ( ... திரு ... )

41. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ... ... ... ( ... திரு ... )

42. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ... ... ... ( ... திரு ... )

43. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ... ... ... ( ... திரு ... )

44. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ... ... ... ( ... திரு ... )

45. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ... ... ... ( ... திரு ... )

46. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ... ... ... ( ... திரு ... )

47. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ... ... ( ... திரு ... )

48. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ... ... ... ( ... திரு ... )

49. திரைக்கடலை உடைத்துநிறை புனற்கடிது
குடித்(து)உடையும் உடைப்(பு) அடைய
அடைத்(து)உதிரம் நிறைத்துவிளை யாடும் ... ... ( ... திரு ... )

50. பசித்(து)அலகை முசித்(து)அழுது முறைப்படுதல்
ஒழித்(து)அவுணர் உரத்(து)உதிர
நிணத்தசைகள் புசிக்கஅருள் நேரும் ... ... ... ( ... திரு ... )

51. சலத்துவரும் அரக்கர்உடல் கொழுத்துவளர்
பெருத்தகுடர் சிவத்ததொடை
எனச்சிகையில் விருப்பமொடு சூடும் ... ... ... ( ... திரு ... )

52. சுரர்க்கு(ம்)முநி வரர்க்கு(ம்)மக பதிக்கும்விதி
தனக்கும்அரி தனக்கும்நரர் தமக்கும்உறும்
இடுக்கண்வினை சாடும் ... ... ... ( ... திரு ... )

53. திசைக்கிரியை முதற்குலிசன் அறுத்தசிறை
முளைத்த(து)என முகட்டின்இடை
பறக்கஅற விசைத்(து) அதிர ஓடும் ... ... ... ( ... திரு ... )

54. பழுத்தமுது தமிழ்ப்பலகை இருக்கும்ஒரு
கவிப்புலவன் இசைக்(கு)உருகி
வரைக்குகையை இடித்துவழி காணும் ... ... ... ( ... திரு ... )

55. தனித்துவழி நடக்கும்என(து) இடத்தும்ஒரு
வலத்தும்இரு புறத்தும்அரு(கு)
அடுத்(து)இரவு பகற்றுணைய(து) ஆகும் ... ... ... ( ... திரு ... )

56. சுடர்ப்பரிதி ஒளிப்பநில(வு) ஒழுக்கு(ம்)மதி
ஒளிப்பஅலை அடக்குதழல் ஒளிப்பஒளிர்
ஒளிப்பிரபை வீசும் ... ... ... ( ... திரு ... )

57. சினத்(து)அவுணர் எதிர்த்தரண களத்தில்வெகு
குறைத்தலைகள் சிரித்(து)எயிறு
கடித்துவிழி விழித்(து)அலற மோதும் ... ... ... ( ... திரு ... )

58. பனைக்கைமுக படக்கரட மதத்தவள
கஜக்கடவுள் பதத்(து)இடு(ம்)நி
களத்துமுளை தெறிக்கவரம் ஆகும் ... ... ... ( ... திரு ... )

59. தலத்தில்உள கணத்தொகுதி களிப்பின்உண
வழைப்ப(து) என மலர்க்கமல கரத்தின்முனை
விதிர்க்கவளை(வு) ஆகும் ... ... ... ( ... திரு ... )

60. துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஓர் துணை ஆகும் ... ... ... ( ... திரு ... )

61. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ... ... ... ( ... திரு ... )

62. பருத்தமுலை சிறுத்தஇடை வெளுத்தநகை
கறுத்தகுழல் சிவத்தஇதழ் மறச்சிறுமி
விழிக்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

63. தருக்கிநமன் முருக்கவரின் எருக்குமதி
தரித்தமுடி படைத்தவிறல் படைத்தஇறை
கழற்குநிகர் ஆகும் ... ... ... ( ... திரு ... )

64. சொலற்(கு)அரிய திருப்புகழை உரைத்தவரை
அடுத்தபகை அறுத்(து)எறிய
உறுக்கிஎழும் அறத்தைநிலை காணும் ... ... ... ( ... திரு ... )

65. திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே ... ... ... ( ... திரு ... )

( ... முடிவிலும் இந்த அடியை 12 முறை ஓதவும் ... )

தேரணி யிட்டுப் புரம் எரித் தான்மகன் செங்கையில்வேற்
கூரணி யிட்டணு வாகிக் கிரௌஞ்சங் குலைந்தரக்கர்
நேரணி யிட்டு வளைந்த கடகம் நெளிந்து சூர்ப்
பேரணி கெட்டது தேவேந்த்ர லோகம் பிழைத்ததுவே.

வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறை மீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல் - வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
தொளைத்தவேல் உண்டே துணை.

... ... ... வேலும் மயிலும் துணை ... ... ...

**வேல் விருத்தம்** - (திரு அருணகிரிநாதர் அருளியது)

1.மதியும் இரவியும் அலையவே
வளர் எழிலி குடர் உழல இமையவர்கள் துயர் அகல
மகிழ்வு பெறும் அறு சிறையவான்
சிகரவரை மனை மறுகு தொறு நுளைய மகளிர் செழு
செந் நெல்களொடு தரளம் இடவே
செகசிர பகிரதி முதல் நதிகள்கதி பெற உததி
இடர் அடைய நுகரும் வடிவேல்
தகரம் இரு கமதம் என மணமருவு கடகலுழி
தரு கவுளும் உறு வள் எயிறுன்
தழை செவியும் நுதல்விழியும் உடைய ஒருகடவுள் மகிழ்
தரு துணைவன் அமரர் குயிலும்
குகரமலை எயினர்கசுல மடமயிலும் என இருவர்
குயம் ஒடமர் புரியு முருகன்
குமரன் அறுமுகன் எதிரும் விருது நிசிசரர் அணிகள்
குலையவிடு கொடிய வேலே

2. வெங் காள கண்டர் கை சூலமுந் திருமாயன்
வெற்றிபெறு சுடர் ஆழியும்
விபுதர் பதி குலிசமும் சூரன் குலங் கல்லி
வெல்லா எனக் கருதியே
சங்ராம நீசயித்து அருள் எனத் தேவரும்
சதுர்முகனும் நின்றிரப்ப
சயிலமொடு சூரனுடல் ஒருநொடியில் உருவியே
தனி ஆண்மை கொண்ட நெடுவேல்
கங்காளி சாமுண்டி வாராகி இந்த்ராணி
கௌமாரி கமலாசன கன்னி
நாரணி குமரி த்ரிபுரை பயிரவி அமலை
கௌரி காமாக்ஷி
சைவ சிங்காரி யாமளை பவானி கார்த்திகை கொற்றி
த்ரியம்பகி அளித்த செல்வ
சிறுவன் அறுமுகன் முருகன் நிருதர்கள் குலாந்தகன்
செம்பொற்றி இருக்கை வேலே

3. வேதாள பூதமொடு காளி காளத்ரிகளும்
வெகுளுறு பசாச கணமும்
வென் கழுகுடன் கொடி பருந்து செம் புவனத்தில்
வெம்பசி ஒழிக்க வந்தே
ஆதார கமடமுங் கணபண வியாளமும்
அடக்கிய தடக் கிரியெலாம்
அலைய நடமிடு நெடுந் தானவர் நிணத்தசை
அருந்தி புரந்த வைவேல்
தாதார் மலர்ச்சுனைப் பழனிமலை சோலைமலை
தனிப்பரங் குன்றேரகம்
தணிகை செந்தூரிடைக் கழி ஆவினங்குடி
தடங் கடல் இலங்கை அதனிற்
போதார் பொழில் கதிர்க்காமத் தலத்தினை
புகழும் அவரவர் நாவினில்
புந்தியில் அமர்ந்தவன் கந்தன் முருகன் குகன்
புங்கவன் செங்கை வேலே

4. அண்டர் உலகும் சுழல எண்திசைகளும் சுழல
அங்கியும் உடன் சுழலவே
அலைகடல்களும் சுழல அவுணர் உயிரும் சுழல
அகில தலமும் சுழலவே
மண்டல நிறைந்த ரவி சதகோடி மதி உதிர
மாணப் பிறங்கி அணியும்
மணி ஒலியினிற் சகல தலமும் அருள சிரம
வகை வகையினிற் சுழலும் வேல்
தண்டம் உடனுங் கொடிய பாசம் உடனுங் கரிய
சந்தம் உடனும் பிறைகள்போல்
தந்தமுட னுந் தழலும் வெங்கண் உடனும் பகடு
தன்புறம் வரும் சமனை யான்
கண்டு குலையும் பொழுதில் அஞ்சலென மென்சரண
கஞ்சம் உதவும் கருணைவேள்
கந்தன் முருகன் குமரன் வண்குறவர் தம்புதல்வி
கணவன் அடல் கொண்ட வேலே

5. ஆலமாய் அவுணருக் அமரருக் அமுதமாய்
ஆதவனின் வெம்மை ஒளிமீது
அரிய தவ முனிவருக்கு இந்துவில் தண்ணென்ற
அமைந்த அன்பருக்கு முற்றா
மூலமாம் வினை அறுத் தவர்கள் வெம் பகையினை
முடித்து இந்திரர்க்கும் எட்டா
முடிவில் ஆனந்த நல்கும் பதம் அளித்து எந்த
மூதண்டமும் புகழும் வேல்
ஏலமா யானையின் கோடதிற் சொரிமுத்தும்
இன்பணைகள் உமிழு முத்தும்
இனிவாடை மான் மதம் அகிலோடு சந்தனம்
இலவங்க நறவமாருன்
தாலமா மரமுதற் பொருள் படைத் திடும் எயினர்
தரு வனிதை மகிழ்னன் ஐயன்
தனிநடம் புரி சமர முருகன் அறுமுகன் குகன்
சரவணக் குமரன் வேலே

6. பந்தாடலிற் கழங் காடலிற் சுடர் ஊசல்
பாடலினொடு ஆடலின் எலாம்
பழந்தெவ்வர் கட்கம் துணிந் இந்திரர்க் அரசு
பாலித்த திறல் புகழ்ந்தே
சந்தாரு நாண்மலர் குழல் அரம்பையர்களும்
சசிமங்கை அனையர்தாமுந்
தன்னை அன்பொடு பாடி ஆடும் ப்ரதாபமும்
தலைமையும் பெற்ற வைவேல்
மந்தாகினித் தரங்க சடிலருக்கு அரிய
மந்த்ர உபதேச நல்கும்
வரதேசிகன் கிஞ்சுகச் சிகா லங்கார
வாரணக் கொடி உயர்த்தோன்
கொந்தார் மலர்க் கடம் பும்செச்சை மாலையும்
குவளையும் செங் காந்தளும்
கூதாள மலரும் தொடுத்தணியு மார்பினன்
கோலத் திருக்கை வேலே

7. அண்டங்கள் ஒருகோடி ஆயினுங் குலகிரி
அநந்தமாயினு மேவினால்
அடைய உருவிப் புறம் போவதல்லது தங்கல்
அறியாது சூரன் உடலைக்
கண்டம் படப்பொருது காலனுங் குலைவுறுங்
கடியகொலை புரியும் அது
செங்கனகா சலத்தைக் கடைந்து முனை யிட்டு
கடுக்கின்ற துங்க நெடுவேல்
தண்டன் தனுத் திகிரி சங்கு கட்கம் கொண்ட
தானவான் தகன் மாயவன்
தழல்விழிக் கொடுவரிப் பருவுடற் பற்றலை
தமனியச் சுடிகையின் மேல்
வண்டொன்று கமலத்து மங்கையும் கடல் ஆடை
மங்கையும் பதம் வருடவே
மதுமலர்க் கண்துயில் முகுந்தன் மருகன் குகன்
வாகைத் திருக்கை வேலே

8. மாமுதல் தடிந்து தண் மல்குகிரி யூடு போய்
வலிய தானவர் மார்பிடம்
வழிகண்டு கமல பவனத்தனை சிறையிட்டு
மகவான் தனை சிறைவிடுத்து
ஓமவிருடித் தலைவர் ஆசிபெற்று உயர்வானில்
உம்பர் சொற்றுதி பெற்று நா
உடைய கீரன் தனது பாடல் பெற்றுலகு தனில்
ஒப்பில் புகழ் பெற்ற வைவேல்
சோம கலச ப்ரபா லங்கார தர ஜடா
சூடி காலாந்த காலர்
துங்க ரக்ஷக கத்ரோண கட்க குலிசஞ்சூல
துரக கேசர மாம்பரச்
சேம வடவாம்புயப் பரண சங்காபரண
திகம்பர த்ரியம்பக மகா
தேவ நந்தன கஜானன சகோதர குகன்
செம்பொற்றிருக்கை வேல்

9. தேடுதற்கு அரிதான நவமணி அழுத்தியிடு
செங்கரனை அமுதம் வாய்கொள்
செயமளித் அருள் எனக் என உவப்பொடு வந்து
சேவடி பிடித்த தெனவும்
நீடுமைக் கடல் சுட்டதிற்கு அடைந்து எழுகடலும்
நீயெமைக் காக்க எனவும்
நிபிடமுடி நெடியகிரி எந்தமைக் கா எனவும்
நிகழ்கின்ற துங்க நெடுவேல்
ஆடுமைக் கணபணக் கதிர்முடி புடை எயிற்று
அடலெரிக்- கொடிய உக்ர
அழல் விழிப் படுகொலைக் கடைய கட்செவியினுக்கு
அரசினைத் தனியெடுத்தே
சாடு மைப்புயல் எனப் பசுநிறச் சிகரியில்
தாய் திமித் துட நடிக்கும்
சமரமயில் வாகனன் அமரர் தொழு நாயகன்
சண்முகன் தன்கை வேலே.

10. வலாரி அலலாகுலம் இலாத் அகலவே கரிய
மாலறியு நாலு மறைநூல்
வலான் அலைவிலா நசிவிலான் மலைவிலான் இவர்
மனோலய உலாசம் உறவே
உலாவரு கலோல மகராலய சலங்களும்
உலோகனிலை நீர்நிலை இலா
ஒலாவொலி நிசாசரர் உலோகம் அதெலாம் அழல்
உலாவிய நிலாவு கொலைவேல்
சிலாவட கலா வினொத வாசிலிமுகா விலொச
நா சின சிலாத அணிவிலா
சிலாமலர் எலா மதிய மோதி மதி சேலொழிய
சேவக சராப முகிலாம்
விலாச கலியாண கலை சேர பசு மேலைமுலை
மேவிய விலாச அகலன்
விலாழி யினிலாழி அகல் வானில் அனல் ஆரவிடு
வேழம் இளைஞன் கை வேலே

-----**வேல் விருத்தம் முற்று**-----

**மயில் விருத்தம்** - திரு அருணகிரிநாதர் அருளிய

1. சந்தான புஷ்பபரி

சந்தான புஷ்பபரி மளகிண் கிணீ முகச்
    சரணயுக ளமிர்தப்ரபா
சந்த்ரசே கரமூஷி காரூட வெகுமோக
    சத்யப்ரி யாலிங்கனச்
சிந்தா மணிக்கலச கரகட கபோலத்ரி
    யம்பக விநாயகன்முதற்
சிவனைவலம் வருமளவில் உலகடைய நொடியில்வரு
சித்ரக் கலாபமயிலாம்
மந்தா கிநிப்பிரப வதரங்க விதரங்க
    வனசரோ தயகிர்த்திகா
வரபுத்ர ராஜீவ பரியங்க தந்திய
    வராசலன் குலிசாயுதத்
திந்த்ராணி மங்கில்ய தந்து ரட்ஷாபரண
    இகல்வேல் விநோதன் அருள்கூர்
இமையகிரி குமரிமகன் ஏறுநீ லக்ரீவ
    ரத்னக் கலாப மயிலே.

2. சக்ரப் ரசண்டகிரி

சக்ரப் ரசண்டகிரி முட்டக் கிழிந்துவெளி
    பட்டுக் ரவுஞ்ச சயிலந்
தகரப் பெருங்கனக சிகரச் சிலம்பும்எழு
    தனிவெற்பும் அம்புவியும் எண்
திக்குத் தடங்குவடும் ஒக்கக் குலுங்கவரு
    சித்ரப் பதம்பெயரவே
சேடன்முடி திண்டாட ஆடல்புரி வெஞ்சூரர்
    திடுக்கிட நடிக்கு மயிலாம்
பக்கத்தில் ஒன்றுபடு பச்சைப் பசுங்கவுரி
    பத்மப் பதங் கமழ்தரும்
பாகீ ரதிச்சடில யோகீ சுரர்க்குரிய
    பரம உபதேசம் அறிவிக்
கைக்குச் செழுஞ்சரவ ணத்திற் பிறந்தஒரு

கந்தச்சுவாமி தணிகைக்
கல்லார கிரியுருக வருகிரண மரகத
கலாபத்தில் இலகு மயிலே.
செய்யுள் முதற்குறிப்புப் பட்டியலுக்கு

3. ஆதார பாதளம்

ஆதார பாதளம் பெயரஅடி பெயரமூ
தண்டமுக டதுபெயரவே
ஆடரவ முடிபெயர எண்டிசைகள் பெயரஎறி
கவுட்கிரி சரம்பெயரவே
வேதாள தாளங்க ளுக்கிசைய ஆடுவார்
மிக்கப் ரியப்படவிடா
விழிபவுரி கவுரிகண் டுளமகிழ விளையாடும்
விஸ்தார நிர்த்த மயிலாம்
மாதாநு பங்கியெனு மாலது சகோதரி
மகீதரி கிராத குலிமா
மறைமுநி குமாரிசா ரங்கநந் தனிவந்த
வள்ளிமணி நூபுர மலர்ப்
பாதார விந்தசே கரனேய மலரும்உற்
பலகிரி அமர்ந்த பெருமாள்
படைநிருதர் கடகமுடை படநடவு பச்சைப்
பசுந்தோகை வாகை மயிலே.

4. யுககோடி முடிவின்

யுககோடி முடிவின் மண் டியசண்ட மாருதம்
உதித்ததென் றயன் அஞ்சவே
ஒருகோடி அண்டர்அண் டங்களும் பாதாள
லோகமும் பொற்குவடுறும்
வெகுகோடி மலைகளும் அடியினில் தகர்ந்திரு
விசும்பிற் பறக்க விரிநீர்
வேலைசுவ றச்சுரர் நடுக்கங் கொளச்சிறகை
வீசிப் பறக்கு மயிலாம்
நககோடி கொண்டவுணர் நெஞ்சம் பிளந்தநர
கேசரி முராரி திருமால்

நாரணன் கேசவன் சீதரன் தேவகீ
    நந்தனன் முகுந்தன் மருகன்
முககோடி நதிகரன் குருகோடி அநவரதம்
    முகிலுலவு நீலகிரிவாழ்
முருகன்உமை குமரன் அறு முகன்நடவு விகடதட
    மூரிக் கலாப மயிலே.

5. சோதியிம வேதண்ட
சோதியிம வேதண்ட கன்னிகையர் தந்தஅபி
    நயதுல்ய சோம வதன
துங்கத்ரி சூலதரி கங்காளி சிவகாம
    சுந்தரி பயந்த நிரைசேர்
ஆதிநெடு மூதண்ட அண்டபகி ரண்டங்கள்
    யாவுங் கொடுஞ்சி றகினால்
அணையுந்த னதுபேடை அண்டங்கள் என்னவே
    அணைக்குங் கலாப மயிலாம்
நீதிமறை ஓதண்ட முப்பத்து முக்கோடி
    நித்தரும் பரவு கிரியாம்
நீலகிரி வேலவன் நிராலம்பன் நிர்ப்பயன்
    நிர்வியா குலன்சங் குவாள்
மாதிகிரி கோதண்ட தண்டந் தரித்தபுயன்
    மாதவன் முராரி திருமால்
மதுகைட வாரிதிரு மருகன்முரு கன்குமரன்
    வரமுதவு வாகை மயிலே.

6. சங்கார காலமென
சங்கார காலமென அரிபிரமர் வெருவுறச்
    சகல லோகமு நடுங்கச்
சந்த்ரசூ ரியரொளித் திந்த்ராதி அமரருஞ்
    சஞ்சலப் பட உமையுடன்
கங்காளர் தனிநாட கஞ்செய்த போதந்த
    காரம் பிறந்திட நெடுங்
ககனகூட முமேலை முகடுமூ டியபசுங்
    கற்றைக் கலாப மயிலாஞ்

சிங்கார குங்கும படீரம்ருக மதயுகள
    சித்ரப் பயோ தரகிரித்
தெய்வவா ரணவநிதை புனிதன் குமாரன்
    திருத்தணிமகீரதன் இருங்
கெங்கா தரன்கீதம் ஆகிய சுராலய
    க்ருபாகரன் கார்த்தி கேயன்
கீர்த்திமா அசுரர்கள் மடியக்ர வுஞ்சகிரி
    கிழிபட நடாவு மயிலே.

7. தீரப் பயோததி

தீரப் பயோததி (க) திக்குமா காயமுஞ்
    செகதலமு நின்று சுழலத்
திகழ்கின்ற முடிமவுலி சிதறிவிழ வெஞ்சிகைத்
    தீக்கொப் புளிக்க வெருளும்
பாரப் பணாமுடி அநந்தன்முதல் அரவெலாம்
    பதைபதைத் தேநடுங்கப்
படர்சக்ர வாளகிரி துகள்பட வையாளிவரு
    பச்சைப்ர வாள மயிலாம்
ஆரப்ர தாபபுள கிதமதன பாடீர
    அமிர்தகல சக்கொங் கையாள்
ஆடுமயில் நிகர்வல்லி அபிராம வல்லிபர
    மாநந்த வல்லி சிறுவன்
கோரத்ரி சூலத்ரி யம்பக ஜடாதார
    குருதரு திருத்தணி கைவேள்
கொடியநிசி சரர்உதரம் எரிபுகுத விபுதர்பதி
    குடிபுகுத நடவு மயிலே.

8. செக்கரள கேசசிக

செக்கரள கேசசிக ரத்நபுரி ராசிநிரை
    சிந்தப் புராரி யமிர்தந்
திரும்பப் பிறந்ததென ஆயிரம் பகுவாய்கள்
    தீவிஷங் கொப்புளிப்பச்
சக்ரகிரி சூழவரு மண்டலங் கள்சகல
    சங்கார கோர நயனத்
தறுகண்வா சுகிபணா முடியெடுத் துதறுமொரு

சண்டப்பர சண்டமயிலாம்
விக்ரம கிராதகுலி புனமீ துலாவிய
விருத்தன் திருத்த ணிகைவாழ்
வேலாயு தன்பழ வினைத்துயர் அறுத்தெனை
வெளிப்பட வுணர்த்தி யருளித்
துக்கசுக பேதமற வாழ்வித்த கந்தச்
சுவாமிவா கனமா னதோர்
துரககஜ ரதகடக விகடதட நிருதர்குல
துஷ்டர் நிஷ்டூ ரமயிலே.

9. சிகரதம னியமேரு
சிகரதம னியமேரு கிரிரசத கிரிநீல
கிரியெனவும் ஆயிரமுகத்
தெய்வநதி காளிந்தி யெனநீழல் இட்டுவெண்
திங்கள்சங் கெனவும்ப்ரபா
நிகரெனவும் எழுதரிய நேமியென உலகடைய
நின்றமா முகில் என்னவே
நெடியமுது ககனமுக டுறவீசி நிமிருமொரு
நீலக் கலாப மயிலாம்
அகருமரு மணம்வீசு தணிகைஅபி ராமவேள்
அடியவர்கள் மிடிய கலவே
அடல்வேல் கரத்தசைய ஆறிரு புயங்களில்
அலங்கற் குழாம் அசையவே
மகரகன கோமளக் குண்டலம் பலஅசைய
வல்லவுணர் மனம்அசைய மால்
வரை அசைய உரகபிலம் அசையஎண் டிசைஅசைய
வையாளி யேறு மயிலே.

10. நிராசத விராசத
நிராசத விராசத வரோதய பராபர
னிராகுல னிராமய பிரா
னிலாதெழு தலாலற மிலானெறி யிலானெறி
நிலாவிய உலாசஇ தயன்
குராமலி விராவுமிழ் பராரை யமராநிழல்
குராநிழல் பராவு தணிகைக்

குலாசல சராசரம் எலாமினி துலாவிய
    குலாவிய கலாப மயிலாம்
புராரிகுமர ராகுரு பராஎனும் வரோதய
    புராதன முராரி மருகன்
புலோமசை சலாமிடு பலாசன வலாரிபுக
    லாகும் அயி லாயுதனெடுந்
தராதல கிராதர்கள் குலாதவபி ராமவல
    சாதனன் விநோத சமரன்
தடாரி விகடாசுரன் குடாரித படாதிகழ்
    ஷடாநநன் நடாவு மயிலே.

11. எந்நாளும் ஒருசுனையில்

எந்நாளும் ஒருசுனையில் இந்த்ரநீ லப்போ
    திலங்கிய திருத்த ணிகைவாழ்
எம்பிரான் இமையவர்கள் தம்பிரான் ஏறும்ஒரு
    நம்பிரா னான மயிலைப்
பன்னாளும் அடிபரவும் அருணகிரி நாதன்
    பகர்ந்தஅதி மதுர சித்ரப்
பாடல்தரு மாசறு வேல்விருத்தம் ஒருபத்தும்
    படிப்பவர்கள் ஆதி மறைநூல்
மன்னான் முகம்பெறுவர் அன்னம் ஏறப்பெறுவர்
    வாணிதழு வப்பெ றுவரால்
மகரால யம்பெறுவர் உவணம் ஏறப்பெறுவர்
    வாரிச மடந்தை யுடன்வாழ்
அந்நாயகம் பெறுவர் அயிராவ தம்பெறுவர்
    அமுதா சனம்பெ றுவர்மேல்
ஆயிரம் பிறைதொழுவர் சீர்பெறுவர் பேர்பெறுவர்
    அழியா வரம்பெ றுவரே.

---- மயில் விருத்தம் முற்றிற்று ----

# ஊஞ்சல் பாட்டுகள்

## உச்சி முருகன் ஊஞ்சல் பாடல் - I

1 உச்சி விநாயகனை கரம் கூப்பி நாம் தொழுது
ஊஞ்சல் பாட்டினை பாடுவோம் - முருகன்
ஊஞ்சல் பாட்டினை பாடுவோம்
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் ஊஞ்சல்
உச்சி முருகா ஆடிர் ஊஞ்சல்
கைவிக்கம் உச்சி முருகா – எங்கள்
கைவிக்கம் உச்சி முருகா

தமிழிலே பூசைகள் செய்து நாம் வணங்குகின்றோம்
தமிழிலே பூசைகள் செய்து நாம் வணங்குகின்றோம்
தாயக மக்கள் முருகா - நாம்
தாயக மக்கள் முருகா
ஈசனுமை பாலகனே ஆனைமுகன் சோதரனே
ஈசனுமை பாலகனே ஆனைமுகன் சோதரனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா – கந்தனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா

ஆடிர் ஊஞ்சல் ஆடீர் ஊஞ்சல்
உச்சி முருகா ஆடிர் ஊஞ்சல்
கைவிக்கம் உச்சி முருகா – எங்கள்
கைவிக்கம் உச்சி முருகா
கைவிக்கம் பதியினிலே உச்சி முருகன் அவன்
கைவிக்கம் பதியினிலே உச்சி முருகன் அவன்
காட்சி தரும் ஆறுமுக வேலவா - கந்தனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா

2. கைவிக்கம் வந்தமர்ந்து காக்கும் எங்கள் கருணை கந்தா
கைவிக்கம் வந்தமர்ந்து காக்கும் எங்கள் கருணை கந்தா
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா – கந்தனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா

ஆடிர் ஊஞ்சல் ஆடீர் ஊஞ்சல்
உச்சி முருகா ஆடிர் ஊஞ்சல்
கைவிக்கம் உச்சி முருகா – எங்கள்
கைவிக்கம் உச்சி முருகா

கல்யாண கோலத்தினில் வள்ளி தெய்வானையுடன்
கல்யாண கோலத்தினில் வள்ளி தெய்வானையுடன்
காட்சி தரும் ஆறுமுக வேலவா - கந்தனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா

நல்லூரில் கோவில் கொண்டு நலம் காக்கும் கருணை கந்தா
நல்லூரில் கோவில் கொண்டு நலம் காக்கும் கருணை கந்தா
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா – குமரா
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா

ஆடிர் ஊஞ்சல் ஆடீர் ஊஞ்சல்
உச்சி முருகா ஆடிர் ஊஞ்சல்
கைவிக்கம் உச்சி முருகா – எங்கள்
கைவிக்கம் உச்சி முருகா

சந்நிதியில் கோவில் கொண்ட சங்கரனின் திருமகனே
சந்நிதியில் கோவில் கொண்ட சங்கரனின் திருமகனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா – கந்தனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா

3. கதிர்காமம் எழுந்தருளி காட்சி தரும் வேலவனே
கதிர்காமம் எழுந்தருளி காட்சி தரும் வேலவனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா – வேலவனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா

ஆடிர் ஊஞ்சல் ஆடீர் ஊஞ்சல் உச்சி முருகா ஆடிர் ஊஞ்சல்
கைவிக்கம் உச்சி முருகா – எங்கள்
கைவிக்கம் உச்சி முருகா

கோணமலையில் முத்துக்குமார சாமி எங்கள் பூசிக்கின்றோம்
திருவூன்றி பக்தன் முருகா – கந்தனே
ஆடிர் ஊஞ்சல் முருகா

ஆறுபடை வீட்டினிலே எழுந்தருளும் வேலவனே
ஆறுபடை வீட்டினிலே எழுந்தருளும் வேலவனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா – கந்தனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா

ஆடிர் ஊஞ்சல் ஆடீர் ஊஞ்சல்
உச்சி முருகா ஆடிர் ஊஞ்சல்
கைவிக்கம் உச்சி முருகா – எங்கள்
கைவிக்கம் உச்சி முருகா

அலைகடலின் ஓசையுடன் வீற்றிருக்கும் வேலவனே
அலைகடலின் ஓசையுடன் வீற்றிருக்கும் வேலவனே
திருச்செந்தூர் முருகா குமரா – கந்தனே
ஆடிர் ஊஞ்சல் முருகா

4. வண்ணமயில் வாகனனே வரமருளும் சண்முகனே
வண்ணமயில் வாகனனே வரமருளும் சண்முகனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா – கந்தனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா

ஆடிர் ஊஞ்சல் ஆடீர் ஊஞ்சல்
உச்சி முருகா ஆடிர் ஊஞ்சல்
கைவிக்கம் உச்சி முருகா – எங்கள்
கைவிக்கம் உச்சி முருகா

பழனியிலே வீற்றிருந்து காட்சி தரும் வேலவனே
பழனியிலே வீற்றிருந்து காட்சி தரும் வேலவனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா – கந்தனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா

வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தந்தருளும் வேலவனே
வேண்டுவோர்க்கு வேண்டும் வரம் தந்தருளும் வேலவனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா – கந்தனே
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் முருகா
ஆடிர் ஊஞ்சல் ஆடீர் ஊஞ்சல்
உச்சி முருகா ஆடிர் ஊஞ்சல்

கைவிக்கம் உச்சி முருகா – எங்கள்
கைவிக்கம் உச்சி முருகா

ஆடிர் ஊஞ்சல் ஆடீர் ஊஞ்சல்
உச்சி முருகா ஆடிர் ஊஞ்சல்
கைவிக்கம் உச்சி முருகா – எங்கள்
கைவிக்கம் உச்சி முருகா

# விக்கம் உச்சி முருகன் திருஊஞ்சல் II

காப்பு

பாராடும் போற்றும் லண்டன்மா நகரின்கண்
சிறந்துயடும் கைவிக்கம் தன்னில் அமர்ந்து
சீராடும் உச்சிமுருகன் மேன்மைமிகு வேலோன்
பொலிந்திலங்கு சீலமொடு சைவம் வாழும்
ஏராடும் தெவயானை குரவர்மகள் வள்ளியம்மை
இருபுடையும் உவந்தருளக் கோயில் கொண்ட
ஊராகத் தந்தருளும் நால்வாய் முக்கண்ணன்
கணபதியின் கமலபதம் காப்பதாம்

நூல்

1 இன்பமுடன் நால்வேதத் தம்பம் மீதில்
தொழுமென்ற விட்டமதைத் தொடுத்து வைத்தே
பன்னிரு திருக்கரமும் மக்களைக் காக்க
வெண்மையென முப்புரிநூல் மார்பில் துலங்க
தன்மேவு மயிலுடனே சேவலும் அசைந்தாட
பரிதியொளி சூழ்தெங்கும் சோதியாய் ஒளிதிகழ
மன்னிய கைவிக்கம் தனில் உயிறினிது மேவிடும்
வையகத்தே உச்சி முருகா ஆடீரூஞ்சல்

2.. தமிழர் சமூக கூட்டமைப்பின் வேண்டுதலில்
அடியவர்கள் ஆராய்ந்து ஆலோசனை கூறிடவே
தமிழர்தம் ஆலயம் தமிழினால் பூசையென
சங்கத்தமிழ் தலைவன் . உகந்து மகிழ்ந்திடவே
தமிழருக்கோர் தமிழ்கடவுள் தரணியிலே அமைத்து
பரமசிவன் மைந்தன் பார்வதி பாலன்
தமிழ்வதனன் மகிழ்ந்திடவே தமிழால் அட்சித்திட
கைவிக்கம் உச்சி முருகா ஆடீரூஞ்சல்

3. பத்தியுடன் பக்தர்கள் பரவசமாய் பணிந்து
பாங்குடனே பாடி யாடி வணங்கிடவே
சத்திகள் இருவருடன் வரம்தந்திடு வரதா
மாணிக்க மாமணியே மாணிக்க கங்கையா
வித்தைகள் வேடிக்கைகள் விரும்பிடா சந்நிதியோய்
தமிழ்மந்திரம் சொல்லிட வைத்தனை காங்கேயா
ஏத்திடும் தொண்டர்கள் அருள்புரி நல்லூரா
பார்புகழ் விக்கம்தனில் ஆடீரூஞ்சல்
விக்கம் உச்சி முருகன் திருஊஞ்சல்

4 அசுரபடை அழித்தவனே ஆறுபடை நாதனே
தேவபடை போற்றிடு தேவாதி தேவனே
மாசுபட நின்றவர்கள் மாயஇருள் நீக்கியே
அருள்புரியும் ஆண்டவனே அற்புதா வருவாய்
தேடிவரும் அடியவர்க்கு தேசுடனே கருணைபுரி
நால்வேதப் பொருளோனே நம்பினோர் கைப்பொருளே
வீசுபுகழ் இங்கிலாந் கைவிக்கம் வாசானே
நேசயுச்சி முருகா ஆடீரூஞ்சல்

5 தேன்தங்கித் தித்தித்த அமுதூரித் தெளிந்தங்கு
மன்னிய சீர்மால் மருகன் மாயோனே
பன்னிப் பணிந்தேற்றப் பாவங்கள் அறுப்பவனே
அன்புடனே ஆனந்த மயில்மீதில் ஆடிவா
வண்ணத்தன் எம்மையும் ஆட்கொண்டு அருளிடுவாய்
எம்இறையே ஏகாந்தா எழில்வடிவா ஓடிவா

மண்ணிப் பொலிந்திருந்த மாவேந்தன் தன்புகளே
ஈலிங்தாய்  தனையனே ஆடீரூஞ்சல்

6 ஆணைமுக ன் இளையோனே ஆடீரூஞ்சல்
ஆறுமுக வேலோனே ஆடீரூஞ்சல்
துணைவியர் இருவருடன் ஆடீரூஞ்சல்
பிரமனைச் சிறையிலிட்டாய்  ஆடீரூஞ்சல்
கனைகடலில் அசுரனை அழித்தவனே ஆடீர்
விண்ணோர் ஏத்த ஆடீர் ஆடீர்
வேலணைய நிற்பவனே ஆடீரூஞ்சல்
வேங்கமர மாணவனே ஆடீரூஞ்சல்

7 நீறணிந்த திருமேனி திகழ்ஒளி விளங்க
நாறுமாலை அணிமார்பா பண்டிதா
ஆறங்கம் வேதமுணர் அரிய பாவலர்கள்
தேடி நாடி பாடிப் பரவி
கூடி நின்று பக்தியுடன் பணிசெய்வர்
அமரற்காய் சூரனைக் கூறாகப் பிளந்தனை
அமுதுக்கு அமுதான சுப்பிரமணி யோனே
தேறு விக்கத்தில் தனியுருவாய் நின்றவனே
தனி உச்சி முருகா ஆடீரூஞ்சல்

8 சூர்தடித்த சுடரிடல நெடுவே லாட
ஆறுதிரு முடிநிரையும் ஆட ஆட
கூர்வேற் படையோன் இனிதே  ஆட
இன்பமுறு இமையோரும் ஆட ஆட
சீர்மிகுந்த மயூரமும் சேவலு மசைந்தாட
முனிவர்களும் இரிடிகளும் இன்பமுடன் ஆட
பார்புகளும் கைவிக்கம் குமர குருபரா
அன்புமிகு மங்கையருடன் ஆடீரூஞ்சல்

9. கங்கையணி பரமசிவன் தந்தருள் வடிவேலா
குறைகேட்டிங் அருள்தந்திட வருவாய் மருதமணி
சங்கத்தமிழ் வளர்த்தோர் சங்கத்தின் தலைவாவா
தமிழ்மொழியில் அட்சிக்க அருள்புரிந்த ஈசனே

எங்கும் நிறைந்த தமிழோனே ஏகாந்தா
குருபரனே குகனே குமரா வாவா
அங்கமெல்லாம் புல்லரிக்கும் உனதருள் கேட்க
கைவிக்கம் வேலாநீ ஆடீரூஞ்சல்

10 வளங்கள் தந்தெமை வாழவைத்தாய் சரவணா
நஞ்சுண்ட கண்டத்தர் சுவாமி நாதனே
களங்கம் இலாத வாழ்வளித்தாய் வையகத்தே
வழித்துணையாய் என்றென்றும் வந்திடுவாய் நீயே
பளபளக்கும் அறுமுகமும் பார்த்திருக்கப் பசிதீரும்
தடவரைகள் திருத்தோள்கள் வீரத்திறன் கூறும்
விளங்கு லண்டன்நகர் விக்கத்தில் இன்புற்று
வித்தகமாய் மங்கையரோ ஆடீரூஞ்சல்

## வாழ்த்து

நண்ணுவே தாகம நூல்கள் வாழி
அந்தணரு பெண்டீரும் ஆவினமும் வாழி
எண்ணு திருமுறையும் சாத்திரமும் வாழி
ஓங்குபுகழ் சைவ அடியார்கள் வாழி
கண்ணின்நிறை வள்ளியொடு தெய்வயானையும் வாழி
பண்புமிகு கைவிக்கம் சைவமும் தமிழும் வாழி
வேலினொடு சரவணணார் திருத்தாள் வாழி
உவந்தேற்றும் உச்சி முருகன் வாழி!

## எச்சரிக்கை

மயில்மீது அமர்ந்த தர்மத்தின் தலைவா எச்சரிர்கை
பயில்தொறும் இன்பம்தரும் தழோனே எச்சரிக்கை
குன்றுதொறும் விருப்புடனே குடிகொண்டாய் எச்சரிக்கை
குன்றக்குடி குமரோனே குருதேவா எச்சரிக்கை
கலியுகனே கருணைமிகு கேசவா எச்சரிக்கை
பாடிப்பரவி பணிந்தவர் வினையறுப்பாய் எச்சரிக்கை
கனிந்த உள்ளம் நிறைந்தவனே எச்சரிக்கை
கைவிக்கம் உச்சி முருகா எச்சரிக்கை

## பராக்கு

அழகுநிறை  சரவணத்தில் உதித்தாய் பராக்கு
கன்னியர் அறுவருடன்  வளர்ந்தாய் பராக்கு
நான்மறையின் உட்பொருளே விமலா பராக்கு
குறவர் மடமகள் கோவே பராக்கு
காதலடுக் அருளுவாய் குமரா பராக்கு
குமரமலை வீற்றிருந் றருள்வாய்  பராக்கு
கதிரமலை வாசனே கதிரோனே பராக்கு
உச்சிமுருகா உள்ளம் குளிர்வாய் பராக்கு

## லாலி'

ஆறுமுக வேலோனே லாலி லாலி
பன்னிரு கரத்தோனே லாலி லாலி
கரவறியார் அகக்துறைவீர்  லாலி லாலி
அசுரபடை  அழித்தோனே லாலி லாலி
தேவர் குறைதீர்தாய் லாலி லாலி
குஞ்சரி மணவாளா லாலி லாலி
வள்ளி காந்தா லாலி லாலி
கைவிக்கம் உச்சி முருகா லாலி லாலி

## மங்களம்

ஆனைமுகம் கொண்ட அண்ணலுக்கு மங்களம்
ஐயனுக்கும்     அன்புமிகு அன்னைக்கும் மங்களம்
ஆறுமுக வேலனுக்கு  பத்தியுடன் மங்களம்
ஒண்தொடியார் வள்ளிதெய்வயானையற்கு மங்களம் மங்களம்
மயிலுக்கும் சேவலுக்கும் மங்களம்
முனிவர்க்கும் ஞானியர்க்கும் தேவர்க்கும் மங்களம்
முத்தமிழின் சொற்சுவை கற்றவரக்கு மங்களம்
முருகன் அடியார்க்கும் உத்தமர்க்கும் மங்களம்
காவல்புகழ் வயிரவ சுவாமிக்கு மங்களம்
கைவிக்கம் உச்சி முருகனுக்கு. மங்களம் மங்களம் மங்களம் .

# ஊஞ்சல் பாட்டுகள் - III

ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே அய்யா முருகா ஆடுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுகவே அய்யா முருகா ஆடுகவே ஆடுக

ஆழிப் படுக்கை கொண்டோனின் அருமை மருகா ஆடுகவே
ஊழி தாண்டி நிற்பானின் உத்தமச் செல்வா ஆடுகவே ஆடுக

வாழும் மனிதர் யாவருக்கும் வழிக்குத் துணையாம் வேலவனே
ஆளுங் கவலை ஓடிடவே ஆடுக ஊஞ்சல் ஆடுகவே. ஆடுக

ஆடகப் பொன்னால் ஊஞ்சலிட்டே அதற்கு வயிரக் கயிறுமிட்டு
கூடிடும் அடியார் ஆட்டிடவே குமரா ஊஞ்சல் ஆடுகவே ஆடுக

பாடுகள் குறைந்தே மாந்தரெல்லாம் பண்பால் உயர்ந்தே
வாழ்ந்திடவே
வாடிடும் பயிர்கள் வளம்பெறவே ஆடுக ஊஞ்சல் ஆடுகவே. ஆடுக

முன்னே பின்னே சென்றாலும் முளையில் ஒன்றி நின்றிடுமே
என்னே வாழ்க்கை என்றாலும் எல்லாம் உன்னைச் சுற்றியதே ஆடுக

குன்றாக் குடியாய் எமையாக்கும் குன்றக் குடியின் வடிவேலா
கண்ணே மணியே கதிர்வேலா கவினார் ஊஞ்சல் ஆடுகவே. ஆடுக

விண்ணவர் செல்வி தெய்வானை வேடவர் மகளாம் வள்ளியுடன்
மண்ணகம் சுற்றும் மயிலேறி மகிமைச் சேவற் கொடியாட ஆடுக

கொண்டிடும் காதல் உணர்வோடு கூடிய நெஞ்சத் தூஞ்சலிலே
அன்புடன் ஏறி இனிதமர்ந்தே ஆடுக ஊஞ்சல் ஆடுகவே. ஆடுக.

**ஊஞ்சல் பாட்டுகள் IV {படைப்பு: பேர்ன் - சுவிற்சர்லாந்து சைவநெறிக்கூடம்}**

1) சரவணபவ ஓம் எனும் பிரணவம் விட்டமாக
உனைப்பணி நாதம் லிந்து கால்களாக
மறைகள் நான்கும் கௌமாரக் கயிறாகக்
கந்தக்கடவுள் தோளுக்கு மேல் எந்தக்கடவுளுமில்லைப்பாவெனும்
பாம்பன் சுவாமிகள் வாசகம் ஓழுகிடும் அடியவராம்
ஈழத் தமிழர் நெஞ்சக்கமலம் வைரப்பலகையாக
சுவிஸ் தலைநகர் பேர்ன் மாநிலத்தில்
சைவநெறிக்கூடம் நவரத்தின மண்ப்பீடமாக
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திருஅழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

2) இருபதமும் கிண்கிணிகள் பிரணவத்தால் ரீங்காரமிட
இரைத்திடும் அரிச் சிலம்பு திருப்புகழைப் பாடி நிற்க
இறும் இறு மருங்கு என்று இரங்கு மேகலையும் பொன்
எழுது செம் பட்டு வீக்கும் திரு இடை அம்மையர்
தெய்வானை வள்ளி திரு முளைத் தரள உத்தரீயமும்
மங்கலத் திருநாணும் அழகு ஒழுக எழுந்தருள
அருள் பொழியும் ஞானாம்பிகை உடன் ஞனலிங்கேஸ்வரர் உறை
அரும்பு குறுநகையும் பொழியும் ஞானவடிவேலா
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞான சித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

3) ஒளிந்திடும் கார்த்திகைப் பெண்கள் தீபமாக
முனிவரும் தேவரும் கணங்களும் விதானமாக
அல்ப்ஸ் மலைகள் நற்குறிஞ்சிப் பந்தலாக
வீங்கில வேணித் தென்றல் கவரியாக
ஈரேழு பதினான்கு உலகமும் மணிமஞ்சமாக
சைவத் தமிழ பக்தர்கள் கோசம் போற்றியாக

இச்சா சக்தி ஒடு கிரியா சக்தி வடிவழகு பூத்த சுந்தர வல்லியருடன்
வேலா முருகா ஐயா முருகா திருவேல் முருகா ஆடுக ஊஞ்சல்
ஈனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

4) திகுடதிகு டதிதிகுட தகுட தித குடதிகுட
செக்கண செக்கண என மயில் ஆடிட
சேவற் கொடியோன் முருகா சரணம்
சேவடி காப்பாய் முருகா சரணம்!
விநாயகன் சோதரா முருகா சரணம்
ஓம் சிவ சிவ சிவ முருகா சரணம்
ஓம் சக்தி பாலா துருகா சரணம் என்றே
ஞானலிங்கேஸ்வரர் கூடிடும் அடியவர் ஊஞ்சல் ஆட்டிட
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

5) நெடுநிலவு முகங்கள் ஆறுடன் பன்னிரு தோளுடைப் பெருமானே
சுத்தசித்த சதாசிவத்தை சீடனாய்க்கொண்ட தந்தைசுவாமியை
சுத்தாக தத்ததுடன் தோய்ந்த சச்சிதானந்தசித்தே
முக்திக்கு மூலத்தின் மூலப்பெரும் பொருளே முருகப்பெருமானே
தத்திக் கரை புரளும் சச்சிதானந்தக்கடலே மயிலோனே
முனிவர்கள் சித்தர்கள் நாடும் தொழுநிறைப் பெருமானே
விண்ணவர் செல்வி தெய்வானை வேடர் மகள் வள்ளியுடன்
மண்ணகம் சுற்;ற பச்சை மயிலேறும் சேயோனே
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

6) பலநூல் படித்துக் காலத்தை வீணேகழித்து
படித்ததன் பொருளை உணர்த்திடமுடியா மாயாநிஷையிலும்
கனவிலோ நினைவிலோ உனை ஒருமுறை நினைத்தால்
நித்தம் அருளும் களியுகத் தெய்வமே களியுக வரதா
எத்தனை பிழைகள் எத்தனை குறைகள் எத்தனை இருப்பினும்
அனைத்தும் பொறுத்தும் தமிழரை நீயே காக்கவேண்டும்
தமிழின் தாயும்நீயே தந்தையும் நீயே தந்தைசுவாமிப்பெருமானே
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

7) தேவரைக்காக்க சூரனை வெல்ல போரினைப்புரிந்து
பூதகணத்துடன் களமதை அம்பலமாக்கி கூத்தாடி
கையில் இருந்த குடைதனை திரையதுமாக்கி
கடலிடை ஒளிந்தசூரனைத் தேடிக் கடலிற்குள் சென்று
கடலினை அரங்கமாக்கி அலைகளே திரைகளாக
குடைக்கூத்தும் துடிக்கூத்துமாடிய குமரா கூத்தன்செல்வா
விண்ணவர் சிறைமீட்ட வேலா பிரபாகமாய் நீயே மீளவேண்டும்
ஊர்த்துவக்கூத்தாடி ஈழத்துச்சிறைகள் நீயே மீட்கவேண்டும்
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

8) முத்திதரு மூலத்தி லட்சரமே முருகைய்யா
முதலான சுவாதிட்டான வீடே தேவசேனாதிபதியே
பத்திதரும் பூரகத்தி உருவே குமரா
பாங்கான அநாகதத்தி தெய்வமே கந்தா
சித்திரமாம் விசுத்திதனி உறை ஞானப்பெருளே
சிறந்தவாக் கினைக் கொடுக்கும் வேலே
சத்தியேனு மம்பரத்தி போருளே பாலமுருகா
சார்வாமை பத்தோரட சரங்கா மால்மருகா
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!

உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

9) காதலிளமை தவிர்த்து தமிழ் வாழுமேனமுழங்கி
நோதல் உறும்பல உடலுளம் உலைத்து
ஈதலைச் செய்த தம்மையே தந்தார்
பூவாகிப் பிஞ்சாய் இளையவர் முதியவர் உருகியேநின்றார்
கார்த்திகை பாலா வேலாமுருகா தெய்வானைப்பதியே
கார்த்திகைப் பூக்கள் முனைமுகம் மலர ஈழம் அருளுகவே!
விரிதமிழ் யாப்பை விதித்த ஐயா தமிழா
எம்குறை கேட்டு ஆடுக ஊஞ்சல் ஆடுகவே
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

10) வருந்திய நெஞ்சுடன் வண்டமிழினம் ஏங்கி நிற்குது
சந்நிதி வாசல் உன் விழிபார்த்திருக்கு
மருந்தென இருக்கும் தெய்வம் நீயே முருகா
அருந்தமிழ் ஈழத்தமிழர் நட்டம் பயில உடன்வரவேண்டும்
பொருந்தியெம் நெஞ்சைப் பொருத்திப் பாடுகிறோம்
துன்பம் தகர்க்கும் கண்ணே ஆடுக ஆடியேய்கவேலே
கருணை சாந்தம் எங்கும் நிலவவேண்டும் நீ அருளவேண்டும்
எங்கள் முருகனை ஆதியும் அந்தமும் இல்லா பிரம்மமே
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

11) நக்கீரர் அருணகிரி முதல் எண்ணிறந்தோற்கருளிய மறைபாதா
நாடும் அடியவர் வல்வினை தீர்க்கும் ஞானவேலே
தெய்வங்கள் எல்லாம் தேடித்தரிசிக்கும் ஏகாந்தநாதா
காளிமனோகரி சூலி அள்ளி முத்திடும் அருட்பொருங்கடலே
நாடோம் பொய்யுலகை நாட்டினோம் பொய்கைச்செல்வனை
ஏக்கம் விட்டோம் ஏகாந்தம் நீயப்பா

தூக்கம் விட்டோம் துள்ளுமயில் குமரனே
வேதமாய் விளங்கும் மெய்மை நீயே
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

12) கூடுகின்ற சைவநெறிக்கூடத்தில் ஆடுகின்ற வேலவா
ஆடுகின்ற செவ்வேள் உந்தன் அடிக்கே ஆளானோம்
பாடுகின்ற பாவெல்லாம் திருப்புகழாய் ஒலிக்குதப்பா
ஓடுகின்ற மனம் ஒடுங்கி வேல்மீது நிற்குதப்பா
நீடுகின்ற இன்பம் முருகா ஓம் முருகாவென்றெலிக்குதப்பா
சரண் புகுந்தோம் ஞானலிங்கப்பெருமான் மகவே உன்பதம்
ஆளானோம் வேலுக்கும் மயிலுக்கும் மீளாது
எமையாளும் அயலகடல்வாய்மருகா கௌமாரக்கடலே முருகா
ஆனந்த ஞானமாகடல் குடைந்து குழை சச்சிதானந்த ஞானசித்தனே
ஞானவேலா அரிமால் மருகா முருகா பொன்னூஞ்சல் ஆடியருளே!
உன் திரு அழகினுக்கு ஒத்த கொடிகள் தெய்வானை வள்ளி
அம்மையாருடன் பொன்னூஞ்சல் ஆடியருளே!

“கந்தனருள்பெற சைவநெறிக்கூடம் அடைந்தால் பிணிகள் நீங்கும்
உச்சிமுருகன் முன்றலில் முன்னை வினைகள் மூழ்கிக் கரையும்
பாவம் பொடிபடும் வல்வினை அறும் எச்சாபமும் எடுபடாதுபோகும்
எண்ணியதெல்லாம் கைகூடும் தெய்வானை வள்ளி அருட்பதமே”

இன்று பொன்னூஞ்சல் ஆடக்கண்ட அனைவற்கும்
நான்மறை நூலினுள் ஆர்த்து விளங்கும் ஞானப்பொருள்
விநாயகப்பெருமான் ஞானாம்பிகையுறை ஞானலிங்கப்பெருமான்
பிரம்மா சரஸ்வதி திருமால் இலக்குமி
பொன்னார் தெய்வம் கரிகரசுதன் ஆனந்த சித்தன்
பைரவர் காளியோடு மாருதிமைந்தன் ஒன்பதுகிரகமும்
அட்டதிக்கு பாலகர் முப்பத்துமுக்கோடி தேவரும் முனிவரும்
ஞானியர் யோகரும் சித்தரும் கணங்களும்
ஞானம் வேண்டின் ஞானம் அருள்வாய்
வெற்றி வேண்டின் நிறை வெற்றியளிப்பார்

வேண்டுவன அனைத்தும் அளித்து திருநிறைமிகு அருள்வார்.
கரிமுகத்துக் களிறு உச்சிப பிள்ளையார் பெருமான் உனக்கு
மங்களம் சுபமங்களம்!
செருக்கும் மயக்கமுமற்றோனே அழகிய உச்சி முருகா உனக்கு
மங்களம் சுபமங்களம்!
ஞானாம்பிகைமனம் கவர்வோனே, தமிழரைக் காப்போனே, உனக்கு
மங்களம் சுபமங்களம்!
வேண்டுதலையேற்று எம்மையாண்டுகொண்ட பொன்ஐயப்பா
உனக்கு மங்களம் சுபமங்களம்!
மங்களம் சுபமங்களம் திருத்தொண்டர் அனைவருக்கும் சுபமங்களம்
நால்வர் தம் பாதம்தனில் மங்களம் சுபமங்களம்
மங்களம் சுபமங்களம்!

# திருவாசகம் சிவபுராணம்

தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

(மாணிக்கவாசகர்)

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணி தன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன், அநேகன், இறைவன், அடி வாழ்க!

வேகம் கெடுத்து ஆண்ட வேந்தன் அடி வெல்க!
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய் கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன் தன் பூம் கழல்கள் வெல்க!
கரம் குவிவார் உள் மகிழும் கோன் கழல்கள் வெல்க!
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!

ஈசன் அடி போற்றி! எந்தை அடி போற்றி!
தேசன் அடி போற்றி! சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி!
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி!
சீர் ஆர் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி!

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!
சிவன், அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்,
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி,
சிந்தை மகிழ, சிவபுராணம் தன்னை,
முந்தை வினை முழுதும் மோய உரைப்பன் யான்:

கண்ணுதலான், தன் கருணைக் கண் காட்ட, வந்து எய்தி,
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர் கழல் இறைஞ்சி;
விண் நிறைந்து, மண் நிறைந்து, மிக்காய், விளங்கு ஒளியாய்!
எண் இறந்து, எல்லை இலாதானே! நின் பெரும் சீர்,
பொல்லா வினையேன், புகழும் ஆறு ஒன்று அறியேன்;

புல்லாகி, பூடாய், புழுவாய், மரமாகி,
பல் விருகமாகி, பறவையாய், பாம்பாகி,
கல்லாய் மனிதராய், பேயாய், கணங்களாய்,
வல்லசுரராகி, முனிவராய், தேவராய்,
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்,

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்; எம்பெருமான்!
மெய்யே, உன் பொன் அடிகள் கண்டு, இன்று வீடு உற்றேன்;
உய்ய, என் உள்ளத்துள், ஓங்காரம் ஆய் நின்ற
மெய்யா! விமலா! விடைப் பாகா! வேதங்கள்
ஐயா என, ஓங்கி, ஆழ்ந்து, அகன்ற, நுண்ணியனே!

வெய்யாய்! தணியாய்! இயமானன் ஆம் விமலா!
பொய் ஆயின எல்லாம் போய் அகல, வந்தருளி,
மெய்ஞ்ஞானம் ஆகி, மிளிர்கின்ற மெய்ச் சுடரே!
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே!
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே!

ஆக்கம், அளவு, இறுதி, இல்லாய்! அனைத்து உலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள் தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்;
நாற்றத்தின் நேரியாய்! சேயாய்! நணியானே!
மாற்றம், மனம், கழிய நின்ற மறையோனே!

கறந்த பால், கன்னலொடு, நெய் கலந்தால் போலச்
சிறந்து, அடியார் சிந்தனையுள் தேன் ஊறிநின்று,
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்!
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய்! விண்ணோர்கள் ஏத்த
மறைந்து இருந்தாய், எம்பெருமான்! வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை,
அறம், பாவம், என்னும் அரும் கயிற்றால் கட்டி,
புறம் தோல் போர்த்து, எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்க, புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா! உனக்குக்
கலந்த அன்பு ஆகி, கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி,
நிலம் தன் மேல் வந்தருளி, நீள் கழல்கள் காட்டி,
நாயின் கடையாய்க் கிடந்த அடியேற்கு,

தாயின் சிறந்த தயா ஆன தத்துவனே!
மாசு அற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே! தேன் ஆர் அமுதே! சிவபுரனே!
பாசம் ஆம் பற்று அறுத்து, பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து, நெஞ்சில் வஞ்சம் கெட,

பேராது நின்ற பெரும் கருணைப் பேர் ஆறே!
ஆரா அமுதே! அளவு இலாப் பெம்மானே!
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே!
நீராய் உருக்கி, என் ஆர் உயிர் ஆய் நின்றானே!
இன்பமும் துன்பமும் இல்லானே! உள்ளானே!

அன்பருக்கு அன்பனே! யாவையும் ஆய், அல்லையும் ஆம்
சோதியனே! துன் இருளே! தோன்றாப் பெருமையனே!
ஆதியனே! அந்தம், நடு, ஆகி, அல்லானே!
ஈர்த்து என்னை, ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம் கருத்தின்

நோக்கு அரிய நோக்கே! நுணுக்கு அரிய நுண் உணர்வே!
போக்கும், வரவும், புணர்வும், இலாப் புண்ணியனே!
காக்கும் எம் காவலனே! காண்பு அரிய பேர் ஒளியே!
ஆற்று இன்ப வெள்ளமே! அத்தா! மிக்காய்! நின்ற
தோற்றச் சுடர் ஒளி ஆய், சொல்லாத நுண் உணர்வு ஆய்,

மாற்றம் ஆம் வையகத்தின் வெள;வேறே வந்து, அறிவு ஆம்
தேற்றனே! தேற்றத் தெளிவே! என் சிந்தனையுள்
ஊற்று ஆன உண் ஆர் அமுதே! உடையானே!
வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா, அரனே! ஓ! என்று என்று

போற்றி, புகழ்ந்திருந்து, பொய் கெட்டு, மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து, வினைப் பிறவி சாராமே,
கள்ளப் புலக் குரம்பை கட்டழிக்க வல்லானே!
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே!
தில்லையுள் கூத்தனே! தென்பாண்டி நாட்டானே!

அல்லல் பிறவி அறுப்பானே! ஓ!' என்று,
சொல்லற்கு அரியானைச் சொல்லி, திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக் கீழ்,
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

----XXX---

# திருவிசைப்பா

1) ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே சித்தத்துள் தித்திக்கும் தேனே அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே அம்பலம் ஆடரங் காக வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத் தொண்டனேன் விளம்புமா விளம்பே. (திருமாளிகைத்தேவர்)

2) கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை கரையிலாக் கருணை மா கடலை மற்றவர் அறியா மாணிக்க மலையை மதிப்பவர் மனமணி விளக்கைச் செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத் திருவீழிமிழலையில் வீற்றிருந்த கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம் குளிர என் கண்கள் குளிர்ந்தனவே.

3) நீறணி பவளக் குன்றமே நின்ற நெற்றிக் கண்ணுடையதோர் நெருப்பே வேறணிபுவன போகமே யோக வெள்ளமே மேருவில் வீரா ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா அம்பொன் செயம் பலத்தரசே ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத் தொண்டனே னிசையுமா றிசையே.

4) இடர்கெடுத்(து) என்னை ஆண்டுகொண்(டு) என்னுள்
இருட்பிழம்(பு) அறஎறிந்(து) எழுந்த
சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுள் சோதீ !
அடல்விடைப் பாகா ! அம்பலக் கூத்தா !
அயனொடு மாலறி யாமைப்
படரொளிப் பரப்பிப் பரந்துநின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

5) பெருமையிற் சிறுமை பெண்ணொடுஆ ணாய்என்
பிறப்புஇறப்பு அறுத்தபே ரொளியே !
கருமையின் வெளியே கயற்கணாள் இமவான்
மகள்உமை யவள்களை கண்ணே !
அருமையின் மறைநான் கோலமிட் டாற்றும்
அப்பனே அம்பலத்து அமுதே
ஒருமையிற் பலபுக்கு உருவிநின் றாயைத்
தொண்டனேன் உரைக்குமாறு உரையே.

# திருப்பல்லாண்டு

1) பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப் பாலித்த
நட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

2) சீரும் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிகீழ்
ஆரம் பெறாத அறிவு பெற்றேன் பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகும் கழற உழறி உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

3) மிண்டு மணத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி ஈசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள் அளவில்லதோர் ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே பல்லாண்டு கூறுதுமே.

4) மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

5) எந்தை எந்தாய் சுற்றம் முற்றும்
எமக்கு அமுதாம் எம்பிரான் என்றென்று
சிந்தை செய்யும் சிவன்சீர்
அடியார் அடிநாய் செப்புறை
அந்தமில் ஆனந்தச் சேந்தன்
எனைப்புகுந் தாண்டுகொண் டாருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவனே
என்று பல்லாண்டு கூறுதுமே

# திருப்புராணம்

1) மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி.

2) கற்பனைக் கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம் நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

3) உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

4) இறவாத இன்ப அன்பு
    வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
    பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
    வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
    அடியின்கீழ் இருக்க என்றார்.

5) திரிபுரம் எரித்தவாறும்
தேர்மிசை நின்றவாறம்
கரியினை உரித்தவாறும்
காமனைக் காய்ந்தவாறும்
அரிஅயற்கு அரியவாறும்
அடியவர்க்கு எளியவாறும்
பிரிவினர் பாடக் கேட்டுப்
பரமனார் அருளினாலே.

# திருப்புகழ்

1) ஆறிரு தடந்தோள் வாழ்க ஆறுமுகம் வாழ்க – வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க – செவ்வேள்
ஏறிய மஞ்ஞை வாழ்க யானை தன் அணங்கு – வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் - எல்லாம்

2) இறவாமல் பிறவாமல் எனையாசற் குருவாகிப்
பிறவாகித் திறமான பெரு வாழ்வை தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையேனே கதிர்காமப் பெருமாளே.

3) உம்பர் தரு தேநு மணி கசிவாகி ஒண் கடலில் தேனமுதத்து உணர்வூறி
இன்ப ரசத்தே பருகி பலகாலும் என்றன் உயிர்க்கு ஆதரவுற்று
அருள்வாயே தம்பிதனக்காக வனத்து அணைவோனே தந்தை
வலத்தால் அருள் கை கனியோனே அன்பர்தமக்கான நிலை
பொருளோனே ஐந்து கரத்து ஆனைமுக பெருமாளே.

4) ஏறுமயி லேறி விளையாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முக மொன்றே
ஆறுமுகம் ஆன பொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

5) தண்டை அணி வெண்டையம் கிண்கிணி சதங்கையும் தண்
சிலம்புடன் கொஞ்சவே நின் தந்தையினை முன்பரிந்து இன்
பவுரிகொண்டு நல் சந்தொடம் அணைந்து நின்ற அன்பு
போலகண்டுற கடம்புடன் சந்த மகுடங்களும் கஞ்ச மலர் செம்
கையும் சிந்து வேலும் கண்களும் முகங்களும் சந்திர நிறங்களும்
கண் குளிர என்தன் முன் சந்தியாவோ
புண்டரிகர் அண்டமும் கொண்ட பகிரண்டமும் பொங்கி எழ வெம்
களம் கொண்டபோது பொன் கிரி என சிறந்து எங்கினும் வளர்ந்து
முன் புண்டரிகர் தந்தையும் சிந்தை கூர கொண்ட நடனம் பதம்

செந்திலிலும் என்தன் முன் கொஞ்சி நடனம் கொளும் கந்த வேளே கொங்கை குற மங்கையின் சந்த மணம் உண்டிடும் கும்ப முநி கும்பிடும் தம்பிரானே.

6) அவனிதனிலே பிறந்து மதலை எனவே தவழ்ந்து அழகு பெறவே நடந்து இளைஞோனாய் அரு மழலையே மிகுந்து குதலை மொழியே புகன்று அதிவிதமதாய் வளர்ந்து பதினாறாய் சிவ கலைகள் ஆகமங்கள் மிகவு மறை ஓதும் அன்பர் திருவடிகளே நினைந்து துதியாமல் தெரிவையர்கள் ஆசை மிஞ்சி வெகு கவலையாய் உழன்று திரியும் அடியேனை உன்றன் அடி சேராய்மவுன உபதேச சம்பு மதி அறுகு வேணி தும்பை மணி முடியின் மீது அணிந்த மக தேவர் மனம் மகிழவே அணைந்து ஒரு புறமதாக வந்த மலைமகள் குமார துங்க வடி வேலா பவனி வரவே உகந்து மயிலின் மிசையே திகழ்ந்து படி அதிரவே நடந்த கழல் வீரா
பரம பதமே செறிந்த முருகன் எனவே உகந்து பழநி மலை மேல் அமர்ந்த பெருமாளே.

7) ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் என்று பூதி ஆகம் அணி மாதவர்கள் பாத மலர் சூடும் அடியார்கள் பதமே துணை அது என்று நாளும் ஏறு மயில்வாகன குகா சரவணா எனது ஈச என் மானம் உனது என்றும் ஓதும் ஏழைகள் வியாகுலம் இதே என வினாவில் உனை ஏவர் புகழ்வார் மறையும் என் சொலாதோ நீறு படு மாழை பொரு மேனியவ வேல அணி நீல மயில்வாக உமை தந்த வேளே நீசர்கள்தமோடு எனது தீ வினை எலாம் மடிய நீடு தனி வேல் விடும் மடங்கல் வேலா சீறி வரும் மாறு அவுணன் ஆவி உணும் ஆனை முக தேவர் துணைவா சிகிரி அண்டர் கூடம் சேரும் அழகு ஆர் பழநி வாழ் குமரனே பிரம தேவர் வரதா முருக தம்பிரானே.

8) நாத விந்து கலை ஆதி நமோ நம வேத மந்த்ர சொரூபா நமோ நம ஞான பண்டித ஸாமி நமோ நம வெகு கோடி நாம சம்பு குமாரா நமோ நம போக அந்தரி பாலா நமோ நம நாக பந்த மயூரா நமோ நம பர சூரர் சேத தண்ட விநோதா நமோ நம கீத கிண்கிணி பாதா நமோ நம தீர சம்ப்ரம வீரா நமோ நம கிரி ராஜ தீப மங்கள ஜோதி நமோ நம தூய அம்பல லீலா நமோ நம தேவ குஞ்சரி பாகா நமோ நம அருள்தாராய் ஈதலும் பல கோலால பூஜையும் ஓதலும் குண ஆசார நீதியும்

ஈரமும் குரு சீர் பாத சேவையும் மறவாத ஏழ் தலம் புகழ் காவேரியால் விளை சோழ மண்டலம் மீதே மநோகர ராஜ கெம்பிர நாடாளு நாயக வயலூரா ஆதரம் பயில் ஆரூரர் தோழமை சேர்தல் கொண்டு அவரோடே முன் நாளினில் ஆடல் வெம் பரி மீது ஏறி மா கயிலையில் ஏகி ஆதி அந்த உலா ஆசு பாடிய சேரர் கொங்குவை காவூர் நல் நாடு அதில் ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் பெருமாளே.

9) சிவனார் மனம் குளிர உபதேச மந்த்ரம் இரு செவி மீதிலும் பகர் செய் குருநாத சிவகாமசுந்தரி தன் வர பால கந்த நின செயலே விரும்பி உளம் நினையாமல் அவ மாயை கொண்டு உலகில் விருதா அலைந்து உழலும் அடியேனை அஞ்சல் என வரவேணும் அறிவு ஆகமும் பெருக இடரானதும் தொலைய அருள் ஞான இன்பம் அது புரிவாயே நவநீதமும் திருடி உரலோடு ஒன்றும் அரி ரகுராமர் சிந்தை மகிழ் மருகோனே நவலோகமும் கை தொழ நிச தேவ அலங்கிருத நலமான விஞ்சை கரு விளை கோவே தெவயானை அம் குற மின் மணவாள சம்ப்ரமுறு திறல் வீர மிஞ்சு கதிர் வடி வேலா திருவாவினன்குடியில் வரு வேள் சவுந்தரிக செக மேல் மெய் கண்ட விறல் பெருமாளே.

10) இருமல் உரோகம் முயலகன் வாதம் எரி குண நாசி விடமே நீரிழிவு விடாத தலைவலி சோகை எழு களம் மாலை இவையோடே பெரு வயிறு ஈளை எரி குலை சூலை பெரு வலி வேறும் உள நோய்கள் பிறவிகள்தோறும் எனை நலியாதபடி உன தாள்கள் அருள்வாயே வரும் ஒரு கோடி அசுரர் பதாதி மடிய அநேக இசை பாடி வரும் ஒரு கால வயிரவர் ஆட வடி சுடர் வேலை விடுவோனே தரு நிழல் மீதில் உறை முகில் ஊர்தி தரு திரு மாதின் மணவாளா சலம் இடை பூவின் நடுவினில் வீறு தணிமலை மேவும் பெருமாளே.

11) பாதி மதி நதி போதும் அணி சடை நாதர் அருளிய குமரேசா பாகு கனி மொழி மாது குறமகள் பாதம் வருடிய மணவாளா காதும் ஒரு விழி காகம் உற அருள் மாயன் அரி திரு மருகோனே காலன் எனை அணுகாமல் உனது இரு காலில் வழி பட அருள்வாயே ஆதி அயனொடு தேவர் சுரர் உலகு ஆளும் வகையுறு சிறை மீளா ஆடும் மயிலினில் ஏறி அமரர்கள் சூழ வர வரும் இளையோனே

சூதம் மிக வளர் சோலை மருவு சுவாமிமலைதனில் உறைவோனே சூரன் உடல் அற வாரி சுவறிட வேலை விட வல பெருமாளே.

12) எனக்கு என யாவும் படைத்திட நாளும் இளைப்பொடு காலம்தனில் ஓயா எடுத்திடு காயம்தனை கொடு மாயும் இலச்சை இலாது என் பவம் ஆற உனை பல நாளும் திருப்புகழாலும் உரைத்திடுவார் தங்கு உளி மேவி உணர்த்திய போதம்தனை பிரியாது ஒண் பொல சரண் நானும் தொழுவேனோ வினை திறமோடு அன்று எதிர்த்திடும் வீரன் விழ கொடு வேள் கொன்றவன் நீயே விளப்பு என மேல் என்று இடக்கு அயனாரும் விருப்புற வேதம் புகல்வோனே சினத்தொடு சூரன்தனை கொடு வேலின் சிரத்தினை மாறும் முருகோனே தினை புன மேவும் குறக்கொடியோடும் திருத்தணி மேவும் பெருமாளே.

13) இருவினை அஞ்ச மல வகை மங்க இருள் பிணி மங்க மயில் ஏறி இன அருள் அன்பு மொழிய கடம்புவின் அதகமும் கொடு அளி பாட கரி முகன் எம்பி முருகன் என அண்டர் களி மலர் சிந்த அடியேன் முன் கருணை பொழிந்து முகமும் மலர்ந்து கடுகி நடம் கொடு அருள்வாயே திரிபுரம் மங்க மதன் உடல் மங்க திகழ் நகை கொண்ட விடை ஏறி சிவம் வெளி அங்கண் அருள் குடி கொண்டு திகழ நடம் செய்து எமை ஈண அரசி இடம் கொள் மழுவுடை எந்தை அமலன் மகிழ்ந்த குருநாதா
அருணை விலங்கல் மகிழ் குற மங்கை அமளி நலம் கொள் பெருமாளே.

14) பத்தியால் யான் உனை பலகாலும் பற்றியே மா திரு புகழ் பாடி முத்தன் ஆமாறு எனை பெருவாழ்வின் முத்தியே சேர்வதற்கு அருள்வாயே உத்தமா தான சற்குணர் நேயா ஒப்பிலா மா மணி கிரி வாசா வித்தகா ஞான சத்திநி பாதா வெற்றி வேலாயுத பெருமாளே.

15) திருமகள் உலாவும் இரு புய முராரி திரு மருக நாம பெருமாள் காண் செக தலமும் வானும் மிகுதி பெறு பாடல் தெரிதரு குமார பெருமாள் காண் மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகத மயூர பெருமாள் காண் மணி தரளம் வீசி அணி அருவி சூழ மருவு கதிர்காம பெருமாள் காண் அரு வரைகள் நீறுபட அசுரர் மாள அமர் பொருத வீர பெருமாள் காண் அரவு பிறை வாரி விரவு சடை வேணி அமலர் குருநாத பெருமாள் காண் இருவினை இலாத தருவினை

விடாத இமையவர் குல ஈச பெருமாள் காண் இலகு சிலை வேடர்
கொடியின் அதி பார இரு தன விநோத பெருமாளே.

16) கைத்தல நிறைகனி யப்பமொ டவல்பொரி கப்பிய கரிமுக
னடிபேணிக் கற்றிடு மடியவர் புத்தியிலுறைபவர் கற்பக எனவினை
கடிதேகும்மத்தமும் மதியமும் வைத்திடு மரமகன் மற்பொரு
திரள்புய மத யானைமத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே முத்தமிழ டைவினை முற்படு
கிரிதனில் முற்பட எழுதிய முதல்வோனே முப்புர மெரி செய்த
அச்சிவ னுறைரதம் அச்சது பொதுசெய்த அதிதீரா அத்துய ரதுகொடு
சுப்பிர மணிபடும் அப்புன மதனிடை யிபமாகி அக்குற மகளுட
னச்சிறு முருகனை அக்கண மணமருள் பெருமாளே.

**வாழ்த்து**

ஆறிரு தடந்தோள் வாழ்க
ஆறுமுகம் வாழ்க – வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க
குக்குடம் வாழ்க – செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க
யானைதன் அணங்கு வாழ்க
மாறில்லா வள்ளி வாழ்க
வாழ்க சீர் அடியார் எல்லாம்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான் மறை அரங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.
(அருணகிரிநாதர்)

## மங்களம்

## வாழ்த்தொலி

1. தென்னாடுடைய சிவனே போற்றி! - எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
2. ஏகம்பத்துறை எந்தாய் போற்றி! - பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி!
3. குவளைக் கண்ணி கூறன் காண்க! -அவளுந் தானும் உடனே காண்க!
4.இன்பமே சூழ்க - எல்லோரும் வாழ்க

உச்சி முருகனுக்கு அரோகரா
வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா
கைய்விக்கம் முருகனுக்கு அரோகரா

சைவ சமய மரபில் திருநீறு (விபூதி) அணியும்போது மந்திரங்களை உச்சரிப்பது மிகவும் சிறப்பானது. குறிப்பாக 'சரவணபவ' என்னும் ஆறெழுத்து மந்திரத்தைக் கூறி திருநீறு அணிவதன் பின்னணியில் ஆழமான ஆன்மீக மற்றும் தத்துவக் காரணங்கள் உள்ளன.
அதற்கான முக்கிய காரணங்கள் இதோ:

**1. முருகப்பெருமானின் திருவருள்**
'சரவணபவ' என்பது தமிழ் கடவுளான முருகப்பெருமானுக்குரிய பெரு மந்திரம். திருநீறு என்பது சிவபெருமானின் அம்சம். சிவனின் நெற்றிக்கண்ணில் இருந்து உருவான ஆறு பொறிகளே முருகனாக அவதரித்தன. எனவேஇ திருநீறு அணியும்போது இந்த மந்திரத்தைச் சொல்வதுஇ சிவனையும் முருகனையும் இணைத்து வழிபடுவதற்குச் சமம்.

**2. ஆறெழுத்து மந்திரத்தின் சக்தி**
'சரவணபவ' என்ற சொல்லில் உள்ள ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரு தனித்துவமான ஆற்றல் உண்டு:
ச - மங்களம் (செல்வம் அளித்தல்)
ர - ஒளி (அஞ்ஞானம் நீக்குதல்)
வ - அமிர்தம் (நிம்மதி அளித்தல்)
ண - பகை வெல்லுதல் (எதிர்ப்புகளை நீக்குதல்)
ப - வினை நீக்கம் (பாவங்களைப் போக்குதல்)
வ - சௌபாக்கியம் (முழுமை பெறுதல்)
இந்த ஆறெழுத்துகளும் நம் உடலில் உள்ள ஆறு ஆதாரச் சக்கரங்களை (Mooladhara to Ajna) தூண்டி, நேர்மறை ஆற்றலை வழங்குவதாக நம்பப்படுகிறது.

3. மன ஒருமைப்பாடு
திருநீற்றை நெற்றியில் (ஆக்ஞா சக்கரம் எனப்படும் புருவ மத்தியில்) அணியும்போதுஇ இந்த மந்திரத்தைச் சொல்வதன் மூலம் நம் மனம் ஒருநிலைப்படுகிறது. இது தேவையற்ற பயம், பதற்றம் மற்றும் தீய எண்ணங்களை நீக்கிஇ மனத்தெளிவைத் தரும்.

| நட்சத்திரம் | | | விண்மீன் | |
|---|---|---|---|---|
| 1. | அசுபதி | Asupathi | புரவி | Puravi |
| 2. | பரணி | Bharani | அடுப்பு | Aṭuppu |
| 3. | கார்த்திகை | Karthikai | ஆரல் | Āral |
| 4. | ரோகிணி | Rohini | சகடு | Cakaṭu |
| 5. | மிருகசீரிடம் | Mrikasiridam | மான்றலை | Māṉṟalai |
| 6. | திருவாதிரை | Thiruvadhirai | மூதிரை | Mūtirai |
| 7. | புனர்பூசம் | Punaraphusam | கழை | Kaḻai |
| 8. | பூசம் | Pusam | கொடிறு | Koṭiṟu |
| 9. | ஆயில்யம் | Āyilyam | அரவு | Aravu |
| 10. | மகம் | Makam | கொடுநுகம் | Koṭunukam |
| 11. | பூரம் | Pooram | கணை | Kaṇai |
| 12. | உத்திரம் | Uttram | உத்தரம் | Uttaram |
| 13. | அத்தம் | Astam | கை | Kai |
| 14. | சித்திரை | Cittirai | அனுபை | Aṉupai |
| 15. | சுவாதி | Swati | விளக்கு | Viḷakku |
| 16. | விசாகம் | Vicākam | முறம் | Muṟam |
| 17. | அனுஷம் | Aṉuṣam | பனை | Paṉai |
| 18. | கேட்டை | Kēṭṭai | துலங்கொலி | Tulaṅkoli |
| 19. | மூலம் | Mūlam | குருகு | Kuruku |
| 20. | பூராடம் | Pūrāṭam | முற்குலம் | Muṟkulam |
| 21. | உத்திராடம் | Uttirāṭam | கடைக்குலம் | Kaṭaikkulam |
| 22. | திருவோணம் | Tiruvōṇam | முக்கோல் | Mukkōl |
| 23. | அவிட்டம் | Aviṭṭam | காக்கை | Kākkai |
| 24. | சதயம் | Catayam | செக்கு | Cekku |
| 25. | பூரட்டாதி | Pūraṭṭāti | நாழி | Nāḻi |
| 26. | உத்திரட்டாதி | Uttiraṭṭāti | முரசு | Muracu |
| 27. | ரேவதி | Rēvati | தோணி | Thōṇi |

தமிழ் மாதம்

1. சித்திரை - மேழம் 2. வைகாசி - விடை 3. ஆனி - ஆடவை
4. ஆடி - கடகம் 5. ஆவணி - மடங்கல் 6. புரட்டாசி - கன்னி
7. ஐப்பசி - துலை 8. கார்த்திகை - நளி 9. மார்கழி - சிலை
10. தை - சுறவம் 11. மாசி - கும்பம் 12. பங்குனி - மீனம்

**எண் வடிவங்கள்**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ௧ | ௨ | ௩ | ௪ | ௫ | ௬ | ௭ | ௮ | ௯ | ௰ |

எண்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ௧ = 1 | ௨ = 2 | ௩ = 3 | ௪ = 4 | ௫ = 5 |
| ௬ = 6 | ௭ = 7 | ௮ = 8 | ௯ = 9 | ௰ = 10 |
| ௰௧ = 11 | ௰௨ = 12 | ௰௩ = 13 | ௰௪ = 14 | ௰௫ = 15 |
| ௰௬= 16 | ௰௭ = 17 | ௰௮ = 18 | ௰௯ = 19 | ௨௰ = 20 |
| ௨௰௧=21 | ௨௰௨=22 | ௨௰௩= 23 | ௨௰௪= 24 | ௨௰௫= 25 |
| ௨௰௬=26 | ௨௰௭= 27 | ௨௰௮= 28 | ௨௰௯=29 | ௩௰ = 30 |
| ௩௰௧= 31 | ௩௰௨ = 32 | ௩௰௩ = 33 | ௩௰௪ = 34 | ௩௰௫ = 35 |
| ௩௰௬=36 | ௩௰௭ = 37 | ௩௰௮ = 38 | ௩௰௯ = 39 | ௪௰ = 40 |
| ௪௰௧= 41 | ௪௰௨ = 42 | ௪௰௩ = 43 | ௪௰௪ = 44 | ௪௰௫ = 45 |
| ௪௰௬= 46 | ௪௰௭ = 47 | ௰௮ = 48 | ௪௰௯ = 49 | ௫௰ = 50 |
| ௫௰௧= 51 | ௫௰௨ = 52 | ௫௰௩ = 53 | ௫௰௪ = 54 | ௫௰௫ = 55 |
| ௫௰௬=56 | ௫௰௭ = 57 | ௫௰௮ = 58 | ௫௰௯ = 59 | ௬௰ = 60 |

# இலங்கை நாட்டை காக்க வேண்டி உச்சிமுருகன் கோயிலில் வழிபாடு

உச்சிமுருகா கைவிக்கம் உச்சிமுருகா
உச்சிமுருகா கைவிக்கம் உச்சிமுருகா
உன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி உள்ளோம்

உச்சிமுருகா கைவிக்கம் உச்சிமுருகா
உன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி உள்ளோம்.

எம் இலங்கை நாட்டை காக்க வேண்டி
நாங்கள் அனைவரும் இங்கு வளிபாட்டை செய்கின்றோம்
எம் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் முருகையா
எம் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் முருகையா

உச்சிமுருகா கைவிக்கம் உச்சிமுருகா
உன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி உள்ளோம்
எங்கள் தாய் நாட்டில் மழை வெள்ளம்
மக்கள் படும் துன்பம் பார்க்க முடியல
எங்கள் தாய் நாட்டில் மழை வெள்ளம்
மக்கள் படும் துன்பம் பார்க்க முடியல

கந்தன் கருணையால் மழை நீர் பெற்றல் வேண்டும்
வேலன் புதுமையால் ஈழம் செழிப்புற வேண்டும்
முருகன் திருவடியை நாம் வணங்குகின்றோம்
எங்கள் இலங்கை நாட்டை காத்திட வேண்டும்
முருகன் திருவடியை நாம் வணங்குகின்றோம்
எங்கள் இலங்கை நாட்டை காத்திட வேண்டும்
உச்சிமுருகா எங்கள் உச்சிமுருகா
உன் சன்னதியிலே நாங்கள் பஜனை செய்கின்றோம்
எங்கள் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா
எங்கள் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா

உச்சிமுருகா கைவீக்கம் உச்சிமுருகா
உன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி உள்ளோம்
ஆறுபடை கொண்ட வேல் முருகா

அனர்த்தங்கள் யாவற்றையும் தடுத்திட வேண்டும்
ஆறுபடை கொண்ட வேல் முருகா
அனர்த்தங்கள் யாவற்றையும் தடுத்திட வேண்டும்

நல்லூர் கந்தனே நலம் அருளிட வேண்டும்
கதிர்காம முருகனே நீ எம் மக்களை காத்திட வேண்டும்
சந்நிதியில் கோயில் கொண்ட சங்கரன் மகனே
எங்கள் இலங்கை நாட்டை காத்திட வேண்டும்
சந்நிதியில் கோயில் கொண்ட சங்கரன் மகனே
எங்கள் இலங்கை நாட்டை காத்திட வேண்டும்

உச்சிமுருகா எங்கள் உச்சிமுருகா
உன் சன்னதியிலே நாங்கள் பஜனை செய்கின்றோம்
உச்சிமுருகா எங்கள் உச்சிமுருகா
உன் சன்னதியிலே நாங்கள் பஜனை செய்கின்றோம்
எங்கள் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா
எங்கள் ஈழ நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா

உச்சிமுருகா கைவீக்கம் உச்சிமுருகா
உன் சன்னதியில் நாம் அனைவரும் ஒன்றுகூடி உள்ளோம்
எம் இலங்கை நாட்டை காக்க வேண்டி
நாங்கள் அனைவரும் இங்கு பஜனை செய்கின்றோம்
எம் ஈழ நாட்டை காத்தருள வேண்டும் முருகையா
எம் இலங்கை நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா
எம் ஈழ நாட்டை காத்தருள வேண்டும் சண்முகா.

1



முருகுதிரு. சின்னத்துரை சிறீரஞ்சன் ஐயாவின் 70 அகவை (23-08-55) நிறைவு பவளவிழாவை முன்னிட்டு
சிறீரஞ்சன் குடும்பத்தின் சார்பாக திரு லக்ஸ்மன் சிறீரஞ்சன் மற்றும் தேவசிறீ சிறீரஞ்சன்
உச்சி முருகன் கோயிலுக்கு அன்பளிப்பாக கொடுத்தது.

On the occasion of the 70th Birthday (23/08/55) Coral Call Festival of Muruguthiru Sinnathurai Sriranjan Aiya, Mr. Luxman Sriranjan and Devashiri Sriranjan donated the prayer books to the Uchi Murugan Koyil on behalf of the Sriranjan family.



